# வெள்ளி விழா மலர்







கொழும்பு ஸ்ருடியோ.

…மம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
சுன்னாகம்.

# வெள்ளிவிழா மலர்

9 127

வெளியீடு :

வலி - வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

சுன்னுகம்

1969

சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில், குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு, வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்காக, நிர்வாகக் காரியதரிசி திரு. க. இராமச்சந்திரன் அவர்களால் வெளியிடப்பட்டது.

— உ 84/4-69

# உண்மை விளக்கந் தெரிந்தது

வாழிய வலிகா மம்வடக்கு
வளர்பல நோக்கக் கூட்டுறவு
வாழிச மாசம் வாழியவே
வழிவகை யாற்றுஞ் சான்றவரே!

★

உண்மை விளக்கம் தெரிந்தது — வழி
ஓங்கி உயரப் புரிந்தது
நன்மைகள் வந்து நிறைந்தன — உள்ள
புன்மைகள் சென்று மறைந்தன.

ஊரினில் உள்ளவர் ஆற்றலார் — கூடி
ஒற்றுமைப் பண்பினைப் போற்றினர்
சீரிய திட்டங்கள் தீட்டினர் — அவை
செய்கையிற் செய்கையிற் காட்டினர்.

கூட்டுற வோங்கி வளர்ந்தது — உள்ள
கொள்ளை யடிப்பு விழுந்தது
போட்டிச் சுரண்டல் கவிழ்ந்தது — தனிப்
புத்தெழில் வாழ்வில் முகிழ்ந்ததே.

மேல்வகைப் பண்டம் அடுத்தது — கடன்
வேண்டும் பொழுதிற் கிடைத்தது
நால்வகை யான தொழில்களும் — நன்கு
நாட்டினர் கூட்டு வழியிலே.

கற்றவர் நல்லவர் வல்லவர் — வலி
காமம் வடக்கை வளர்த்தனர்
ஒற்றுமை யாக வுழைத்தனர் — முழு
ஊருக்கும் நன்மை விளைத்தனர்.

உள்ளும் புறமும் உயரிய — நேர்மை
உள்ள வரியச மாசத்தின்
'வெள்ளி விழா' வை நினைக்கையில் — மனம்
விம்மி எழுந்து களிக்குதே.

★

வாழிய வலிகா மம்வடக்கு
வளர்பல நோக்கக் கூட்டுறவு
வாழிச மாசம் வாழியவே
வழிவகை யாற்றுஞ் சான்றவரே!

— **கவிஞர் வி. கந்தவனம்**

## கற்பகமே வாழி

வெண்பா

மன்னுவலி காமம் வடக்குப் பலநோக்குப்
பொன்னின் சமாஜம் பொலிவுடனே—உன்னுபுகழ்
வானமுயர் கற்பகமாய் வாழியவே பல்லாண்டு
தானமுயர் செல்வம் தழைத்து.

## காமதேனுவே வாழி

விருத்தம்

ஊர்பரவு பசியின்றி உயர்ந்து வாழ
உபயோகப் பொருள்யாவும் பெருகி வாழ
நீர்பரவு செழித்தகமம் நிறைந்து வாழ
நிலவியகைத் தொழில்எங்கும் நிலைத்து வாழ
சீர்பரவு தொழிலாளர் செல்வம் வாழ
திருவிளக்காய்ப் பயில்காம தேனு வேநீ
பார்பரவு சுகம்சுரந்து பணம் சுரந்து
பலநோக்குப் பலன்சுரந்து வாழி வாழி.

— அருட்கவி சீ. விநாசித்தம்பி

# வெள்ளிவிழாச் சபையின் கருத்து

**வ**லிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது இருபத்தைந்தாண்டு நிறைவுக் கொண்டாட்டமாய 'வெள்ளிவிழா'வினை மிகச் சிறந்தமுறையிற் கொண்டாடுவதென அதன் நிர்வாகசபை தீர்மானித்தது. விழா ஒழுங்குகளைக் கவனிப்பதற்கென ஓர் உபசபையையும் நிர்வாகசபை நியமித்தது. இவ்வுபசபை தேவையான போதெல்லாங் கூடி 'வெள்ளிவிழா' ஒழுங்குகளைக் கவனித்துவந்துள்ளது.

'வெள்ளிவிழா'வை இவ்வாறு பிரபலப்படுத்திக் கொண்டாட வேண்டுமோ என்னும் வினவொன்றையும் உபசபையினர் எழுப்பியதும் ஆராய்ந்ததுமுண்டு. சமாசம் எவ்வாறு ஆரம்பித்து எவ்வாறு வளர்ந்து இன்றைய உன்னத நிலையை அடைந்தது என்பதைச் சிந்திப்பதும் அச் சிந்தனையின் பேருக எதிர்காலத்திற்காய திட்டங்கள் தீட்டிச் சமாசத்தை வளர்ப்பதும் இன்றைய சமாச நிர்வாகிகளின் கடமையல்லவா? முன்னும் பின்னும் நோக்கும் அரிமாவை நிகர்ப்ப மனிதனும் தனது முன்னைய பணிகளை ஆராய்ந்து புதுப்பணிகளுக்குத் திட்டந் தீட்ட வேண்டியது அவசியமே. இதனல் இச் சமாசத்தைப் பற்றிச் சிந்தித்த—சமாசப் பணிகளில் ஈடுபட்ட—சமாச வளர்ச்சிக்காகத் தமது நேரத்தைச் செலவு செய்த—பெரியார்களின் கருத்துக்களை அறிவதும் அவற்றை நாடறிய வழி செய்வதும் இன்றியமையாதனவென உபசபை உணர்ந்தது. இவ் வுணர்ச்சியின் பேருக 'வெள்ளி விழா மலர்' உருப்பெறலாயிற்று.

இம் மலருக்கு நாம் எதிர்பார்த்த பலரது செய்திகளும் கட்டுரைகளும் உரிய காலத்தில் வந்து சேர்ந்தன. நாம் வேண்டிக்கொண்டபடி வியாபார நிலையங்களும் பிறவும் விளம்பரங்கள் தந்துதவின. இவ்வனைவர்க்கும் சமாசஞ் சார்பான எமது நன்றியைச் செலுத்துகிறேம். இம் மலருக்கெனக் கவிதை யாத்துதவிய கவிஞர் வி. கந்தவனம் அவர்களுக்கும், அருட்கவி சி. விநாசித்தம்பி அவர்களுக்கும் எமது நன்றி உரியது.

'வெள்ளிவிழா மலரை' மிகச் சிறந்த முறையில் உரியகாலத்தில் அச்சிட்டுதவிய சுன்னுகம், திருமகள் அழுத்தக உரிமையாளர்களுக்கும் எமது நன்றி உரியதாகுக. இம் மலர் மணமும் சுவையுமுள்ளதாக வெளிவர உழைத்தோர் பலராவர். அவ்வனைவர்க்கும் எமது பெருநன்றியைச் செலுத்துகிறேம்.

இங்ஙனம்

க. நாகலிங்கம்
ஆ. நடராசா
செ. வரதராசப்பெருமாள்
J. S. D. அரியரத்தினம்
சு. அம்பலவாணர்
தி. க. இராசசேகரன்
ச. முத்தையா

வெள்ளிவிழா உபசபை உறுப்பினர்

சுன்னுகம்,
8–6–69.

## உள்ளே . . . . . . . . . . . .

பக்கம்

Message from the Hon. Minister of Agriculture & Food — IX

கௌரவ விவசாய உணவு மந்திரி திரு. எம். டி. பண்டா அவர்களின் வாழ்த்து — X

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், கியூ. சி., பா. உ. அவர்கள் விடுத்த ஆசிச்செய்தி — XI

Message from **W. Pathirana,** The Commissioner of Co-operative Development & Registrar of Co-op. Societies — XII

கூட்டுறவுச் சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. க. சி. பொன்னுத்துரை அவர்களின் ஆசிச் செய்தி — XIV

இலங்கைப் பெற்றோல் கூட்டுத்தாபன அதிபர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்களின் ஆசிச் செய்தி — XV

Message from **J. M. Sabaratnam**, Additional Government Agent, Jaffna — XVI

Message from **Edmund Wijesuriya**, M. P., President of the Co-operative Federation of Ceylon — XVIII

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் அவர்களின் வாழ்த்துரை — XIX

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசபிள்ளை அவர்களின் ஆசிச் செய்தி — XX

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. பூ. குமாரசாமி அவர்களின் ஆசிச் செய்தி — XXI

இளைப்பாறிய சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. செல்வரசு குக் அவர்களின் ஆசியுரை — XXII

வலி-வடக்கு காரியாதிகாரி திரு. P. L. பற்றிக் அவர்களின் ஆசிச் செய்தி — XXIII

மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்களின் வெள்ளிவிழாஆசியுரை — XXIV

எங்கள் சமாசம் ... ... 1
சமாசத் தலைவர், பண்டிதர் திரு. க. நாகலிங்கம் அவர்கள்

வலிகாமம் வடக்கில் கூட்டுறவு நாணய இயக்கம் ... ... 3
முன்னாள் தலைவர், பிரமஸ்ரீ. சி. கார்த்திகேய ஐயர் அவர்கள்

கூட்டுறவுக் கல்வி ... ... 4
திரு. க. பரமோதயன் அவர்கள்

பக்கம்

தொழில் வளம் நோக்கி............ ... ... 6
திரு. வை. சி. சிவஞானம் அவர்கள்

போதும் விற்பனை, பொருளுற்பத்தி பெருகட்டும் ... ... 8
திரு. வ. பொன்னம்பலம், எம். ஏ. அவர்கள்

சமாச வரலாறு ... ... 10
நிருவாகக் காரியதரிசி, திரு. க. இராமச்சந்திரன் அவர்கள்

விவசாயப் பொருள்கள் கூட்டுறவு விற்பனை ... ... 13
திரு. க இராசசேகரன் அவர்கள், எம். ஏ.

வலி—வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களும் விற்பனை நிலையங்களும் ... ... 16
வைத்திய கலாநிதி, திரு. ஆ. நடராசா அவர்கள்

கூட்டுறவுச் சங்கங்களும் சமாசங்களும் ... ... 18
நிருவாகசபை உறுப்பினர், திரு. க. சங்கரப்பிள்ளை அவர்கள்

எங்கள் சமாசத்தின் துரித வளர்ச்சி ... ... 20
பொது முகாமையாளர், திரு. ச. மு. அருளம்பலம் அவர்கள்

முன்னேற்றப்பாதையில் நாம் ... ... 22
சமாசக் கணக்காளர், திரு. மு. சின்னையா அவர்கள்

எமது சமாசம் அன்றும் இன்றும் ... ... 23
பிரதம லிகிதர், பிரம்மஸ்ரீ. ச. ஐயாச்சாமிக் குருக்கள் அவர்கள்

கூட்டுறவில் நிர்வாகமும் ஊழியர்களும் ... ... 25
சமாச லிகிதர், திரு. சி. செல்வராசா அவர்கள்

கூட்டுறவும் கிராம விருத்தியும் ... ... 27
சமாச லிகிதர், திரு. சீ. விஜயசுந்தரம் அவர்கள்

சமாசக் கொள்வனவு ... ... 30
திரு. மு. நடராசா அவர்கள்

சமாசமும் தொழிலாளர்களும் ... ... 31
தொழிலாளர் சங்கக் காரியதரிசி, திரு. த. கனகரத்தினம் அவர்கள்

# விளம்பரங்களின் அட்டவணை


1. வலிவடக்கு ஐக்கிய மேற்பார்வைச் சபை
2. மில்க்வைற் சோப் தொழிற்சாலை
3. National Diesel Engineers
4. Rajan Iron Works
5. S. Senathirajah & Sons
6. Asi Hardware Stores
7. Malayalam Tobacco Sales Society Ltd.
8. Sarathas
9. S. R. S.
10. K. S. P. பாலகிருஷ்ணன் & கோ.
11. இணுவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
12. N. M. Sultan Mohideen Hadjiar & Bro.
13. சின்னத்துரை ஏஜென்சீஸ் அன் டிஸ்றிபியூட்டர்ஸ்
14. பி. ஸி. ஸி. சவரின் பார் சோப்
15. யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி
16. Raju Stores
17. Vasantha Textiles
18. A. Vythilingam & Co.
19. Leyden Industries
20. S. V. முருகேசு
21. Jaffna Motors
22. M. M. Muttiahpillai
23. Asbestos Cement Industries Ltd.
24. Fareena Garment Industries
25. நாகமுத்து அன் சன்ஸ்
26. ஈ. பீ. கிறீசி அன் கோ. (வரைவுள்ளது)
27. Muneer's
28. P. M. Mohideen
29. மொழியரசி அச்சகம்
30. வலி—கிழக்கு ப. நோ. கூ. சங்கங்களின் சமாசம்
31. இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்
32. ஸ்டீல் சன்ஸ்
33. வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போக்குவரத்துச் சேவை
34. முகமதலி அப்துலலி
35. கலா ரேடிங் கோ.
36. Fernando Company
37. K. K. Krishnapillai & Co.
38. Ramson Hardware Enterprice Limited
39. T. A. Mohamed Meera Sahib & Co.
40. Sellamuttu's
41. எம். எம். முத்துவாப்பா அன் சன்ஸ்
42. அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
43. வ. வ. இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்
44. வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வரைவுள்ளது)

எங்கள் தலைவர்



பண்டிதர் திரு. க. நாகலிங்கம் அவர்கள்



சமாசத்தின் பழைய தலைவர்
பிரம்மஸ்ரீ சீ. கார்த்திகேய ஐயர் அவர்கள்



சமாசத்தின் முன்னாட் காரியதரிசி
திரு. சா. க. இராசையா அவர்கள்



சமாசத்தின் முன்னாள் தலைவர்
திரு. சு. அம்பலவாணர் அவர்கள்



கௌரவ காரியதரிசி
திரு. செ. வரதராசப்பெருமாள்
அவர்கள்



முன்னாட் காரியதரிசி
திரு. சி. இரத்தினசபாபதி
அவர்கள்



சமாச நிர்வாகசபை உறுப்பினர்

இடமிருந்து வலம்: திருவாளர்கள்: க. இராமச்சந்திரன் (*நிர். காரியதரிசி*), சு. அம்பலவாணர், வே. நல்லதம்பி, க. சங்கரப்பிள்ளை, J. S. D. அரியரத்தினம், தி. க. இராசசேகரம், பண்டிதர் க. நாகலிங்கம், டொக்டர் ஆ. நடராசா, டொக்டர் அ. வி. சினிவாசகம், த. தம்பையா, ச. துரைசிங்கம், S. தர்மலிங்கம் (*கூட்டுறவுப் பரிசோதகர்*).

வலி-வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணியாளர்கள் — 1969



முதலாம் வரிசை — இடமிருந்து வலம் : திருமதி ப. ஜெகந்நாதன், திருவாளர்கள் : சி. திருநாவுக்கரசு, அ. க. பொன்னையா, த. கனகரத்தினம், சி. இரத்தினசபாபதி, பிரம்மஸ்ரீ ச. ஐயாச்சாமிக் குருக்கள், திருவாளர்கள் : ச. மு. அருளம்பலம், க. இராமச்சந்திரன், மு. சின்னையா, சி. நவரத்தினம், சி. விஜயசுந்தரம், பிரம்மஸ்ரீ சு. சேதுமாதவ ஐயர், திருவாளர்கள் : த. சிவரத்தினம், க. சிவசுப்பிரமணியம், செல்வி ச. சிவசம்பு.

இரண்டாம் வரிசை — இடமிருந்து வலம்: திருவாளர்கள் : க. சிவநேசன், சி. முருகையா, ம. சுந்தரேஸ்வரன், இ. வேலாயுதபிள்ளை, த. இராசரத்தினம், க. கோவிந்தசாமி, க. சரவணபவன், கா. சபாபதி, க. சுப்பிரமணியம், வே. சின்னத்துரை, சி. செல்வராசா, க. சிவலோகநாதன், இ. சுந்தரலிங்கம், செ. செல்வராசா, ச. துரைராசா, சி. கிருஷ்ணபிள்ளை, சு. திருநாவுக்கரசு, இ. கதிர்காமத்தம்பி, வ. குமாரசாமி.

மூன்றும் வரிசை — இடமிருந்து வலம் : திருவாளர்கள் : ச. சரவணை, க. சத்தியநாதன், சி. நாகமுத்து, சோ. மகாராசா, இ. இராசரத்தினம், நா. சோமசுந்தரம், க. நாகமுத்து, சி. மகாலிங்கம், ச. இராசரத்தினம்.

# *Message*

## *from the Hon. Minister of Agriculture & Food*

### *to the Valikamam North Multi-Purpose Co-operative Societies Union.*



*It is with great pleasure that I send this message to the Souvenir which is to be published to celebrate the Silver Jubilee of the Valikamam North Multi-Purpose Co-operative Societies Union.*

*I note with great satisfaction that this Union which was originally registered as a Co-operative Societies Union in 1944 has throughout the years rendered valuable services to the people of the area by the provision of various services and facilities. Throughout the world Co-operation has been found to be a valuable medium for economic upliftment in the rural sector. Our own experience in Ceylon too has been very rich in this field. Hence it is not surprising that increasing numbers of the economically-active people are seeking shelter in the Co-operative Movement for the realization of their aims.*

*As we are aware Co-operative Societies have to perform a key-role in the country-wide effort now being made to increase agricultural productivity. In addition to the supply of the various agricultural inputs which the farmers need, I think the Co-operative Societies should make a sustained effort to also educate the villagers on the basic principles of co-operation.*

*I trust that your past experiences would give added strength to spread further the ideal of co-operation and widen your services and ultimately help in the speedy economic development of your area.*

*I wish your Union all success.*

*M. D. Banda*
*Minister of Agriculture & Food*

Colombo,
3rd April, 1969.

## கௌரவ விவசாய உணவுமந்திரி திரு. எம். டி. பண்டா அவர்கள் வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு விடுத்த

# நல் வாழ்த்து

வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது வெள்ளி விழாவினைக் கொண்டாடும் முகமாக வெளியிடும் மலருக்கு இந்த வாழ்த்துச் செய்தியைப் பெரு மகிழ்வுடன் அனுப்புகிறேன்.

1944ஆம் ஆண்டு ஒரு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமாகப் பதிவு செய்யப்பட்ட இச் சமாசம் கடந்த இருபத்தைந்தாண்டுகளாக இப் பகுதி மக்களுக்குப் பல சேவைகளையும் வசதிகளையும் செய்துகொடுத்து வருவதன் மூலம் பயன்தரு பணிகளைப் புரிந்து வந்துள்ளதென்பதை நான் அதிக திருப்தியுடன் கவனிக்கக்கூடியதாக இருக்கிறது. உலகின் எல்லாப் பாகங்களிலுங் 'கூட்டுறவு' கிராமப்பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பயனுள்ள வழியாகக் காணப்பட்டு வந்திருக்கிறது. இத்துறையில் இலங்கையில் நாம் பெற்ற அனுபவமும் இக் கூற்றுக்கு அரண்செய்வதாக அமைந்துள்ளது. ஆதலின் பொருளாதாரத்துறையில் சிரத்தையுள்ள மக்கள் தமது நோக்கினை நிறைவேற்றக் கூட்டுறவு இயக்கத்தின் பாதுகாப்பை நாடுவதில் வியப்பில்லை.

நாம் அறிந்திருப்பதற்கமைய, இப்பொழுது இந்நாடு முழுவதும் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு எடுக்கப்படும் பிரயத்தனங்களிற் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கினை வகிக்கவேண்டும். விவசாயிகளுக்குத் தேவைப்படும் பலவித விவசாய உபகரணங்களை வழங்குவதோடு கட்டாயமாகக் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமமக்களுக்குக் கூட்டுறவின் அடிப்படை விதிகள் பற்றி அறிவு புகட்டவும் அதிமுயற்சி யெடுக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன்.

கூட்டுறவின் உண்மைத் தத்துவத்தை மேன்மேலும் பரப்பவும் உங்கள் சேவைகளைப் பெருக்கவும் உங்கள் பகுதியின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் இவ்வியக்கம் பற்றிய உங்கள் கடந்தகால அனுபவங்கள் கூடிய வலுவைத்தரும் என்று நான் நம்புகிறேன்.

உங்கள் சமாசம் எல்லாத் துறைகளிலும் முன்னேற வாழ்த்துகிறேன்.

கொழும்பு,
3—4—69.

**எம். டி. பண்டா**
உணவு விவசாய மந்திரி

## திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், கியூ. சி., பா. உ. அவர்கள்

விடுத்த

# ஆசிச் செய்தி



வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வெள்ளி விழா மலருக்கு ஒரு செய்தி யனுப்புமாறு அதன் தலைவர் என்னைக் கேட்டுக்கொண்டார். இச் சமாசம் எனது தொகுதி மக்களுக்கு நல்ல முறையில் சேவை செய்து வருகிறதென்பதை யான் அறிவேன். இச் சமாசத்தின் மொத்த விற்பனை நிலையங்கள், சுன்னுகத்திலும், தெல்லிப்பழையிலும் அமைந்துள்ளன. அவை வலிகாமம் வடக்கிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், ஐக்கிய பண்டசாலைச் சங்கங்கள், உத்தரவுபெற்ற வியாபார நிலையங்கள் என்பன வற்றிற்கு நியாயமான விலையில் — நேர்மையான முறையில்—பொருள் பண்டங்களை விற்பனை செய்து வருகின்றன. சில்லறை நிலையங்கள் கீரிமலை, மயிலிட்டி, தெல்லிப்பழை, சுன்னுகம் என்னும் இடங்களில் அமைந்திருக்கின்றன.

இச் சமாசம் பாண் தொழிற்சாலை ஒன்றையும், நடாத்தி வருகிறது. இச் சமாசம் அண்மையில் ஊறணிக் கிராமத்தில் மின்தறி நெசவு நிலையம் ஒன்றையும் அமைக்க இருக்கிறது. இம் மின்தறி நெசவு நிலையம் அமைக்கப் பட்டால் வலிகாமம் வடக்கிலுள்ள பலர் தொழில் வசதி பெறும் வாய்ப்புக் கிடைக்கும். சமாச நிர்வாகிகள் இம் மின்தறி நெசவு நிலையத்தை மிக விரைவில் அமைப்பார்களென எதிர்பார்க்கிறேன்.

இச் சமாசம் விவசாயத்துறையிலும் ஊக்கஞ் செலுத்தி அரசாங்கத்திடம் காணிகளைப் பெற்றுக் கூட்டுறவுத் துறையில் விவசாயத்தை விருத்தி செய்து பணவசதியற்ற விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டுமென விரும்புகிறேன்.

இச் சமாசம் சிறந்தமுறையில் நடைபெறுவதற்கு ஏற்ற பணிபுரியும் நிர்வாகிகளுக்கு எனது பாராட்டைத் தெரிவிக்கின்றேன்.

சா. ஜே. வே. செல்வநாயகம்

My No. 36/J858/12

The President
Valigamam North Multipurpose
Co-op. Societies Union Ltd.,
Chunnakam.

*I have great pleasure in sending this message on the occasion of your Union's Silver Jubilee Celebrations.*

*This Union was registered on 3rd April,* 1944, *as a Store Societies Union and later converted into a Multipurpose Societies Union on* 29-11-1959, *with the inauguration of the Multipurpose Societies drive in the Island. The Balance Sheet of the Union as at the end of its first year, viz.* 31-3-45, *and as at* 29-3-67 *the date of the last audited Balance Sheet—depict a very interesting picture of the growth and progress of the Union. The Union commenced its activities with a contribution of only Rs.* 5561/- *as Share Capital from its member societies. Its owned capital at that time was Rs.* 6149/-. *Today the Union has a share capital of Rs.* 40,869/- *and all reserves total Rs.* 196,576/-. *The owned capital of the Union stands at Rs* 256,397/-.

*The Union occupied a rented out building at Tellipallai during the first few years of its existence. Now it owns buildings at Chunnakam and Tellipallai, constructed to suit modern requirements at a cost of Rs.* 267,685/-.

*I am glad to note the Union's expansion of business in the various spheres of activities and the satisfactory services rendered to its member societies. I am also informed that the depot at Chunnakam, managed by the C. W. E. and taken over by this Union on* 21-1-66, *is being efficiently managed. The Union's business turnover for the last two years amounted to Rs.* 9,890,963/- *and Rs.* 9,178,533/- *respectively. Net profits earned during* 1967/68 *amounted to Rs.* 95,093/-. *The Union has also successfully executed building contracts to the value of Rs.* 232,791/-.

*It is also observed that the Union was running six retail depots in order to assist badly managed societies and four of these depots have been handed over to the primary societies concerned after they were rehabilitated. I commend the Union for this work and it should always be prepared to set up strong retail depots for consumer and other services wherever societies are unable to manage their own affairs.*

*I congratulate the Union on its achievements and wish progress and prosperity for the future.*

W. Pathirana
*Commissioner of Co-operative Development*
*& Registrar of Co-op. Societies.*

Dept. of Co-op. Development,
P. O. Box 419,
Colombo 1. — 8th March, 1969.

தலைவர் அவர்கள்,
வலி-வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச்
சங்கங்களின் சமாசம்,
சுன்னாகம்.

உங்கள் சமாசத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுந் தருணத்தில் இவ்வாழ்த்துச் செய்தியைத் தங்களுக்கு அனுப்பி வைப்பதில் யான் பெரு மகிழ்வெய்துகிறேன்.

இச் சமாசம் 1944ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 3ஆந் தேதி ஒரு கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கங்களின் சமாசமாகப் பதிவு செய்யப்பட்டுப் பின்னர்ப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிக்க எடுத்துக்கொண்ட எத்தனங்களின் பேருக 29-11-1959இல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமாக மாற்றப்பட்டது. முதலாவது வருட முடிவில் அதாவது 31-3-1945இல் தயாரிக்கப்பட்ட எண்பார்வை அறிக்கையும் கடைசியாக அதாவது 29-3-67இல் தயாரிக்கப்பட்ட எண்பார்வை அறிக்கையும் இச் சமாசம் அடைந்துள்ள வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுகின்றன. இச் சமாசம் அங்கத்துவ சங்கங்களின் பங்குப்பண மாக ரூபா 5,561/-ஐக் கொண்டே தனது செயல்களை ஆரம்பித்தது. அவ்வேளையில் அதன் சொந்த மூலதனம் ரூபா 6,149/- ஆகும். இன்று இச் சமாசம் பங்குப்பணமாக ரூபா 40,869/- ஐ உடைத்து. இச் சமாசத்தில் இன்று மொத்தமாகவுள்ள அடக்கப் பணம் ரூபா 1,96,576/- ஆகும். சமாசத்தின் சொந்தமூலதனம் ரூபா 2,56,397/- ஆகும்.

ஆரம்பத்திற் சில ஆண்டுகளாக இச் சமாசம் தெல்லிப்பழையில் வாடகைக்கு ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கட்டிடத்தில் இயங்கி வந்தது. இப்போது நவீன தேவை களுக்குகந்த முறையில் ரூபா 2,67,685/- செலவிட்டு அமைக்கப்பட்ட கட்டிடங்களைச் சுன்னாகத்திலும், தெல்லிப்பழையிலும் சொந்தமாகப் பெற்றிருக்கிறது. பல்வேறு துறை களிலும் சமாசத்தின் வியாபார விஸ்தரிப்பையும் மிகத் திருப்திகரமாக அங்கத்துவ சங்கங்களுக்கு அளித்துவருஞ் சேவைகளையும் குறிப்பிடுவதில் யான் மகிழ்வெய்துகிறேன். சுன்னாகத்திற் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தால் நிர்வகிக்கப்பட்டுவந்த நிறுவனத்தை 21-1-66இல் இச் சமாசங் கையேற்று மிகச் சிறந்த முறையில் நிர் வகித்து வருகிறதென்பதையும் நான் அறிந்துள்ளேன். இச் சமாசத்தின் கடந்த இரு ஆண்டுகளின் விற்பனவு முறையே ரூபா 98,90,963/- என்பதும், ரூபா 91,78,533/- என்பதுங் குறிப்பிடத்தக்கன. 1967 — 1968இல் இச் சமாசம் பெற்ற செலவு நீக்கிய இலாபம் ரூபா 95,093/-. சமாசம் ரூபா 2,32,791/- பெறுமானமுள்ள கட்டிட வேலை களையுஞ் செவ்வனே நிறைவேற்றியுள்ளது.

சீர்கேடான முறையில் நிர்வகிக்கப்பட்ட சங்கங்களைச் சீர்ப்படுத்த உதவுவதற்காக ஆறு சில்லறை விற்பனவு நிலையங்களை இச் சமாசம் பொறுப்பேற்றுள்ளதென்பது நோக்கத்தக்கது. இந்நிலையங்களில் நான்கு சம்பந்தப்பட்ட சங்கங்கள் திருப்திகரமான முறையில் அமைக்கப்பட்ட பின்னர் அவற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இச்செயல் குறித்து இச் சமாசத்தை யான் பெரிதும் மெச்சுகின்றேன். கூட்டுறவுச் சங்கங்கள் தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற இயலாமலிருக்குமிடங்களில் இச் சமாசம் வலுவுள்ள சில்லறை விற்பனை நிலையங்களையமைத்துச் சேவைசெய்ய எப்போதுந் தயா ராக இருக்கவேண்டும்.

இச் சமாசம் அடைந்துள்ள பேறுகள் குறித்து அதனை யான் பாராட்டுவதுடன் அது மேன்மேலும் ஓங்கி வளர்ந்து முன்னேற்றமடைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலகம்,
தபால் பெட்டி 419,
கொழும்பு 1,
8-3-69.

W. பத்திரன
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவுகாரரும்.

சிரேஷ்ட உதவி ஆணையாளர்

## திரு. க. சி. பொன்னுத்துரை அவர்களின்

# ஆசிச் செய்தி

வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது வெள்ளிவிழாவைப் பெருமகிழ்ச்சியோடு கொண்டாடும் இவ்வேளையில் முழுமையான உள்ளத்தால் நான் எனது வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'கூட்டுறவு' என்னும் பெரிய ஆற்றலால் சோதனைகள் பல ஏற்படினும் அவற்றையெல்லாம் வென்று சாதனைகள் பலவற்றைச் சாதிக்கலாம் என்ற உண்மையை இச்சமாசம் தனது கால் நூற்றுண்டு கால வாழ்வில் நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

வாடகைக் கட்டிடங்களில் ஆரம்பிக்கப்பட்ட இச்சமாசம் காலப்போக்கில் சொந்தக் காணியும் சொந்தக் கட்டிடங்களும் பெற்று இன்று கெம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறது. மக்களுக்கு உண்மையான தொண்டாற்றுகிறவன் எப்படி மக்களால் உயர்த்திவைக்கப்படுவானே அப்படியே பொதுமக்களுக்கு நிறைந்த தொண்டாற்றிய இச்சமாசத்தைப் பொதுமக்கள் நல்ல நிலைக்குக் கொணர்ந்து உயர்த்தி வைத்திருக்கிறார்கள்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இச்சமாசம் ஒரு பண்டசாலைச் சங்கங்களின் சமாசமாகத் தொடங்கியபொழுது அதனுடைய சொந்த மூலதனம் ரூபா 6,149/– ஆகும். இன்று இதன் சொந்த மூலதனம் ரூபா 2,56,397/– ஆக உயர்ந்திருக்கிறது. தற்போது ஆண்டு ஒன்றுக்குக் கிட்டத்தட்ட பத்துக்கோடி ரூபா பொருள் விற்பனையில் சமாசம் ஈடுபடுகிறது. 1967/68 ஆம் ஆண்டில் சமாசம் ரூபா 95,093/– தேறிய இலாபம் பெற்றது.

இன்று 28 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் 30 பண்டசாலைச் சங்கங்களும் இச்சமாசத்தில் அங்கம் வகிக்கின்றன. இச்சமாசம் ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட உணவுப் பங்கீட்டுப் புத்தகங்களுக்குக் கட்டுப்பாட்டுப் பொருள்களைப் பங்கீடுசெய்து வழங்கிவருகிறது.

பொதுமக்களின் நல்வாழ்வும் முன்னேற்றமுமே கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படையான நோக்கமாகும். இவ்வகையில் வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆற்றிவரும் பணி மகத்தான பணி என்பேன்.

இச்சமாசம் தொடர்ந்து பல நூற்றுண்டுகள் வாழ சமாசத்தின் கூட்டுறவாளர்களுக்கு இறைவன் நிறைந்த ஆற்றலை அருள்வாஞக.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
த. பெ. இல. 419, கொழும்பு - 1
25-3-69.

**க. சி. பொன்னுத்துரை**
கூட்டுறவு சிரேஷ்ட உதவி ஆணையாளர்

இலங்கைப் பெற்ரோல் கூட்டுத்தாபன அதிபர்

**திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்களின்**

# ஆசிச் செய்தி

*தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க, வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வெள்ளிவிழாப்போது இந்தச் செய்தியை மிகுந்த மகிழ்ச்சியுடன் அனுப்புகின்றேன். கூட்டுறவியக்கத்தோடு நான் அதிகாரபூர்வமாகத் தொடர்புகொண்டிருந்த காலத்தில் (1953 – 1963) யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கிவரும் பல சங்கங்களையும் சமாசங்களையும் பார்வையிட வாய்ப்புக் கிடைத்தது. இவற்றுள் திறமையோடு கடமையாற்றிவரும் சமாசங்களில் இச்சமாசமும் ஒன்று என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். இது நான் உறையும் ஊரில் மக்கட் சேவை புரிந்து வருவதும் எனக்குப் பெருமை தருகின்றது.*

*கூட்டுறவு முறை இந்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு இப்போது 60 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. இக்கால எல்லையில் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அது வழிவகுத்து வந்திருக்கின்றது. விசேஷமாக 1943ஆம் ஆண்டிற்குப் பின் கூட்டுறவு இயக்க அமைப்பிலே பல மாற்றங்கள் புகுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இவை மூலம் பொருளாதாரத்துறையிலே மக்கள் பொதுநலனைக் கருதி அரசினர் காலக்கிரமத்தில் வகுத்த கொள்கைகளை நிறைவேற்றக்கூடியதாயிருந்தது. இருந்தும் மக்களின் தனிப்பட்ட வளத்திற்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்களின் அமைப்பும் அவை இயங்கும் முறையும் இதுவரை எத்துணை சாதகமாயிருந்தன வென்ற பிரச்சினை எழுந்துள்ளது. இப் பிரச்சினையை ஆராய்ந்து கூட்டுறவு முறைகளில் உள்ள குற்றநற்றங்களைப் பரிசீலனை செய்து வேண்டிய திருத்தங்களைச் சுட்டிக்காட்டும்படி ஒரு விசாரணைக்குழுவை அரசாங்கம் நியமித்திருக்கின்றது. இக்குழுவில் நானும் ஒருவனாயிருக்கின்றபடியினால் கூட்டுறவைப் பலப்படுத்தும் முறைகளைப்பற்றி இங்கு யாதும் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், ஒரு கருத்தை மாத்திரம் உதவ விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கம் மக்களுக்கு முழுப்பயன் தரவேண்டுமானால் பொறுப்புணர்ச்சியுள்ளவர்களும் தன்னலவாஞ்சையில்லாதவர்களும் அதிற் சேர்ந்து பணிபுரிய வேண்டும். " உண்டாலம்ம இவ்வுலகம் ...... தமக்கென முயலாநோன்ருள், பிறர்க்கென முயலுநர் உண்மையானே " என்ற சங்க காலச் செய்யுள் நினைவிற்கு வருகின்றது. இந்தப் பழந் தமிழர் பண்பாட்டில் திளைத்த பெருமக்கள் கூட்டுறவை இயக்குநர் ஆகவேண்டும். வலிகாமம் வடக்குக் கூட்டுறவுச் சமாசத்தைக் கொண்டு நடத்துபவர் இக் குறிக்கோளுக் கமையக் கடமை ஆற்றுகின்ருர்களென்பதில் சந்தேகமில்லை. வருங்காலத்திலும் " உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ " என்பதற்கேற்ப, இச் சமாசத்தின் நிர்வாகம் அதன் பணியாளர்களுடைய ஒத்துழைப்போடும் விடாமுயற்சியோடும் சிறப்புற்ருேங்க வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்துக்கொண்டு இச் செய்தியை முடிக்கின்றேன்.*

*கோ. ஆழ்வாப்பிள்ளை*
தலைவர்
இலங்கைப் பெற்ரோல் கூட்டுத்தாபனம்

கொழும்பு,
**26–2–1969.**

# *Message*

## *from the Additional Government Agent, Jaffna*



*It gives me great pleasure to give a message on the occasion of the publication of a Souvenir in connection with the Silver Jubilee Celebrations of the Valikamam North M. P. C. S. Union. As Additional Government Agent and earlier as Senior Assistant Commissioner of Co-operative Development, I am aware of the good work already done by this Union in making available consumer goods at the cheapest possible price to the people both through the Union's Multi Purpose Co-operative Societies and Co-operative Stores as well as through its own retail points at Tellippalai, Keerimalai and Myliddy. It has attempted to diversify its activities by undertaking contract works and also by the establishment of a Bakery. It has also been able to put up its own administration buildings and business establishments both at Tellippalai and Chunnakam.*

*There is however much more that this Union can do in the future especially in the sphere of industries and I am looking forward to a period of industrial activity activated by the enthusiasm and initiative of the Board of Directors of this Union.*

*I wish the Union a very bright future.*

*J. M. Sabaratnam*
***Additional Government Agent, Jaffna.***

March 5, 1969.

யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க அதிபர்

## திரு. ஜே. எம். சபாரத்தினம் அவர்களின்

# ஆசிச் செய்தி

வலிகாமம் வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தைக் குறிக்கும் முகமாகப் பிரசுரிக்கும் ஞாபக மலருக்கு இச் செய்தியை அனுப்புவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இச் சமாசம் தனது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுப் பண்டசாலைகள், மற்றும் தெல்லிப்பழை, கீரிமலை, மயிலிட்டி ஆகிய இடங்களிலுள்ள சில்லறைக் கடைகள் ஆகியன மூலம் மக்களுக்குப் பாவனைப் பொருள்களை மிகக் குறைந்த விலையில் விநியோகம் செய்வதில் மிகவும் சிறந்த தொண்டு புரிந்ததை மேலதிக அரசாங்க அதிபர் என்ற முறையிலும் முன்பு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் சிரேஷ்ட உதவி ஆணையாளர் என்ற முறையிலும் நான் நன்கு அறிவேன். ஒப்பந்த வேலைகள் மூலமாகவும் பாண் போறணை ஸ்தாபித்ததாலும் தனது சேவைகளை விசாலிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. தெல்லிப்பழையிலும் சுன்னகத்திலும் தனது நிர்வாகக் கட்டிடங்களையும் வியாபார நிறுவனங்களையும் நிறுவியும் உள்ளது.

குறிப்பாக, கைத்தொழில் துறையில் இச் சமாசம் எதிர்காலத்தில் இன்னும் எவ்வளவோ கூடிய தொண்டுகளைப் புரியக்கூடுமென்றும் சமாசத்தின் இயக்குநர் சபையின் ஆக்கத்தாலும் ஊக்கத்தாலும் கைத்தொழில் வேலைகள் அதிகரிக்கும் காலம் வருமென்றும் நான் எதிர்பார்க்கின்றேன்.

சமாசத்தின் எதிர்காலம் மிகவும் பொலிந்ததாக இருக்கவேண்டும் என்றும் மக்களுக்குக் கூடிய சேவைபுரியச் சந்தர்ப்பங்கள் கிடைக்கவேண்டுமென்றும் நான் விரும்புகின்றேன்.

**யோ. மூ. சபாரத்தினம்**
(ஜே. எம். சபாரத்தினம்)
மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்

1969 பங்குனி 5.

# *Message*

## *from the President of the Co-operative Federation of Ceylon.*



*It gives me much pleasure to send my greetings to the Valikamam North Multipurpose Co-operative Societies Union Ltd., on the occasion of its Silver Jubilee Celebrations.*

*This Union which commenced activities twenty-five years ago in a small way in a rented building has since, not only acquired a building at Tellippalai but also put up a new building at Chunnakam. Its activities are "multipurpose" in the true sense of the word. In addition to the normal activities of distributing consumer goods, it runs a Bakery at Chunnakam and steps are afoot to assist the fishing community of Myliddy by supplying them with outboard Motor Parts.*

*The farmers of the area will also be benefitted once the Union succeeds in its attempts to import water pumps. If the Biscuit Manufacturing Factory which the Union hopes to set up, materialises, (I have not the slightest doubt that it should), employment opportunities would be provided for a fair number of people of the area.*

*I wish the Union a very bright future and earnestly hope that, when the time comes for it to celebrate its Golden Jubilee, it would be able to say with just pride and satisfaction that it has solved, if not all, at least some of the most pressing economic and social problems of the people of Valikamam North.*

*Edmund Wijesuriya, M. P.,*
**President.**

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர்

## திரு. இ. இராசரத்தினம் அவர்களின்

# வாழ்த்துரை

தலைவர்,
வலிகாமம் வடக்கு ப. நோ. கூ. ச. சமாசம்,
சுன்னுகம்.

**அன்புடையீர்,**



*தங்கள் சமாசம் வெள்ளி விழாவைக் கொண்டாடுவதுடன், அப் பெருவிழாவினை யொட்டி ஒரு மலரையும் வெளியிடவிருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன்.*

*வடபகுதிக் கூட்டுறவு உலகிற்குப் பெருமை தேடித்தரும் கூட்டுறவு நிறுவனங்களில் ஒன்ருகத் திகழும் தங்கள் சமாசத்தின் ஒப்பற்ற முயற்சி, மேலும் மேலும் உன்னத வளர்ச்சியும், எழுச்சியும் அடைந்து வருவதைக் கண்டு பெருமிதமடைகின்றேன்.*

*பலநோக்கு என்ற இலட்சிய வழியில் செம்மை திறம்பாது உழைத்து வரும் தங்கள் சமாசம், கூட்டுறவின் சுதந்திரத்தையும், தன்மானத்தையும் பேண சேமிப்பு என்ற சக்தி செறிந்த புனித பணியில் கூட்டுறவாளரை ஊக்குவித்து அவர்களின் வாழ்வில் ஒளியேற்றி வழிகாட்ட அருந்தொண்டு புரிந்து வருவதை உளமாரப் பாராட்டுகின்றேன். இந்த நற்பணியில் கூட்டுறவாளர்களும், சங்கங்களும் முழு ஊக்கத்துடன் ஈடுபட்டுழைத்தால் கூட்டுறவு உலகம் சுதந்திரமும், செழிப்பும் மிக்கதாக ஒளிரும்.*

*தங்கள் நன் முயற்சிகள் வெற்றிபெற எனது அன்பு கலந்த வாழ்த்துக்கள்.*

இங்ஙனம்
தங்கள் கூட்டுறவுச் சேவையிலுள்ள
*இ. இராசரத்தினம்*
தலைவர்
**வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை**

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர்

திரு. தி. முருகேசபிள்ளை அவர்களின்

# ஆசிச் செய்தி

கூட்டுறவு இயக்கம் கற்பகதரு போன்றது. வேண்டுவார் வேண்டுவதை ஈயும் இயல்புள்ளது. எவர் எவ்வளவு பக்தி, சிரத்தையோடு கூட்டுறவு இயக்கத்தை ஆதரித்து வளர்க்கிருரோ, அவருக்கெல்லாம் வேண்டியதைக் கொடுக்கத்தக்க வல்லமையுடையது கூட்டுறவு இயக்கம்.

பொதுவுடைமைக் கொள்கையைக் கூட்டுறவு இயக்கத்தில் பெரிதும் காணலாம். ஆனுல், இடதுசாரிக் கொள்கையான பொதுவுடைமை ஒழுங்கில் தெய்வத்தன்மைக்கு இடமில்லை. ஆனுல், கூட்டுறவு முறையில் தெய்வத்திற்குப் பேரிடம் உண்டு.

கூட்டுறவு ஸ்தாபனம் ஓர் ஆலயத்தைப் போன்றது. ஆலயத்தில் எவ்வளவு ஒழுக்கமாகவும், ஒடுக்கமாகவும், பக்தி பரவசத்தோடும் புழங்குகின்ருேமோ அப்படியே கூட்டுறவு ஸ்தாபனத்தோடும் அனைவரும் புழங்கப் பழகவேண்டும்.

ஆலயத்தில் மூர்த்திகரம் கூடுவது அடியார்கள் அன்பாக வணங்குவதாலே. ஆலயத்தில் மூர்த்திகரம் கூடினுல் அடியார்களுக்கு அருள் அதிகம் சுவறும். அதேபோல் கூட்டுறவு ஸ்தாபனங்களில் அன்பு காட்டினுல் அதன் மூலம் அங்கத்தவர்கள் அனைவரும் அருள்பெற முடியும்.

வலிகாமம் வடக்குப் பிரிவில் ப. நோ. கூ. சங்கங்களின் சமாஜத்தின் சரித்திரம் யான் நன்கறிந்ததே. பல துறைகளிலும் இச் சமாஜம் தொண்டாற்றுகின்றது. உபயோகப் பொருள்களை மக்களுக்கு மலிந்த விலையில் சேகரித்துக் கொடுப்பதோடு, பல துறைகளிலும் ஆக்க வேலைகளில் இச் சமாஜம் ஈடுபடுகின்றது.

இச் சமாஜத்தின் சரித்திரத்தின் சென்ற 25 ஆண்டுகள் முக்கியமானவை. ஏனெனில், ஆரம்பத்தில் பலவிதமான பரிசோதனைகளுக்குள்ளும் கஷ்டங்களுக்குள்ளும் சமாஜம் முக்குளித்திருக்கக்கூடும். ஆனுல் தற்போது அனுபவமும் ஆற்றலும் நிறைந்த சங்க நிர்வாகிகளின் உதவியோடும் ஊக்கத்தோடும் அடுத்த சில ஆண்டுகளில் இச் சமாஜம் சிறந்த ஆக்க வேலைகளில் ஈடுபடவேண்டும்.

மின்சார வசதிகளை உபயோகப்படுத்தி பல கைத்தொழில் நிலையங்களை நிறுவலாம். கமத்தொழிற் பிரயோசனங்களை உபயோகப்படுத்திப் பல வகைப் பொருள்களை உற்பத்தி செய்யலாம். இணைக்கப்பட்ட சங்கங்களுக்கும் சங்கங்களின் தனி உறுப்பினர்களுக்கும் வங்கியில் கடனெடாமல் சமாசமே குறைந்த வட்டிக்குப் பணம் கடன் கொடுத்து ஆக்க வேலைகளை ஊக்குவிக்கலாம்.

இப்படியான பல சேவைகளை இச் சமாஜம் செய்ய ஆண்டவன் அருள் புரிவாராக.

இங்ஙனம்
தி. முருகேசபிள்ளை
யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர்

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

திரு. பூ. குமாரசாமி அவர்களின்

# ஆசிச் செய்தி

*வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசம் 3-4-44ல் ஓர் பண்டசாலைச் சமாசமாகப் பதிவு செய்யப்பட்டு 22-1-60ல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமாகப் பதிவு செய்யப்பட்டது. இச்சமாசம் வலிகாமம் வடக்கு காரியாதிகாரிப் பிரிவில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும், பண்டசாலைச் சங்கங்களையும் அங்கத்துவச் சங்கங்களாகக் கொண்டுள்ளது. 1,05,000 உணவுப் பங்கீட்டுப் புத்தகங்களுக்குரிய பொருள்களை விநியோகம் செய்கின்றது. 3 மொத்த வியாபார நிலையங்களையும், 5 சில்லறை வியாபார நிலையங்களையும் நடாத்துகின்றது. இதுவரை காலமாகத் திருப்திகரமான வியாபாரம் செய்து போதிய இலாபத்தையீட்டி நல்ல பணநிலையிலிருப்பது மெச்சத்தக்கது. வியாபாரத்தைத் தவிர்ந்த வேறு அபிவிருத்தித் துறைகளிலும் இச்சமாசம் ஈடுபடுவதற்கு ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கிறது. வருங்காலங்களில் இச் சமாசம் தற்போது செய்யும் பணியைச் சிறப்புடன் செய்வதுமன்றி ஈடுபடவிருக்கும் வேறு அபிவிருத்தித் துறைகளிலும் சித்தியடையவேண்டுமென ஆசிக்கிறேன்.*

**பூ. குமாரசாமி**
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

இளைப்பாறிய சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்

திரு. செல்வரசு குக் அவர்களின்

# ஆசியுரை

வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வெள்ளிவிழா மலருக்கு இச் செய்தியினை அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். 1928 ஆம் ஆண்டுதொடக்கம் நான் இப்பகுதிக் கூட்டுறவாளருடன் உறவாடி வந்திருப்பதனுல் இம்மகிழ்ச்சி ஊற்றெடுப்பதில் வியப்பில்லை. இச்சமாசம் வலி வடக்கு மக்களுக்குப் பெரும் பேருக இருக்கின்றது. குறிப்பாக, நுகர்ச்சிப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த பொழுதும், விலைகள் வானைநோக்கி உயர்ந்தபொழுதும் இச்சமாசம் மக்களுக்கு அரும்பெரும் தொண்டாற்றியது. பண்டசாலைச் சங்கங்களின் சமாசமாகத் தொடங்கிய இச்சமாசம், இப்பொழுது பலநோக்குச் சங்கங்களின் சமாசமாய் விளங்கி விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் அவர்களுடைய விளைபொருள்களையும் விற்க உதவுகின்றது.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகச் சமாசம் எய்திய வளர்ச்சிக்கு அதன் அலுவலகமும், சுன்னுகத்திலும் தெல்லிப்பழையிலுமுள்ள விசாலமான களஞ்சியங்களும் சான்று பகரும்.

அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து, குடாநாட்டிற்கு வெளியே காலூன்றி, சமாசத்தின் தொழிற்பாட்டைப் பெருக்குவதற்கு இதுவே தக்க சமயம். இவ்வாறு செய்யின், இப்பகுதியிலே வேலையற்று இருக்கும் நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளிக்கமுடியும். வன்னிபோன்ற பகுதிகளிலே சமாசம் காணிகளை வாங்கியோ, குத்தகைக்கு எடுத்தோ இவ்விளைஞர்களை அங்கு குடியேற்றலாம். அத்துடன் இப்பகுதியிலே வாழக்கூடிய இளம் பெண்களுக்கு நெசவு போன்ற குடிசைக் கைத்தொழில்களையும் சமாசம் தொடங்கி உதவலாம்.

றெட்டேல் முன்னேடிகளின் வரலாற்றினை ஈண்டு குறிப்பிடுவது சாலவும் பொருந்தும். மான்செஸ்டர் நகரத்திற்கு அண்மையிலுள்ள றெட்டேல் கிராமத்தில் இம் முன்னேடிகள் கூட்டுறவுப் பண்டசாலை ஒன்றினை நிறுவினர். தங்களுக்கு வேண்டிய நுகர்ச்சிப் பொருள்களையும், உடைகளையும், வேறு அத்தியாவசிய பொருள்களையும் இப்பண்டசாலையிலே நியாயமான விலையிலே உறுப்பினர் பெற்றுக்கொண்டனர். அடுத்தபடியாக வீடுகளைக் கட்டித் தமது இல்வாழ்க்கையையும், சமூகச் சூழலையும் சிறப்புறச் செய்தனர். மிகக் குறைந்த கூலியைப் பெற்று அல்லற்பட்ட உறுப்பினர்களுக்கு உதவும் பொருட்டும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டும் கைத்தொழில்களைத் தொடங்கினர். மேலும், உறுப்பினர்களின் நன்மை கருதிச் சங்கம் காணிகளை வாங்கிற்று. இங்கு உறுப்பினர்கள் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பயிரிட்டனர். இதனுல் வேலை வாய்ப்புக்களும் பெருகின. கூட்டுறவு அடிப்படையிலே குடியேற்றங்களை நிறுவுவதே அவர்களின் இலட்சியமாய் இருந்தது.

றெட்டேல் முன்னேடிகளின் வழியைக் கடைப்பிடித்து, உறுப்பினர்களின் பொருளாதார சமூக நிலையினை உயர்த்துவதற்கு இப்பகுதிக் கூட்டுறவாளர் திட்டவட்டமான குறிக்கோள்களைக் கொண்ட அபிவிருத்தித் திட்டத்தினை வகுக்கவேண்டும்.

எதிர்காலத்திலே இச்சமாசம் மேலும் மேலும் செழித்தோங்குமாக! இப்பகுதியிலேயுள்ள மூலைமுடுக்கெல்லாம் கூட்டுறவுத் தத்துவத்தினைப் பரப்பி இப்பகுதியினைச் சிறப்புறச் செய்யுமாக!

**செல்வரசு குக்**

இளைப்பாறிய சிரேஷ்ட கூட்டுறவு
உதவி ஆக்க ஆணையாளர்

வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி

## திரு. P. L. பற்றிக் அவர்களின்

# ஆசிச் செய்தி

*வலிகாமம் வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் வெள்ளி விழாவின் பொழுது எனது வாழ்த்துக்களை இவ்விதழ் மூலம் கூட்டுறவாளருக்கும் சங்கங்களுக்கும் வியாபாரிகளுக்கும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.*

*நூற்றுக்கணக்கான மக்கள்—விற்பனை ஸ்தாபனங்களுக்கு ஒரு மொத்த ஸ்தாபனமாகவும், பல துறைகளில் இப் பகுதிக்கு விலை நிதானமேற்படுத்திப் பதுக்கலையும் ஒழித்துக்கட்டிப் பெருந் தொண்டாற்றியும் விளங்கும் இந்த ஸ்தாபனம் மேலும் அபி விருத்தி வேலைகளிலும் ஈடுபட்டு இப் பகுதிப் பொருளாதார மேம்பாட்டுக்கு உழைக்கவேண்டும் என்று விரும்புகின்றேன்.*

**P. L. பற்றிக்**
காரியாதிகாரி, வலி-வடக்கு

# வெள்ளி விழா ஆசியுரை

திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்கள், மகாஜனக் கல்லூரி அதிபர்.

வலிகாமம் வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் வெள்ளிவிழாக் கொண்டாடும் இவ்வமையம் ஒரு பாராட்டுச் செய்தியை அனுப்புவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு ஸ்தாபனத்தின் சரித்திரத்தில் இருபத்தைந்து ஆண்டுகள் மிகக் குறுகிய காலமேயாகும். இக்கால வெல்லைக்குள் எங்கள் சமாஜம் கூட்டுறவு சிக்கனம் என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு சிறந்த சாதனைகளைச் செய்து ஐக்கிய இயக்கத்தின் வளர்ச்சி வரலாற்றில் தனக்கொரு தனி ஸ்தானத்தைப் பெற்றுக் குன்றின் மேலிட்ட தீபம் போல விளங்கி வருவது எமக்கெல்லாம் பெருமிதம் அளிப்பதாகும். ஆரம்பத்தில் தெல்லிப்பழையிலுள்ள வாடகைக் கட்டிடமொன்றில் அலுவலகத்தையும் பண்டசாலையையும் அமைத்து இயங்கிவந்த சமாஜம் காலக்கிரமத்தில் தமது இயக்குநரின் மதிநுட்பத்தினாலும் செயல்திறனாலும் நிர்வாக ஆற்றலினாலும் சமாஜத்துக்கெனச் சொந்தமான காணிகளைத் தெல்லிப்பழையிலும் சுன்னாகத்திலும் வாங்கி அவற்றில் தேவையான கட்டிடங்களையும் அமைத்துத் தனது பணியைச் சிறப்புறச் செய்து வந்தமை பாராட்டுதற்குரியது. இதைவிடச் சில்லறை வியாபார நிலையங்கள் பலவற்றை மக்கள் நலன் கருதிப் பலவிடங்களிலும் திறந்து நடாத்துவதும் ஈண்டு நினைவு கூருதற்குரியதாகும். இவையெல்லாவற்றினையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முன்னணியில் நின்று உழைத்தவர்களனைவருக்கும் நாம் நன்றி கூறவேண்டியவர்களாகிறோம்.

மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய பொருள்களைத் தருவித்து இலாபகரமாகச் சம பங்கீடு செய்து விநியோகிப்பது ஒரு முக்கிய தொண்டேயாயினும் சமூக முன்னேற்றத்திற்கும் நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்கும் வேண்டற்பாலதாகிய பொருள் உற்பத்தியில் கூட்டுறவு முறையைக் கையாண்டு பல்வேறு தொழில் நிலையங்களை நிறுவிப் புதிய திருப்பத்தை உண்டுபண்ணுவது மிகவும் விரும்பத்தக்கது. அந்தவகையில் எங்கள் சமாஜம் ஒரு மின்தறி நிலையத்தை இவ் வெள்ளி விழா ஆண்டில் ஆரம்பித்துக் கூட்டுறவுத் துறையில் புதியதோர் சகாப்தத்தை ஆரம்பிக்கவிருப்பது வரவேற்கவேண்டியதாகும். அடுத்துவரும் கால் நூற்றாண்டில் உண்டி உடை உறையுள் ஆகியவற்றிற்கு வேண்டிய பொருள்களை உற்பத்தியாக்கும் புது முயற்சியில் ஈடுபட்டு எங்கள் சமாஜம் வெற்றிகாணும் என்பதற்கு இஃது ஒரு சிறந்த அறிகுறியாக இருக்கிறது. ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்னும் உயரிய இலட்சியம் கைத்தொழில், கடற்றொழில், கமத்தொழில் ஆகிய துறைகளில் செயல்பட்டுப் பயன் தருவது மிக விரும்பத்தக்கதே. அது மக்களின் சுகவாழ்வுக்கு வழிகோலுவதாக அமையும்.

மக்களின் நல்வாழ்வையே குறிக்கோளாகக் கொண்டு நீதி நேர்மை ஆகிய பண்புகளுடன் இன்னும் பல இருபத்தைந்து ஆண்டுகள் எங்கள் சமாஜம் தம் பணியினைத் தொடர்ந்து புரிய எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

**தெ. து. ஜயரத்தினம்**



*சமாச நிர்வாகக் காரியதரிசி*

திரு. க. இராமச்சந்திரன் அவர்கள்



பொது முகாமையாளர் திரு. ச. மு. அருளம்பலம் அவர்கள்

*தமது காரியாலயத்திற் கடமையாற்றுகிறார்.*



நிர்வாகசபை மண்டபத்தில் நிர்வாகசபைக் கூட்டம்
நடைபெறுகிறது

# எங்கள் சமாசம்

(சமாசத் தலைவர் — பண்டிதர், திரு. க. நாகலிங்கம் அவர்கள்)

**வ**லிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமே எங்கள் சமாசம். இச் சமாசம் தனது 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து வெள்ளிவிழாப் பருவத்தை எய்தியுள்ளமை இச் சமாசத்தோடு சம்பந்தப் பட்ட அனைவர்க்கும் மகிழ்ச்சி விளைப்பதாகும். இச் சமாசம் இலங்கையின் வடபகுதியிலுள்ள நல்ல சமாசங்களில் ஒன்று என மேலதிகாரிகள் வருணிப்பது வெள்ளிவிழாவையொட்டி அவர்கள் பேசும் புனைந்துரையல்லாமல் உண்மையுரையே என உணரும்போது அம் மகிழ்ச்சி மேலும் இருமடங்காகிறது. வலிகாமம் வடக்கிலுள்ள இச் சமாசத்தின் அங்கத்துவ சங்கங்களும், பொதுமக்களும் மேலதிகாரிகளின் இக்கூற்றை அங்கீகரிப்பதுபோலச் சமாசத்தில் நம்பிக்கை வைத்தொழுகுவது இச் சமாச நிர்வாகிகளுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை விளைக்கிறதென்பதை எடுத்தியம்பவும் வேண்டுமா?

இச் சமாசம் இன்றைய நிலையை அடைந்தமைக்குக் காரணமானோர் யாவர் என்பதைப் பற்றிச் சமாசம் வெள்ளிவிழாக் கொண்டாடும் இந்நேரத்திலாவது நாம் சிந்திப்பது அவசியம். இந்நேரத்தில் ஒரு பழைய வரலாறு ஞாபகத்திற்கு வருகிறது. அது புறநானூற்றில் வரும் ஒரு வரலாற்று ஓவியம். பிசிராந்தையார் ஒரு பண்பட்ட புலவர். நண்பன் உயிர் துறந்தது பொருது உயிர் நீத்த பெரியார். அவரின் வயதையும் உடல் நிலையையும் உணர்ந்த அறிஞர்கள், ''உமக்கு வயது பலவாகியும் முதுமை தோன்றாமைக்குக் காரணம் என்ன'' என வினவினர். புலவர், ''எனது மனைவி, மக்கள், ஏவலாளர், வேந்தன், எனது ஊரிலுள்ளவர்கள் என்னும் ஐந்து பகுதியினரும் நல்லவர்களாக இருத்தலின் எனக்கு முதுமை தோன்றவில்லை'' யெனக் கூறினர். இதுபோல எமது சமாசமும் நல்ல முறையில் நடப்பதற்கு அங்கத்துவ சங்கங்கள், சமாச ஊழியர்கள், நிர்வாகிகள், மேலதிகாரிகள், வலிகாமம் வடக்கிலுள்ள மக்கள் ஆகிய ஐந்து பகுதியாருக்கும் பங்குண்டு என்பது புனைந்துரையாகாது.

ஒரு சங்கமோ சமாசமோ நல்ல முறையில் நடப்பதற்கு அதில் பணிபுரியும் ஊழியர்கள் திறமைவாய்ந்தவர்களாயிருப்பது அவசியம். மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்ட மனிதன் எப்படிக் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாவானோ அவ்வாறே நல்ல ஊழியரைப் பெறாத இயக்கமும் அழிந்தொழிந்து போகுமென்பதில் ஐயமில்லை. எமது சமாச ஊழியர்கள் எல்லாரும் திறமைசாலிகள் என்று, கூற முடியாவிட்டாலும் சமாச வளர்ச்சியில் சிரத்தையுள்ள ஊழியர் பலர் கடமைபுரிகின்றனர் எனப் பெருமையுடன் கூறலாம். சமாச ஊழியர்கள் ஒழுங்கீனங்கள் புரிந்த காலங்களில் அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடபடிக்கைகளும் சிறந்த முறையில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு வழங்கப் பெற்ற நன்மதிப்புகளும் எமது சமாச ஊழியர்களுக்கு எச்சரிக்கையாகவும் தூண்டுகோலாகவும் அமைந்துள்ளன வென்பது பொருத்தமானது.

அங்கத்துவ சங்கங்களைப் பொறுத்தவரையிலும் ஊழியர்களுக்குக் கூறியதுபோலக் கூறிவிடலாம். அங்கத்துவ சங்கங்களிற் பல சிறந்த முறையில் நடைபெற்று வருவதால் தாய்ச் சங்கமாகிய சமாசம் நல்லமுறையில் நடைபெறுகிறது. பல அங்கங்களிற் பழுதேற்பட்ட மனிதன் உய்வடைவது இயலாது. ஒரு அங்கமாவது பழுதின்றி வாழ்பவனே நல்வாழ்வு வாழ்பவனாவான். அதுபோல அங்கத்துவ சங்கங்கள் அனைத்தையுந் திருத்தி நடாத்தல் சமாச வளர்ச்சியில் கருத்துடைய அனைவரதுங் கடனாகும். நல்ல முறையில் நடைபெறாத நிலையங்களைப் பொறுப்பேற்று நடாத்த எமது சமாசம் எந்தநேரமும் ஆயத்தமாக உள்ளதென்பதையும் சமாசம் நடாத்திவரும் எந்த நிலயத்தையும் நல்லமுறையில் நடாத்த அவ்வூர்ச் சங்கம் முன்வரும்போது கொடுக்கத் தயாராக உள்ளதென்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

ஒரு சமாசம் நல்முறையில் நடப்பதற்கு நிர்வாகசபையின் பொறுப்பும் கடமையும் மிக மிக முக்கியமானவையென்பதை நாம்

மறக்கவோ மறுக்கவோ முடியாது. நிர்வாகிகள் சமாச வளர்ச்சிக்குப் பாதகமாக அமையுங்கால் அச் சமாசம் வளர்ச்சிகுன்றி அழிந்தொழியும் என்பதில் ஐயமில்லை. வெளியில் இருந்து வருந் தீமைகள் தரும் அழிவிலும் உள்ளிருந்து வருந் தீங்கு பொல்லாததென்பது சரித்திரங் கண்ட உண்மை.

" பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி யுறும் "

என்பது திருக்குறள். பகைவரால், வரக்கடவதாகிய தீங்கிலும் பார்க்க எழுபதுகோடி தீங்கு நல்ல நினைவற்ற மந்திரியால் வருமென்பதை நாம் மறந்துவிடாமல், சமாசத்தை வளர்க்கும் நினைவின்றித் தம்மை வளர்க்கும் நினைவுடையோரை நிர்வாகசபை கொண்டிருக்காமற் காரியமாற்றும் பொறுப்பு அங்கத்துவ சங்கங்களைச் சார்ந்தது. சமாச நிர்வாகிகளைப்பற்றி இரண்டொரு வார்த்தை கூறுவது அவசியம். எமது நிர்வாகசபையில் கூட்டுறவுத் துறையிற் பழுத்த அனுபவமும், சுயநலங் கருதாக் கடமையுணர்ச்சியும் வாய்ந்த பலர் இடம் பெற்றிருக்கிறார்களென்பதைப் பெருமையுடன் கூறலாம்.

சமாச வளர்ச்சியில் மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு, வழிகாட்டுதல் என்பன முக்கியமான இடத்தை வகிக்கின்றன. இச் சமாச வளர்ச்சிக்குக் கூட்டுறவுத்துறை உத்தியோகத்தர்கள் தக்க புத்திமதி கூறி வழிகாட்டி வருகின்றனர். குறிப்பாக யாழ். மேற்குக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. பூ. குமாரசாமி அவர்கள் சமாசப் பணத்தைச் செட்டாக உபயோகிக்கவும் நட்டம் வராத தொழில் துறைகளில் சமாசம் ஈடுபடவும் கண்காணித்து வழிகாட்டிவருஞ்செயல் நன்றியறிதலுடன் பாராட்டத்தகுந்தது.

வலிகாமம் வடக்கிலுள்ள மக்கள் நல்லவர்கள்; பிழையைத் துணிவுடன் எடுத்துக் கூறத்தக்கவர்கள் ; இடித்துத் திருத்த வல்லவர்கள். சமாசத்தின் நடைமுறைகளில் ஏதும் பிழைபாடுகள் — குறைபாடுகள் காணப்பட்டால் நிர்வாகிகள் கவனத்திற்கு வரச்செய்பவர்கள். ஆதலால், சமாசத் தேர் நல்லமுறையில் ஓடாமலிருப்பதற்கு நியாயமுண்டோ ?

சமாசம் வளர்ச்சிக்கேற்ற நல்வாய்ப்புக்களைப் பெற்றிருப்பதால் வளர்ந்து செல்கிறது. இவ்வாண்டில் பாண் தயாரிக்கும் நிலையம் ஒன்றைச் சமாசம் பொறுப்பேற்று நல்லமுறையில் நடத்தி வருகிறது. மின்தறி நிலையமொன்றை ஊறணிக் கிராமத்தில் அமைப்பதற்குத் துரிதமான நடபடிக்கைகளைச் சமாசம் மேற்கொண்டுள்ளது. மீன்பிடி உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் என்பவற்றின் விற்பனை நிலையமொன்றையும் சமாசம் மயிலிட்டிக் கிராமத்தில் நிறுவியுள்ளது. வெள்ளிவிழா ஆண்டு சமாசத்தின் விடிவெள்ளி தோன்றுங் காலமாக அமைந்துள்ளது. சமாசத்தின் அருணோதயத்தை எதிர்பார்த்துக் கூட்டுறவுப் பணியை மேற்கொள்வோம் வாரீரெனச் சம்பந்தப்பட்ட அனைவர்க்கும் நேசக்கரம்நீட்டி அழைப்பு விடுத்து அமைகிறோம்.

✻

மேற்றிசை நாடுகளில் கூட்டுறவு இயக்கம் தோன்றி வளர்ந்த முறைக்கும் இந்நாட்டிற் கூட்டுறவு இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட தன்மைக்கும் இடையே பெரிய வித்தியாசங் காணப்படுகிறது. மேலை நாடுகளில் கூட்டுறவு இயக்கம் மக்களால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு இயக்கமாக வளர்ந்திருக்கிறது. இலங்கையிற் கூட்டுறவு இயக்கத்தை அரசினர் ஆரம்பித்து வைத்தது மட்டுமல்லாமல் அரசினரால் ஆதரிக்கப்பட்டும் வருகிறது. இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை மக்கள் முற்றாகத் தமது சொந்த இயக்கமாக இன்னும் ஆக்கிக்கொள்ளவில்லை. கூட்டுறவு இயக்கம் இலங்கையில் மக்கள் இயக்கமாக வந்தபிறகே அதனால் அடையக்கூடிய முழு நன்மையையும் மக்கள் அடைய முடியும். நேர்மை, விசுவாசம், முயற்சி, பரஸ்பர உதவி என்பன கூட்டுறவு இயக்கத்தின் நான்கு கால்கள் என்பது மிகையாகாது.

# வலிகாமம் வடக்கில் கூட்டுறவு நாணய இயக்கம்

பிரமஸ்ரீ சீ. கார்த்திகேய ஐயர் அவர்கள் — முன்னாள் தலைவர்

ஐம்பது வருடங்களின் முன்னர் வலிகாமம் வடக்கில் கூட்டுறவு இயக்கம் என்பது மிகச் சிலருக்குத்தான் தெரிந்திருந்தது. ''வலிகாமம் வடக்கு'' என்ற பெயரில் ஒரு நாணயசங்கம் செயற்பட்டிருந்தது. வலிகாமம் வடக்கு என்னும் பெயரை உடையதாயிருந்தும் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலு முள்ளோர் அதில் அங்கம் வகித்தனர். ஆதலால் அதனை நல்லமுறையில் நடத்துவது மிகவும் சங்கடமாயிருந்தது. எனவே, இச் சங்கம் 1925ஆம் ஆண்டில் பதிவு அழிக்கப்பட்டு அதற்குப் பதிலாகத் தெல்லிப்பழை வவுனவத்தை, தெல்லிப்பழை மத்தி, தெல்லிப்பழை தென்மேற்கு என்னும் ஐக்கிய நர்ணய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அக்காலத்தில் வலிகாமம் வடக்கின் பல பாகங்களிலும் பல நாணய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அவைகளுள் நல்ல நிலையில் இயங்கியவைகளுள் மயிலிட்டி தெற்கு ஐ. நா. ச., ஏழாலை தெற்கு ஐ. நா. ச., கந்தரோடை ஐ. நா. ச., அளவெட்டி தெற்கு ஐ. நா. ச., சுன்னுகம் ஐ. நா. ச. முதலியன சில. மேற்கூறப்பட்ட சங்கங்கள் முதல் வகுப்புச் சங்கங்களாய்ப் பல வருடங்கள் விளங்கின. சில இன்றும் விளங்குகின்றன. மயிலிட்டி தெற்குச் சங்கம் மிக உன்னத நிலையில் பல வருடங்கள் விளங்கியது. வருடா வருடம் நாணயசங்கங்களுக்கிடையில், யாழ்ப்பாண மாகாண வங்கியால் நடத்தப்பட்ட கேடயப் பரிசை இச்சங்கம் அடுத்தடுத்து ஐந்து வருடங்களாகப் பெற்றது.

1928ஆம் ஆண்டு முற்பகுதியில் வலிகாமம் வடக்கிலுள்ள நாணய சங்கங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு மேற்பார்வைச் சபையை உண்டாக்கின. இச் சபை வருடாந்தப் பயிற்சி வகுப்புகள், சங்கங்களை மேற்பார்வை செய்தல், சங்கங்களின் கணக்குகளைச் சரிவர எழுதுவதற்கு உதவிசெய்தல், புதிய சங்கங்களை உண்டாக்கல் முதலான தொழில்களைச் செய்து வந்தது. அதற்கெனத் திருவாளர்கள்: வி. ஆர். முருகேசு, சு. சிவசுப்பிரமணிய ஐயர், அ. கந்தையா, க. பொன்னம்பலம், சி. தம்பு, வ. கந்தவனம், சீ. கார்த்திகேய ஐயர் முதலாயினேர் நியமிக்கப்பட்டு அவர்கள் மூலம் மேற்காட்டிய நோக்கங்கள் நடைமுறையிற் கொண்டு வரப்பட்டன. 1936ஆம் வருடம் வரையும் இப்பிரிவிலுள்ள சங்கங்கள் நல்ல நிலையில் இயங்கிவந்தன. ஏறக்குறைய 60 சங்கங்களில் 18க்கு மேல் முதல் வகுப்பில் இருந்தன. இரண்டாம் உலக யுத்தந் தொடங்கியதும் உணவு விநியோக நிமித்தம் ஒரு நாளில் 1000 பண்டசாலைகள் பதியப் பெற்றன. விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முதலியன காலகதியில் உண்டாக்கப்பட்டன. இவைகள் நல்ல நோக்கத்துடன் பதியப்பெற்ருலும், அங்கத்தவர்களுக் கிடையில் உண்டான போட்டி, பூசல், பொருமை, சுயநலம் முதலிய குணங்கள் இச் சங்கங்களின் விருத்தியை மிகவும் பாதித்தன; இன்றும் பாதிக்கின்றன. நாணயசங்கங்கள் என்ற பெயரும் அற்றுவிட்டது.

இதற்கெல்லாம் முக்கியகாரணம் அங்கத்தவரிடத்தில் கூட்டுறவு விதிகள், சட்டங்கள் என்பனவற்றில் போதிய அறிவின்மையே. ஆரம்பகாலத்தில் ஒரு நாணய சங்கத்தைப் பதியமுன் அங்கத்தவர்களிடம் கூட்டுறவுச் சட்டம், விதி, உபவிதி என்பவைகளில் போதிய அறிவு இருக்கிறதா எனப் பதிவு காரியஸ்தர் அங்கத்தவர்களைப் பரிசோதித்துத் திருப்திப்பட்டால்தான் அதனைப் பதிவு செய்வார். நேர்மை, முயற்சி, பொருளாதாரவிருத்தி என்பவைகளை இச் சங்கங்கள் வெளிப்படையாகக் காட்டின. ஆகையாற்றான் நாணய சங்கம் கூட்டுறவு இயக்கத்தின் முள்ளந்தண்டு என்றும், மூலவேர் என்றும் கூறப்படுகிறது. ஆகவே, இச் சங்கங்களைப் புனருத்தாரணம் செய்வதெனில் மேடைப் பிரசங்கத்தாற் பயனில்லை. ஆகையால் அரசாங்கபரிசோதகர்கள், கௌரவ மேற்பார்வையாளர், கூட்டுறவாளர்கள் முதலானேர் ஒன்று சேர்ந்து சங்கங்களைத் திருத்துவதற்கு முயற்சி செய்யின் ஒரு சிறிது வெற்றி பெறலாமென்பது எனது தாழ்மையான கருத்து.

# கூட்டுறவுக் கல்வி

திரு. க. பரமோதயன் அவர்கள் B. A. (Cey.), Dip. Ed. (Cey.), Dip. Ed. (Lond).
அதிபர், யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி



**வ**லிகாமம் வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது வெள்ளி விழாவை முன்னிட்டு வெளியிட விருக்கும் வெள்ளிவிழா மலரில் எனது கட்டுரை யொன்றைப் பிரசுரிக்கத் தீர்மானித்து என்னை எழுதும்படி கேட்டுக்கொண்டமை கூட்டுறவுக் கல்விக்கு அவர்கள் அளித்த பெருமை என்றே நான் கருதுகிறேன். எனவே, கூட்டுறவுக் கல்வி பற்றிய ஒரு சில கருத்துக்களை ஆராய முற்படுகிறேன்.

சாளிசு கீதே (Charles Gide) கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தை மிகவும் அழகாக விளக்கியுள்ளார். "ஏற்கனவே வேண்டிய அறிவையும் போதிய நம்பிக்கையையும் பெற்றிராத மக்கள், சுய உதவியின் அடிப்படையில் தாமே தமது வியாபாரிகள், வங்கியாளர்கள், பற்றுளர்கள், காப்புறுதியாளர்கள், ஏன் முதலாளிகளாகக் கடமையாற்ற ஆசைப்படுவது அமைந்துணர்வற்ற மூடத்தனமாகும்." இதனுல் கூட்டுறவு முயற்சிக்கு இன்றியமையாத கல்வியறிவையும் அதிலிருந்து பிறக்கும் நம்பிக்கையையும் வலியுறுத்தியுள்ளார்.

கூட்டுறவுக்கல்வி கூட்டுறவின் உயரிய நோக்கத்தை நிறைவேற்ற உதவுவதாக கலாநிதி வோக்கே (Dr. Fauquet) கருதுகிறுர். அவர் கூற்றின்படி ஒரு கூட்டுறவு நிலையத்தின் அடிப்படை நோக்கம் அதன் அங்கத்தவர்களின் பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்துவதே யாகும். என்றுலும் அதை நிறைவேற்றக் கையாளப்படும் வழிவகைகளினுலும் அங்கத்தவர்களாற் கடைப்பிடிக்கப்படும் சில ஒழுங்கு முறைகளினுலும் பிறிதோர் உயரிய நோக்கம் நிறைவேற்றப்படுகின்றது. அது யாதெனில், மனிதனை மனிதனுக்குதல் — அதாவது தனித்தும் ஒருமித்தும் மனிதனிடத்தில் பொறுப்புணர்ச்சியை வளரச்செய்தல். தனி மனிதன் என்ற அடிப்படையில் சுய நிறைவேற்றத்தைக் காண்பதுடன் பிறருடன் வாழப் பிறந்தவன் என்ற கோதாவில் முழுமையான சமுதாய வாழ்க்கையை வாழச் செய்வதே கூட்டுறவின் நோக்கமாகும். அந்நோக்கத்தை நிறைவேற்றக் கூட்டுறவுக் கல்வி இன்றியமையாதது. மனிதன் தன்னைத்தானே கூட்டுறவின் மூலம் உயர்த்திக்கொள்ள உதவியளிக்கும் முகமாக கூட்டுறவில் அக்கறை கொண்ட அனைவரும் கல்வியின் மூலம் மக்களைக் கூட்டுறவாளர்களாக்க முயலவேண்டும் என்கிறுர் கலாநிதி வோக்கே.

அடுத்து வாற்கின்சினுடைய (W.P. Watkins) கருத்தை உற்றுநோக்குவோம்: "கூட்டுறவு இயக்கம் கல்வியை உபயோகிக்கும் பொருளாதார இயக்கம் என்று பலர் கூறுவதுண்டு. ஆனுல் அக்கூற்றை மாற்றிக் கூறிய போதும் அது உண்மையானதாகும். கூட்டுறவு பொருளாதார நடைமுறைகளைக் கையாளும் ஒரு கல்வி இயக்கமாகும்". மேற் குறிப்பிட்ட கூட்டுறவுப் பேரறிஞர்களின் கருத்துக்களில் கூட்டுறவுக்கல்வியின் முக்கியத்துவமும் நோக்கமும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தை உணர்ந்த ரேச்டேல் முன்னுேடிகள் 1852இல் தமது சங்கத்தின் மொத்த லாபத்தில் 2½ வீதத்தைக் கூட்டுறவுக் கல்விக்கென்று ஒதுக்கி வைப்பதெனத் தீர்மானித்தனர். 1870 இல் தான் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் ஒரு கல்விச் சட்டம் அமுலாக்கப்பட்டு யாவருக்கும் எவ்வித பாகுபாடுமின்றிக் கல்வி அளிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன.

அதுவரை கல்விக்குரிய பல பொறுப்புக்களைக் கூட்டுறவாளர்களே ஏற்று வந்தனர் என்று ஒலீயோக்குப் (Holyoake) போன்ற சரித்திர வாசிரியர்கள் கூறுகின்றனர். 1870இல் இடம் பெற்ற கூட்டுறவு மகாநாட்டில் சகல அங்கத்துவ சங்கங்களும் கல்விக்கென $2\frac{1}{2}$ வீத மாவது ஒதுக்கி வைக்கவேண்டும் என்ற பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1880இல் ஆக்ஸ்போட்டில் (Oxford) நடைபெற்ற மகா நாட்டில் ''குடிமக்களுக்குக் கல்வியூட்டுவதே கூட்டுறவாளர்களின் முக்கிய கடமை'' என்று ஆனல்டு டோயின்பீ (Arnold Toynbee) எடுத் துரைத்தார்.

அன்று தொட்டு இற்றைவரை கூட்டுறவுக் கல்வி உலகம் முழுவதிலும் விருத்தியடைந்து வந்திருக்கின்றது. இளைஞர்களுக்குக் கூட்டுறவுத் தத்துவத்தைப் போதித்து அவர்களுக்குக் கூட்டுறவுப் பாதையைக் காட்டக்கூடிய முறை யில் பல நாடுகளில் கூட்டுறவுக்கல்வி போதிக் கப்பட்டு வருகின்றது.

கூட்டுறவு ஒரு தனித்தத்துவமாகப் பல பல்கலைக்கழகங்களிற் போதிக்கப்பட்டு வரு கின்றது. கனடாவிலும், ஐ. அ. நாடுகளிலும், மேலதிகமான பல்கலைக்கழகங்களிலும், ஏறத் தாழ எல்லா ஐரோப்பியப் பல்கலைக்கழகங் களிலும், எகிப்து, இந்தியா, பிலிப்பீன்ஸ், தாய்லாந்து, நைஜீரியா, லிபியா, பனுமா, பிறேசில் போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள சில பல்கலைக்கழகங்களிலும், தொழில் நுட்ப அல்லது விவசாய அல்லது ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலும் கூட்டுறவு தனிக்கலையாகப் போதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இன்னும் பல நாடுகளில் பாடசாலைகளின் பாடத்திட்டங்களில் கூட்டுறவு ஒரு பாடமாக இடம்பெற்றுள்ளது. பேயின், ஆசெந்தைனு, செக்கோசிலவக்கியா, கனடா, ஐ. அ. நாடுகள், லிபியா, நைஜீரியா போன்ற நாடுகள் அதற்குச் சில உதாரணங்களாகும்.

பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் பல நாடுகளில் அபிவிருத்தியடைந்து வருகின்றன. பிரான்சு, போலாந்து, ஆசெந்தைனு, பிறேசில், பெல்சியம், கனடா, சைப்பிரஸ், கொலம்பியா, கிறீசு, இந்தியா, யப்பான், வடறெடேசியா, சுவிற்சலாந்து, இங்கிலாந்து, ஐ. அ. நாடுகள் ஆகியன சிறந்த உதாரணங்களாகும்.

கூட்டுறவின் மூலம் அபிவிருத்தியடைந்து ஈற்றில் ஒரு தேசீய இனத்தை உருவாக்குவதே கூட்டுறவாளரின் ஒரேயொரு குறிக்கோளாய் இருத்தல் வேண்டும். அதை நிறைவேற்ற வல்ல ஆய்வறிவாளர்களைப் போதிய அளவில் பெற்றுக் கொடுப்பதே கூட்டுறவுக் கல்வியின் முக்கிய நோக்கமாகும். இலட்சிய வேட்கை மிக்க இளைஞர்களைத் தெரிந்து கூட்டுறவுத் தத்துவத்தின் மகத்துவத்தை அவர்களுக்குப் போதிப்பதன் மூலம்தான் நாம் விரும்பும் சமுதாயத்தை எம்மால் கட்டியெழுப்ப முடியும். அதற்கு எல்லாக் கூட்டுறவாளர் களும், பல்வகைப்பட்ட கூட்டுறவுத் தாபனங் களும், ஒத்துழைக்க வேண்டும்.

வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுற வுச் சங்கங்களின் சமாசம் பல துறைகளில் வெற்றியீட்டி வருவதைக் கண்டு பெருமைப்படு கிறேன். அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழாவில் பேசியபோது கூறியதை மீண்டும் இங்கு குறிப்பிட ஆசைப்படு கிறேன். விசையிலும்பார்க்கத் திசையே முக்கியம்.

வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுற வுச் சங்கங்களின் சமாசம் கூட்டுறவுக் கல்விக்கு முதலிடம் கொடுத்து எமது நாட்டின் அபி விருத்தியில் பெரும்பங்கெடுக்கவேண்டும் என்று ஆசிக்கின்றேன். அதை நிறைவேற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறேன்.

# தொழில்வளம் நோக்கி........

திரு. வை. சி. சிவஞானம் அவர்கள் — முன்னாள் கௌரவ காரியதரிசி

**பி**றந்து, தவழ்ந்து, விளையாடி, குறும்புகள் பல புரிந்து, கூட்டுறவுக் கொள்கையில் நல்லனுபவங்கள் பெற்று, ''நற்குடிமகன்'' என வாழ்த்தும் வாலிபப் பருவத்தையடைந்து, அதற்கு அறிகுறியாக வெள்ளி விழாக் கொண்டாடிடும் இன்பநிலையை அடைந்துள்ளது வலி-வடக்குப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். இது நுகர்வோர் பண்டசாலைச் சங்கங்களின் சமாசமாகப் பிறந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமாக வளர்ச்சியுற்றுள்ளது.

வெள்ளிவிழாக் கொண்டாடும் சமாசக் குமரனின் பருவநிலை கண்டு பூரிப்படைகிறாள் வலிவடக்குப் பூமித்தாய். அல்லற்பட்டு, ஆற்றாது கண்ணீர்சிந்தி, வறுமை மிஞ்சி வாடி வதங்கிக் கிடக்கும் வலி வடக்குப் பூமித்தாய் தானீன்ற தவப்புதல்வனின் புதுப்பொலிவு கண்டு புளகாங்கித மடைகிறாள். ''மண் சோறு கறி காய்ச்சி விளையாடும்'' சின்னஞ்சிறு பருவத்திற் கூடக் குடும்பநிலை கண்டு தன் சக்திக்கு மேலாகத் துணிச்சலுடன் கடமைகளையேற்றுக் கண்ணியமாகச் செயலாற்றிய தன் மகன் திறனைக் கண்டு இறும்பூதெய்துகிறாள். வாடகைக் குடிசையில் வாழ்ந்த அவன் தன்னயரா உழைப்பால் சொந்த நிலம் வாங்கி மாடிக் கட்டிடங்களை யமைத்துத் தொழில் நடத்தும் திறனைக்கண்டு பேருவகை கொள்கிறாள்.

பண்டங்களை, நுகர்வோருக்குப் பரப்புஞ் சேவையைப் பண்புடன் செயலாற்றவேண்டுமெனப் பெற்றெடுத்த சமாசக் குமரனைத் தன் பலநோக்கங்களையும் நிறைவேற்றும் செயல் வீரனெனவே நினைத்து வளர்த்திட்டாள். கூட்டுறவுக் கொள்கையைக் கொல்லும் நச்சுக் கிருமிகளின் தாக்குதலால் உடல் மெலிந்து உயிர் ஊசலாடும் நிலையில் தேர்ச்சி பெற்ற வைத்திய சிகாமணிகளின் அருமருந்து கொண்டு நின் இன்னுயிரைக் காப்பாற்றியுள்ளாள். வஞ்சகர் விரித்த வலையில் தஞ்சமெனவிழாது, கூட்டுறவுக் கொள்கைகளை வெட்டிப் புதைக்கும் வேங்கைகளின் கொடும்பசிக்கு இரையாகாது, தன் கண்ணைக் காவலாக்கிக் கரத்தைத் தொட்டிலாக்கித் தன்னிரத்தத்தையே உணவாக்கி உன்னை உருவாக்கியுள்ளாள்.

ஏன்? உன் செயல்திறனால், நிருவாக சத்தியால் அமைப்புத் தன்மையால், ஆற்றல் மிகுதியால் பரந்து செறிந்து கிடக்கும் தன் உற்பத்திக் காரணிகளை ஒன்றுதிரட்டித் தன் தொழில்வளம் பெருக்கி பொருள்வளம் கொழிக்கச் செய்வாய் என்ற, பூமித்தாயின் இலட்சிய வேட்கையே உன் வலுவும் வனப்பும் வளமும் நிறைந்த வெள்ளிவிழாவின் இன்பத் தோற்றம் என்பதை மறந்துவிடாதே.

பண்டங்களை நுகர்வோருக்குப் பரப்புந் தொழிலில் சிறு நெளிவு சுழிவுகளிருந்தாலும் கூடக் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக மெச்சத்தகுந்த முறையில் செயலாற்றி விட்டாய். உன் சக்தியை, அறிவை, ஆற்றலைப் பயன்படுத்தாமல் இயந்திரசக்தி முறையில் செயற்படும் அளவுக்குப் பழக்கப்பட்டு விட்டதே. இயந்திரத்தில் கோளாறுகள் ஏற்படும் காலங்களில் மட்டும் உன்னறிவைச் சக்தியைப் பயன்படுத்தினாற் போதும். ஏனைய நேரங்களில் உன் நினைவும், செயலும், ஆர்வமும், அறிவும், ஆற்றல் முழுவதும் பொருள் வளம் பெருக்கும் தொழில் வளம் நோக்கிச் செலுத்துக.

துடுக்கும் மிடுக்கும் நிறைந்த வாலிபனுக்கு வளமான வாழ்வின் பொறுப்பைத் திணிக்க மணவிழாக் கொண்டாடி மகிழ்ந்திடும் மாதாவைப் போன்று சமாசத் திருக்குமரனே வலி-வடக்குப் பூமித்தாய் உனக்கு வெள்ளிவிழாக் கொண்டாடுகிறாள் என்பதை மறந்துவிடாதே.

வெள்ளிவிழாவுக்கு முன் உன் பொறுப்பை உணர்ந்து **உற்பத்தித் தொழிலுக்கு சிறு கல்** லொன்று அடிக்கல்லாய் நாட்டிவிட்ட உன்

நற்பண்பு கண்டு அகமகிழும் அன்னையின் இலட்சியக் கனவு நிறைவுற நீ அயராது உழைக்கவேண்டும். சுன்னுகத்தில் மிளிரும் பண்டங்களைப் பரப்பும் களஞ்சியக் கட்டிடம் போன்று உன் தொழிற்பரப்பில் பல்வேறு இடங்களில் பல தொழிற்சாலைகள் உருவாக வேண்டும்.

உன் தொழிற் பரப்பில் மிளிரும் தொழிற் சாலைகளைக் கண் திறந்து பார்! அரசாங்கத் தொழிலமைப்பிலுள்ள சீமெந்துத் தொழிற் சாலையைப் பார். பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் தொழில் வாய்ப்பும் போதிய இலாபமும் கொடுக்கும் தொழில் நிலையமாக விளங்குவதை உன் கூட்டுறவுள்ளத்தில் பதித்திடு! அதன் அயலிலே தனியார்துறையமைப்பாக விளங்கிடும் அலுமினியம் தொழிற்சாலையைக் கண் திறந்து பார்! அதனருகே தோன்றிடும் வாளித் தொழிற்சாலையைப் பார்! தரமும் திறமும் மிகுந்து வலி-வடக்கின் வளத்தைப் பரப்பும் சின்னங்களெனத் திகழ்கின்றன என்பதை உன் கூட்டுறவுக் கண்ணில் பதி......?

வலி-வடக்கின் தொழில் வளம் நோக்கிப் பொருள்வளந் தேடப் புகுத்திடும் வீரவிழாவென வெள்ளி விழாவைக் கொள். படித்துப் பட்டம் பெற்ற பல இளைஞர் உண்டு உன் மடியில். களைத்திடாது உழைத்திடும் காளையர் ஆயிரக்கணக்கில் உண்டு உன் காலடியில். திட்டங்கள் தந்திடும் நிபுணர்களும் உண்டு உன்னிடம். வேண்டும் முதல் திரட்டக் கூட்டுறவுக் கொள்கையுண்டு. ஒன்றுசேர்த்து ஒற்றுமை பூண்டு கூட்டுறவுக் குரல் கொடுத்து உற்பத்திக் காரணிகளுக்கு உரிய பயன் ஏற்படச் செய்யும் பணி இவ்விழாவில் உன் தலைமேல் சுமத்தப்படுகிறதென்பதை எக்கணமும் மறந்திடாதே. வலி—வடக்கின் உயர்வு உன் கையில்; படித்துப் பட்டம்பெற்ற இளைஞர்களின் எதிர்காலம் உன் கையில்; உவகையுடன் உழைப்பை நல்கும் உத்தம வாலிபர்களின் வருங்காலம் உன் கையில்; வறுமையின் பிடியிற் சிக்கி வாடும் சிறு குடிசைக் கைத்தொழில்களின் எதிர்காலம் உன் கரத்தில்; வளர்ச்சியுற்ற கூட்டுறவுச் சமாசங்களின் செயல் திறன்களை எண்ணிப் பார்.....? நீ பிறந்த பொன்னுட்டுக்குச் செய்ய வேண்டிய புனிதப் பணிகளைச் சிந்தித்துப் பார்......! சிந்தனையில் தெளிவுற்றுத் தகுந்த திட்டங்களைத் தீட்டு. பொருள்வளம் கொழிக்கும் தொழில்வளம் நோக்கி இலட்சியப் பாதையில் பீடுநடையிற் செல்.

தொழில்வளம் நோக்கி நீ செல்லும் பாதை மிருதுவானதல்ல. தடைகள் பலவும், குறையாத இன்னல்களும், குத்தும் முட்களும், இடறும் கற்களும் நிறைந்த பாதைதான். ஆழக் கிணற்றுன் அதிஉயரப்பனையின் உதவிகொண்டு தொழில்வளம் பெருக்கிய பழந்தமிழர் குடியில் பிறந்த உனக்கு இவை என் செய்யும்? வளம் பல மலி வலி—வடக்கின் வளமான எதிர்கால இன்ப நினைவுகள் எவ்விதத் தடைகளையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலை உனக்குத் தரும். அசையாத கூட்டுறவு இலட்சியம் தாங்க முடியாத துயரங்களையும், தொல்லைகளையும் தாங்கும் வலிமையைத் தரும். தளராதே! தயங்காதே! காத்திருக்காதே! காலம் வந்து விட்டது. நேரம் நெருங்கிவிட்டது. புறப்படு தொழில்வளம் நோக்கி... ..

⁂

கூட்டுறவு இயக்கம் இன்றைய உலகில் ஒரு ஒப்பற்ற ஒளடதம் போன்றது. இக்காலத்தில் இரண்டு பெருங் கட்சிகள் உலகிற் பெருத்து ஒன்றேடொன்று போட்டியிடுகின்றன. ஒன்று முதலாளித்துவம். மற்றது 'கம்மியூனிசிம்' என்னும் பொதுவுடைமைக் கொள்கை. முதலாளித்துவம் பணத்திற்கு முதலாமிடமும் மனிதனுக்கு இரண்டாமிடமுங் கொடுக்கின்றது. 'கம்மியூனிசிம்' மக்களின் சுதந்திரத்தைத் தகர்த்துப் புரட்சியை மேற்கொண்டு வலோற்காரமாக மக்கள் யாவரையுஞ் சமமாக்கலாம் என்று கருதுகிறது. இவ்விரு பெரும் பிளவுபட்ட கொள்கைகளினூலே நசுக்கப்பட்ட மக்களுக்கு விமோசனங் கொடுக்கும் மார்க்கமாகக் கூட்டுறவு இயக்கம் ஒளிவீசுகிறது. இந்த இயக்கம் முதலாளித்துவம், பொதுவுடைமை ஆகிய இரண்டிலுமுள்ள தீயவற்றை நீக்கி அவற்றின் நன்மைகளை ஒன்றுசேர்த்து ஒரு மத்திய பாதையைக் காட்டியிருக்கின்றது.

— **அ. அருளம்பலம்,** முன்னுள் வடபகுதி ஐ. மே. ச. காரியதரிசி

# போதும் விற்பனை, பொருளுற்பத்தி பெருகட்டும்

திரு. வ. பொன்னம்பலம், எம். ஏ. அவர்கள்
தலைவர், ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி



அபிவிருத்தி பெற்றுவரும் ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களில் உள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்று. இலங்கையின் பொருளாதாரப் புனரமைப்பில் பொதுத் துறை, தனியார்துறை, கூட்டுறவுத்துறை யென்று மூன்று பெரும்பிரிவுகள் காணப்படுகின்றன. 400க் கதிகமான திணைக் களங்களும் 30க்கு மேற்பட்ட கூட்டுத் தாபனங்களும் பொதுத் துறையின் சிறப்பான இயல்பினை எமக்கு நினைவூட்டுகின்றன. பொதுத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கனரகத் தொழில்கள், மக்கள் சேவைக்கான சில தொண்டுகள் போன்றன மேற்கொள்ளப் படுகின்றன.

இலங்கையின் செல்வ உற்பத்தியில் தனியார் துறையும் பிரதான இடத்தை வகித்து வருவது இன்றைய பொருளாதாரத்தின் அம்சமாகும். எனினும் பொதுவாகப் பாவனைப் பொருள் விற்பனையும் சிறப்பாக அத்தியாவசியப் பொருட் பங்கீடும் இரண்டாம் உலக யுத்தத்தை அடுத்து அரசாங்க ஆதரவு பெற்ற கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இதற்கமையவே 4-3-1944இல் எமது வலி-வடக்குச் சமாசமும் பண்டசாலைச் சங்கங்களின் சமாசமாக ஆரம்பிக்கப்பட்டது. கூட்டுறவுத் துறையில் 1956ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அமைப்பிற்கு அமைய பல பண்டசாலைச் சங்கங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாகப் பதியப்பட்டன. ஆனால் இப் பெயர் மாற்றத்திற் கேற்பச் சங்கங்கள் தமது நோக்கங்களை மாற்ற முன்வரவில்லை. ஆனால் பெயருக்கேற்றபடி நாட்டின் பல பாகங்களிலும் சில சங்கங்கள் செயற்பட்டு இயங்கி வருவது உண்மையே. எனினும் பல சமாசங்கள் பலநோக்கக் கூட்டுறவு இயல்பைப் பெற இன்னமும் தவறிவிட்டன என்றே கூற வேண்டும்.

வெள்ளி விழாக் கொண்டாடும் எமது சமாசம் அத்தியாவசியப் பொருள் விற்பனவுத் துறையில் ஆற்றிவந்த சேவை குறிப்பிடத்தக்கது. ஒரு இலட்சத்திற்கு அதிகமான மக்கள் எமது சமாசத்தின் சேவையில் பேணிக் காப்பாற்றப்படுகின்றார்களென்றால் இதன் வெற்றிக்கு உழைத்த, உழைக்கும் நிருவாகிகள். பணியாளர்கள், தொழிலாளர்கள் அனைவருக்கும் சமாசத்தின் உறுப்பாக விளங்கும் ப. நோ. கூ. சங்கங்கள் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளன. எமது சமாசத்தின் தற்போதைய தலைவராக விளங்கும் பண்டிதர் திரு. க. நாலிங்கம் அவர்களின் சேவை உணர்வும் அயரா உழைப்பும் பெரிதும் பாராட்டத்தக்கன. பண்டிதர் அவர்களின் தலைமையில் சமாசம் மேன்மேலும் வெற்றி காண வாழ்த்துகிறேன். அளவெட்டி ப. நோ. கூ. சங்கத்தின் பிரதிநிதியாகவும் உப தலைவராகவும் இருக்கும் இவரே எமது சமாசத்தின் தலைவராக இருக்கின்றாரென்பதை நினைக்க எமக்குப் பெருமையும் பெரு மகிழ்ச்சியும் ஏற்படுவது இயல்பே.

25ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் எமது சமாசம் விற்பனை முறையை மேலும் குற்றங்குறை நீக்கித் திருந்திய வடிவில் அமைப்பதுடன், புதிய வளர்ச்சிக் கட்டமாம் பொருளுற்பத்தியிலும் அடியெடுத்து வைக்க இருப்பதை அறிந்து அங்கத்துவ சங்கங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றன.

எனவேதான் போதும் விற்பனை பொருளுற்பத்தி பெருகட்டும் என்று நாம் சங்கங்களுக்கும் அதன் தாயாக விளங்கும் சமாசத்திற்கும் சொல்ல வேண்டியுள்ளது.

வலி–வடக்குப்பகுதி பழ வகைகளுக்கும், காய்கறிகளுக்கும் பிரசித்திபெற்று விளங்குகின்றது. வெங்காய உற்பத்தியிலும் எமது பகுதியே வேறெப்பகுதியையும் விட முன்னணியில் இருக்கின்றது. ஆகையால் இவற்றைப் பாதுகாக்கக் குளிரூட்டி வசதிகள் இணைக்கப்பட்ட ஒரு பெரிய "பொருட் பாதுகாப்பு இல்லம்" எமக்கு அவசியம். அத்துடன் பழவகைகளையும் மீன்களையும் தகரங்களில் அடைக்குந் தொழில்களையும் நாம் ஆரம்பிக்கலாம்.

இலங்கையின் பிரதான பெறுமதியுள்ள தாவரங்களுள் எமது கற்பகதருவாம் பனையும் இடம் பெறுகின்றது. பனைபடு திரவியங்கள் பல பல உண்டு. அவற்றின் ஆராய்ச்சி அபிவிருத்திக்காக திரு. எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் சிபார்சுகள் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. பனைபடு செல்வ உற்பத்திக்கு ஒரு தனிக் கூட்டுத்தாபனம் நிறுவவேண்டுமென்று அந்த அறிக்கையிற் கூறப்பட்டுள்ளது. அது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவேண்டிய கடமையாயினும் கூட்டுறவு இயக்கம் இந்த ஆணைக்குழுவின் சிபார்சுக்கு ஏற்ப சில தொழில்களைப் பனம் பொருள்களையே மூலப் பொருளாகக் கொண்டு உடன் ஆரம்பிக்கலாம். இதே போன்று சமாசத்தின் ஆதரவில் குடாநாட்டிற்கு வெளியே பருத்திச்செய்கை, உழுந்து உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற முயற்சிகளைக் கூட்டுறவுப் பண்ணைகள் அடிப்படையில் ஆரம்பிப்பது அவசியம். விவசாயத்துறையில் சமாசம் கூட்டுறவுப் பண்ணைகளை ஆரம்பித்து விவசாயிகளுக்கு மாதச்சம்பளம், 8 மணிநேர வேலை வரையறுப்பு, இளைப்பாற்றுச் சம்பளம் போன்ற வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது கடனாகும். அப்போதுதான் இயந்திரமயமாக்கப்பட்ட விஞ்ஞான ரீதியான விவசாய உற்பத்தி வளரும்; நாடும் பயனடையமுடியும்.

சந்தைப்படுத்தும் துறையிலும் இலங்கையின் பிரதான நகரங்களில் எமது உற்பத்திப் பொருள்களின் காட்சி அகங்களை (Show Rooms) அமைப்பதுடன் தேசிய சந்தையில் வலி–வடக்கு விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு உரிய இடத்தைப் பெற முயல வேண்டும்.

சீமெந்தை ஆதாரமாகக்கொண்டு எமது சமாசம் தனது கட்டடப் பிரிவை விஸ்தரித்துப் பலநூறு பேருக்குத் தொழில் தரவல்ல தொழில்களை ஆரம்பிக்கலாம்.

இத்தகைய முயற்சியில் சமாசம் வெற்றி காண எமது சகோதர சங்கங்கள் பூரண ஒத்துழைப்புத் தருவது அவசியம். சமாசத்தின் நிதி நிலையை மேலும் உறுதிப்படுத்திப் படிப்படியாக எமது இளைஞர்களுக்குத் தொழில் பெறும் வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும்.

வெள்ளி விழாவிலிருந்து பொன்விழாவை நோக்கி வீர நடைபோடும் எமது சமாசம், எமது பகுதி மக்களுக்கும், நாட்டிற்கும், பொருளாதாரப் புனர் வாழ்விற்கும் உரிய வழிவகுக்கும் வகையிற் செயல்படும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க வலி-வடக்குச் சமாசம்!

வெல்க கூட்டுறவு இயக்கம்!

*

கூட்டுறவுத் துறையின் வளர்ச்சியை நினைக்கும்போது றெபேட் ஓவன் என்பவரை மறக்க முடியாது. தொழிலாளருக்கு லாபத்திலும் ஒரு பகுதியைக் கொடுக்கவேண்டும் என்னுந் தமது கொள்கையை றெபேட் ஓவன் தமக்கு முந்திய பங்குள்ள நெசவுத் தொழிற்சாலை மூலம் காட்டினார். ஓவனின் பொருளாதாரக் கொள்கை தொழிலாளர்களுக்கு அதிக உற்சாகத்தைக் கொடுத்தது. முதலாளி தொழிலாளி என்ற பேதம் இல்லாமல் எல்லோரும் ஒத்து வாழலாம் என்பதை ஓவன் நன்கு நன்கு வற்புறுத்தினார்.

# சமாச வரலாறு

நிர்வாகக் காரியதரிசி, திரு. க. இராமச்சந்திரன் அவர்கள்

இரண்டாம் மகாயுத்த காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பங்கீடு செய்வதற்காக ஆங்காங்கே ஐக்கிய பண்டசாலைகள் உருவாக்கப்பட்டன. இப்படி ஸ்தாபிக்கப்பட்ட பண்டசாலைகள் தனியார்துறை மொத்த வியாபாரிகளிடமிருந்து எல்லாப் பொருள்களையும் வாங்கவேண்டிய நிர்ப்பந்தமிருந்தது.

வலிகாமம் வடக்கில் ஐக்கியநாணய சங்கங்களில் ஆர்வமுடைய சில பிரமுகர்கள் ஒரு மொத்த ஸ்தாபனத்தை ஸ்தாபித்து அதன் மூலம் பண்டசாலைகளுக்குப் பொருள்கள் பங்கீடு செய்வது முறையென்று உணர்ந்து 1944ஆம் ஆண்டு பங்குனி மாதம் 4ஆந் திகதி காலை 10 மணிக்குச் சுன்னுகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்திற் கூடி, ஒரு பண்டசாலைச் சமாசத்தை உருவாக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். இதற்குத் தற்காலிக தலைவராகத் திரு. S. கந்தவனம் அவர்களையும், காரியதரிசியாகத் திரு. க. சிவராசா அவர்களையும் நியமித்தார்கள். உதவிப் பதிவு காரியஸ்தர் திரு. F. A. சந்திரசேகரா அவர்களும், வட்டாரப் பரிசோதகர் திரு. M. சின்னத்தம்பி அவர்களும் சமுகம் கொடுத்தார்கள். பின் 7–7–44இல் மல்லாகம் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் இச் சமாசத்தின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. முன் நியமிக்கப்பட்ட நிருவாகசபை செவ்வனே இயங்காமையால் புது நிருவாகசபை தெரியப்பட்டது. இக் கூட்டத்திற்கு 21 பண்டசாலைப் பிரதிநிதிகள் சமுகம் கொடுத்தார்கள். திரு. S. கந்தவனம் அவர்கள் தலைவராகவும், திரு. S. K. இராசையா அவர்கள் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டார்கள். சமாசம் சுன்னுகம், தெல்லிப்பழை ஆகிய இரு இடங்களிலும் வாடகைக் கட்டிடத்தில் இயங்கியது. உபவிதிகள் யாவும் பொதுச் சபையால் ஏற்கப்பட்டு உதவிப் பதிவுக் காரியஸ்தரால் அங்கீகரிக்கப்பட்டன.

முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 12–5–45இல் நடைபெற்றது. அக்காலத்தில் உதவிப் பதிவு காரியஸ்தராகவிருந்த திரு. S. இராசரத்தினம் அவர்களும் சமுகம் கொடுத்தார்கள். அவ்வாண்டில் சுத்த லாபமாக ரூபாய் 1091–97 சதம் காட்டப்பட்டது. இப் பொதுக் கூட்டத்தில் தலைவராக பிரமஸ்ரீ S. கார்த்திகேய ஐயர் அவர்களும், தனுதிகாரியாகத் திரு. S. கந்தவனம் அவர்களும், காரியதரிசியாகத் திரு. S. K. இராசையா அவர்களும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

நாளடைவில் அங்கத்துவம் கூடிக்கொண்டு வந்தது. இரண்டாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் 41 அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகள் சமுகம் கொடுத்தார்கள். இக் கூட்டத்திற்குத் தற்பொழுது நிரந்தரக் காரியதரிசியாகவிருக்கும் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களும் சமுகம் கொடுத்தார்கள். இவ்வாண்டு சுத்த லாபம் ரூபாய் 7739–15 சதம் காட்டப்பட்டது.

சமாசத் தொழிலாளருக்கு என நிருவாக சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட சேமலாப நிதித் திட்டம் 30–7–49இல் பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அக்காலத்தில் வங்கியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் கடன் எடுத்து வியாபாரத்தை நடத்தி வந்தார்கள். 1950ஆம் ஆண்டில் வங்கிக்கடன் ரூபாய் 1½ இலட்சமாகக் கூட்டப்பட்டது. 10ஆம் ஆண்டு பொதுக்கூட்டத்தில் சுன்னுகம், தெல்லிப்பழை ஆகிய இரு இடங்களிலும் இயங்கிவந்த மொத்த ஸ்தாபனங்களை மல்லாகத்தில் அமைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. பின் 1955ஆம்ஆண்டில் நடைபெற்ற பொதுச்சபையில் சுன்னுகம், தெல்லிப்பழை ஆகிய இரு இடங்களிலும் மொத்த ஸ்தாபனம் இயங்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இச் சமாசத்தை இரண்டாகப் பிரிக்கவும் இக்காலத்தில் எத்தனித்தார்கள்; அப்படிப் பிரிந்திருந்தால் பலம் குன்றியிருக்கும்.



தெல்லிப்பழை சில்லறை விற்பனை நிலையத்தில்
கிளை முகாமையாளர் செல்வி ச. சிவசம்புவும் உதவியாளர்களும்.



மயிலிட்டிக் கிளை நிலையத்தில்
கிளை நிலைய முகாமையாளர் திரு. சு. திருநாவுக்கரசு அவர்களும்
உதவியாளரும்.



சுன்னாகம் புடைவை விற்பனை நிலையத்தில்
கிளை முகாமையாளர் திரு. க. சிவலோகநாதனும் உதவியாளரும்



தெல்லிப்பழை புடைவை விற்பனை நிலையத்தில்
கிளை முகாமையாளர் திருமதி. ப. ஜெகந்நாதன் அவர்களும்
உதவியாளரும்.



சுன்னாகம் மொத்த விற்பனை நிலையம்
காசாளர் திரு. சு. சேதுமாதவ ஐயர் அவர்கள்
வாடிக்கைகாரரிடம் பணம் பெறுகிறார்.



தெல்லிப்பழை மொத்த வியாபார நிலையத்தில்
பொருட் பொறுப்பாளர் திரு. த. சிவரத்தினம் அவர்கள்,
உதவியாளர் திரு. சோ. மகாராசாவுடன் காணப்படுகிறார்.



சுன்னாகத்திலுள்ள சமாச மொத்த விற்பனை நிலைய
முகப்புத் தோற்றம்



சுன்னாகம் மொத்த விற்பனை நிலையத்தில்
பொருட் பொறுப்பாளர் திரு. சி. இரத்தினசபாபதி அவர்களும்
உதவியாளரும்

1949ஆம் ஆண்டில் தெல்லிப்பழையில் தற்போது இருக்கும் மொத்த ஸ்தாபனக் கட்டிடமும் காணியும் 26,000 ரூபாவாக வாங்கப்பட்டன. சமாச வளர்ச்சிக்கு இது ஒரு முக்கிய முதலீடாக அமைந்தது. சமாசம் முன்னேறிக்கொண்டு போகும் வேளையில் சில பல கஷ்டங்கள் ஏற்படுவது உண்டு. காசு மோசடி ஏற்பட்டது. இதனுல் சமாசம் 20,140 ரூபாய் இழக்கவேண்டி நேர்ந்தது. ஆனுல், அடுத்த வருடத்தில் இந்தக் கஷ்டத்தை ஒதுக்கி வைக்கக்கூடிய முறையில் இலாபத்தை ஈட்டியது.

சமாச வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பம் ஏற்பட்டது. வலிகாமம் வடக்கில் பல பல–நோக்குச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. எங்கள் சமாசமும் 29–11–59இல் பலநோக்குச் சங்கங்களின் சமாசமாக அன்று நடந்த பொதுச்சபையின் தீர்மானப்படி அமைக்கப்பட்டது. அதன் விளைவாக இன்று பலநோக்குச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்கிவருகின்றன.

சமாச உபவிதிகள் மாற்றியமைக்கப்பட்டதன் விளைவாக ஒரு நிர்வாகக் காரியதரிசியைச் சமாசம் நியமித்தது.

வியாபாரத்தைப் பல துறைகளிலும் பெருக்கவேண்டு மென்னும் நோக்குடன் பிரதான கொள்வனவுகள் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டன. 5–11–60இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முன்னிருந்த இரு பெற்ரேல் லொறிகளுடன் ஒரு டீசல் லொறி வாங்க வேண்டுமெனவும் அதோடு சுன்ஞகத்தில் ஒரு காணி வாங்கிச் சமாசக்காரியாலயம், மொத்த விற்பனை நிலையம், சில்லறை விற்பனை நிலையங்கள் என்பன அமைந்த புதிய கட்டிடம் கட்டவேண்டுமெனவுந் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானங்களுக்கிணங்க நிர்வாகசபை துரித நடவடிக்கைகளை மேற்கொண்டது. லொறி புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டது. சமாசத்தின் வியாபாரத்துறை மிகுதியும் முன்னேற்றமடைந்த காரணத்தால் தெல்லிப்பழையில் 45,000 ரூபாய் செலவில் ஒரு புதிய கட்டிடம் கட்டிப் புடைவை வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானங்களுக்கமையத் தெல்லிப்பழையில் 1963ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஒரு புடைவை மொத்த விற்பனை நிலையமும், ஒரு சில்லறைப் புடைவை விற்பனை நிலையமும், ஒரு பலசரக்குச் சில்லறை விற்பனை நிலையமுந் திறக்கப்பட்டன.

கைத்தொழில் விருத்தியை உத்தேசித்து எமது சமாசம் அகில இலங்கைக் கூட்டுறவுக் கைத்தொழிற் சமாசத்தில் 25,000 ரூபாய் பங்குபெற வேண்டுமென 7–6–64இல் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டந் தீர்மானித்தது. அவ்வாறே பங்கும் பெறப்பட்டது. இதன் தொடர்பாக வலிகாமம் வடக்கில் மின்தறி நெசவு நிலையமொன்றைத் தாபிக்கவும் யாம் பெருமுயற்சி செய்தோம். அம் முயற்சி பயன்தரவில்லை. பட்டுடை உற்பத்தி மின்தறி நெசவு நிலையமொன்றை அமைக்கக்கூடிய வாய்ப்பிருந்தும் எமது நிர்வாகசபை அதை அமைக்க விரும்பவில்லை. எனினும் முயற்சியைக் கைவிடாது மின்தறி நெசவு நிலையமொன்றை நிறுவுவதில் நிர்வாகசபை கண்ணுங் கருத்துமாக இருந்தது.

கூட்டுறவு விதிகளுக்கமைய நடாத்தப்படாத சங்கங்களைப் பொறுப்பேற்று நடாத்தும் முயற்சியில் சமாசம் 1958ஆம் ஆண்டு கால் வைத்தது. அளவெட்டி தெற்கு ஐக்கிய பண்டசாலையையே சமாசம் முதன் முதலிற் பொறுப்பேற்றது. பின்னர் காங்கேசன்துறை, கசாத்துறை, வவுனவத்தை என்னும் இடங்களிலமைந்த பண்டசாலைகளையும் சமாசம் பொறுப்பேற்றது. இப் பண்டசாலைகளெல்லாம் அவ்வவ்வூர்ச் சங்கங்கள் அவற்றை நடாத்த முன்வந்தவுடன் திருப்பிக் கொடுக்கப்பட்டன வென்பது குறிப்பிடத்தக்கது.

சுன்ஞகத்தில் சமாசம் கொள்வனவு செய்த நான்கு பரப்புக் காணியில் 1,60,000 ரூபாய் செலவிட்டு ஒரு மேல்மாடிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. இப் புதிய கட்டிடம் 1–4–66இல் அக்காலக் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. வீரமன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக் கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்டவுடன், கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தார் சுன்ஞகத்தில் நடாத்தப்பட்டதும் சமாசத்தால் 1,25,000 ரூபாய் பெறுமான

முள்ள பொருள்களுடன் பொறுப்பேற்கப்பட்டதுமான கிளைநிலையம், புடைவை நிலையம் வேருகவும், சில்லறை நிலையம் வேருகவும் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டன.

தெல்லிப்பழை மேற்குப் பலநோக்குச் சங்கத்தால் நடாத்தப்பட்ட கீரிமலை விற்பனை நிலையம் 1965ஆம் ஆண்டில் அச் சங்கத்திடமிருந்து சமாசத்தாற் பொறுப்பேற்கப்பட்டுச் சிறந்தமுறையில் இயங்கிவருகிறது.

மயிலிட்டிக் கரை வாசிகளின் விருப்பத்திற்கிணங்க ஒரு கிளை நிலையம் மயிலிட்டியில் தாபிக்கப்பட்டது. இந்நிலையம் 800 உணவுக் கட்டுப்பாட்டுப் புத்தகங்களுடன் சிறப்புற இயங்கிவருகிறது.

இக் கிளை நிலையத்தால் மயிலிட்டிக் கிராம மக்கள் பெரும் பயனடைந்து வருகிருர்கள். இந்நிலையத்தாற் பயன்கண்ட அவ்வூர் மக்கள் தங்கள் தொழில்முறையை ஒழுங்காக நடாத்துவதற்குத் தங்களுக்குத் தேவையான மீன்பிடி உபகரணங்களும், உதிரிப்பாகங்களும், புடைவையும் விற்பனை செய்யும் நிலையமொன்றைத் திறக்கும்படி வேண்டினுர்கள். இவர்களின் வேண்டுகோளை அவதானமாகப் பரிசீலனை செய்த நிர்வாகசபை இவற்றை விற்பனை செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்து மீன்பிடிக் கூட்டுத் தாபனத்தாரிடம் 'ஏஜென்ஸி' பெற்று மீன்பிடி உபகரணங்களை விற்பனை செய்யும் நிலையமொன்றை 28–4–69இல் திறந்துவைத்துள்ளது.

இந்நிலையத்தில் புடைவை வியாபாரமும் நடைபெறுகிறது. உதிரிப்பாகங்கள் விற்பனவு செய்வதற்கும் 'ஏஜென்ஸி' பெற்றுள்ளோம். போதிய உதிரிப்பாகங்கள் கிடைத்ததும் மயிலிட்டியில் அவ் வியாபாரமும் நடைபெற வழி வகுக்கப்படும்.

சுன்னுகம் ஐக்கிய 'பேக்கறி' நட்டத்தில் நடைபெற்றமையால் அதனைச் சமாசம் பொறுப்பேற்க வேண்டுமெனக் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. பூ. குமாரசுவாமி அவர்கள் விரும்பினுர்கள். நிலைமையை அவதானித்த நிர்வாகசபை 1–12–68இல் அதனைக் கையேற்று இலாபகரமாக நடாத்தி வருகிறதென்பதைப் பெருமையுடன் கூற விரும்புகிறேம்.

மின்தறி நிலையம் அமைப்பது சம்பந்தமாகச் சமாசம் எடுத்துவந்த முயற்சிபற்றி முன்னர்க் குறிப்பிட்டோம். அம் முயற்சியின் பேருக ஊறணிக் கிராமத்திற்கென ஒதுக்கப்பட்டிருந்த 24 தறிகளைக் கொண்ட நெசவு நிலையம் ஊறணியில் அமைக்கப்பட வேண்டுமென்னும் நிபந்தனையுடன் சமாசத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சமாசம் ஊறணிக் கத்தோலிக்க தேவாலயத்திற்குச் சொந்தமான அரை ஏக்கர் காணியை வாங்குவதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ளது. இந் நெசவு நிலையத்தை அமைப்பதற்காகச் சமாசம் கூட்டுறவு மாகாண வங்கியிடம் 5½ இலட்ச ரூபாய் கடன் கோரியுள்ளது. இக் கடன் கிடைத்ததும் சமாசம் மின்தறி நெசவு நிலையத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபடும்.

சமாசம் பல ஒப்பந்த வேலைகளை யெடுத்துத் திறம்படச் செய்துமுடித்துச் சம்பந்தப்பட்டவர்களின் பாராட்டையும் பெற்றுள்ளது. இப்போது மின்சார இலாகாவுடன் சுன்னுகம் மின்சார நிலையத்தில் 1,15,000 ரூபாய் பெறுமதியான கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒப்பந்தஞ் செய்துள்ளது.

இச் சமாசத்தின் வரலாறு சுவையானது. சமாசம் வளர்ந்துகொண்டிருக்கிறதென்பதைச் சமாசத்தின் இலாபநட்டக் கணக்குகளையும், கொள்வனவு விற்பனவுக் கணக்குகளையும் பார்ப்பவர்கள் நன்கு புரிந்துகொள்வர்.

❀

தமிழ்கூறு நல்லுலகில் கூட்டுறவு வாழ்க்கையைச் சாதனைமூலம் போதித்தவர்கள் இரட்டையர்கள். இளஞ்சூரியர், முதுசூரியர் என்னும் பெயருடைய இவர்களில் இளையவரான இளஞ்சூரியர் குருடர்; மூத்தவரோ முடவர். இவர்கள் ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குச் சென்று உபகாரிகளைச் சந்திக்கவும் திவ்விய சேத்திரங்களை வழிபடவும் கூட்டுறவினடிப்படையிற் பணிபுரிந்தனர். குருடர் முடவரைச் சுமந்துசெல்வதும், முடவர் குருடருக்கு வழிகாட்டுவதுமே அவர்கள் கையாண்ட வழி. நம் நாட்டிற் பணம்படைத்த செல்வர்களும் தொழில்முறை தெரிந்த பணவசதியற்றவர்களும் இருக்கிருர்கள். இவர்கள் இரட்டையர்கள் காட்டிய வழியிற் கடமையாற்றினுல்........

## 1945ஆம் ஆண்டு தொடக்கம் 1968ஆம் ஆண்டு வரையுமுள்ள விற்பனை, சுத்த இலாபம் காட்டும் வரைபடம்





சமாசம் பொறுப்பேற்றுக் கட்டிக்கொண்டிருக்கும்
காங்கேசன்துறைப் பட்டினசபையின்
நவீன சந்தையைத்
தொழில் மேற்பார்வையாளர்
திரு. க. சிவசுப்பிரமணியம் அவர்கள்
மேற்பார்வை செய்கிறார்.




சுன்னாகம் பாண் தயாரிப்பு நிலையம்



சுன்னாகம் பாண் விற்பனை நிலையம்

# விவசாயப் பொருள்கள் கூட்டுறவு விற்பனை

திரு. தி. க. இராசசேகரன் அவர்கள், எம். ஏ.

தற்பொழுது இலங்கை அரசாங்கம் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதில் மிக்க ஊக்கம் கொண்டுளது. முக்கியமாக உணவுப் பொருள்களைக் கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துளது. அதனுல் வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு மற்றும் தானியவகைகள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. நெல்லும் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதனுல் நாட்டிற்கு மிகுந்த நன்மை ஏற்படுவதுமல்லாமல் வெளிநாட்டுச் செலாவணியும் குறைக்கப்படுகிறது. பொருள்களின் விலைவாசியும் குறைவதற் கேதுவாகிறது.

ஆனுல், விளைந்த பொருள்களைப் பாதுகாத்து வைத்து ஏற்றகாலத்தில் விற்பதற்குவேண்டிய வசதிகள் இல்லாதபடியால் பொருள்களை மிகக் குறைந்த விலையில் விற்கவேண்டிய அவசியம் விவசாயிகளுக்கு ஏற்பட்டது. உதாரணமாக இருத்தல் ஒரு ரூபாவிற்குமேல் விற்ற உருளைக்கிழங்கு உற்பத்திகூடிய காலத்தில் இருத்தல் 30சதத்திற்கும் விற்கவேண்டியநிலை ஏற்பட்டது. தக்காளிப்பழம் சிலகாலங்களில் இருத்தல் 8 சதத்திற்கும் விற்கவேண்டியிருந்தது. நெற்றுனியத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கம் ஒரு குறித்தவிலையில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறபடியால், அந்த விவாசாயிகளுக்கு அவ்விதமான சங்கடங்கள் ஏற்படவில்லை. மேலும் தானியவகைகள் உடனடியாக விற்கப்படாவிட்டாலும் சிலகாலம் வைத்திருந்து வேண்டிய பொழுது விற்கக்கூடியதாக இருக்கின்றன. ஆனுல் வெங்காயம், உருளைக்கிழங்கு, தக்காளி முதலியவை அவ்விதமாகச் சிலகாலம் வைத்திருந்து விற்கக்கூடிய பொருள்கள் அல்ல. வெங்காயம் தவிர மற்றப் பொருள்களை ஒரு கட்டுப்பாட்டு விலைக்கு வாங்க அரசாங்கம் ஏற்பாடுகள் செய்யவில்லை. அதனுல் விவசாயிகள் அவற்றை மிகக் குறைந்த விலைக்கு விற்கவேண்டியதாயிற்று.

இவ்விதமான சங்கடங்களை நிவிர்த்தி செய்வதற்குக் கூட்டுறவு விற்பனை ஏற்பாடுகள் மிக உதவும். பொருள்களை உற்பத்தி செய்வது மாத்திரமல்ல, அவற்றைப் பாதுகாத்து, வேண்டியகாலத்தில், வேண்டிய இடங்களில் கூடிய விலைக்கு விற்பனை செய்வதுதான் வியாபார ஒழுங்கு. தனித்தனி விவசாயிகள் எவரும் அந்தவிதமான ஒழுங்குகள் செய்ய முடியாது. பணமுடை மாத்திரமல்ல, அவர்கள் தனித்தனியே கொஞ்சம் கொஞ்சம் பொருள்களையே உற்பத்தி செய்வார்கள். ஒவ்வொருவரும் அப்பொருள்களைப் பாதுகாத்துவைக்க ஏற்பாடு செய்யவோ, அவற்றைத் தேவையான இடங்களுக்கு எடுத்துச்சென்று விற்கவோ முடியாது. மேலும் அவர்கள் உற்பத்திசெய்த பொருள்கள் முழுவதும் ஒரேதரமானவையாயிருக்கமாட்டா; சுத்தமாகவும் இருக்கமாட்டா. ஆகையால் அப்பொருள்களைக் கூடிய விலைக்கு விற்கக்கூடியதாக இருக்காது. அவற்றைச் சுத்தப்படுத்தி, தராதரப்படுத்தி விற்றுல் கூடிய விலைக்கு விற்கலாம். அவ்விதம் செய்வதற்கு ஏராளமான பொருள்கள் இருந்தால்தான் செலவு கட்டும். ஆனபடியால் விவசாயிகள் ஒன்றுசேர்ந்து தங்கள் பொருள்களை ஒரு இடத்திற் கொண்டுவந்து முழுவதையும் சுத்தப்படுத்தித் தராதரப்படுத்தி விற்பதற்கு ஏற்பாடு செய்தாலேதான் அப் பொருள்களைக் கூடிய விலைக்கு விற்கலாம். அதற்குக் கூட்டுறவு முறையே மிக உகந்தது.

யாழ்ப்பாணப்பகுதி விவசாயிகள் இதை நன்குணர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே தங்கள் பொருள்களை விற்க ஏற்பாடுகள் செய்திருக்கிறுர்கள். ஆனுல் அவர்கள் அரசாங்கம் கட்டுப்பாட்டு விலைக்கு வாங்கும் பொருள்களிலேயே மிக்க அவதானம்செலுத்திவருகிறுர்கள். மற்றப் பொருள்களைப்பற்றி அவர்கள் ஏற்ற அவதானமெடுப்பதில்லை. தங்கள் சங்கங்களால் ஏற்ற வசதிகள் செய்ய முடியாவிட்டாலும், அச்சங்கங்களின் சமாசம் மூலம் எல்லா வசதி

களேயும் ஏற்பாடு செய்யக்கூடிய நிலேயிருக்கிறது.

உதாரணமாக, வெங்காயத்தைப் பாது காத்துவைத்து விலேகூடிய காலத்தில் விற்பதற்குச் சங்கங்களும் சமாசங்களும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம். இந்தியாவில் வெங்காயத்தைப் பல நாட்களுக்குப் பாதுகாத்து வைத்து விற்பனே செய்கிருர்கள். அம்முறைகளேக் கற்றுவருவதற்குச் சமாசம் மூலம் ஒருவரை அனுப்பிப் பயிற்றுவித்து அவரைக் கொண்டு பாதுகாக்கும் முறைகளே எங்கள் விவசாயிகளுக்குப் போதிக்கலாம். அவ்விதம் பாதுகாத்து வைக்க ஏற்பாடுகள் செய்யமுடியாத சிறு விவசாயிகளுக்கு உதவியாகச் சங்கங்களும் சமாசங்களும் ஏற்பாடுகளேச் செய்து வைக்கலாம்.

உருளேக்கிழங்கு, பழம் முதலியவை ஏராளமாக உற்பத்தியாகும் காலங்களில் அவற்றைச் சிலநாட்களுக்காவது பாதுகாத்துவைத்து விலே குறையாவண்ணம் செய்வதற்குக் குளிர் ஊட்டப்பட்ட அறைகள் முதலிய சாதனங்களேச் சமாசம் ஏற்பாடு செய்யலாம். தற்பொழுது நடுவதற்கு வேண்டிய உருளேக்கிழங்கு கிடைக்கக்கூடிய வசதியை அரசாங்கம் ஏற்படுத்தாது என்ற அறிகுறிகள் இருக்கின்றன. ஆகையால், கிழங்கு உற்பத்திக்கு வேண்டிய, தகுந்த, உருளேக்கிழங்கு நாற்றுக்களே விவசாயிகளுக்குக் கொடுப்பதற்குச் சமாச மூலமாகச் சங்கங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். உற்பத்தி செய்யும் பொருள்களின் தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய சாதனங்களேயும், அறிவையும் சமாசம் அவ்விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

எல்லாக் காரியங்களேயும் சமாசந்தான் செய்யவேண்டும் என்று எண்ணுமல் கூடிய வரையில் செய்யக்கூடிய வசதிகளேச் சங்கங்களும் செய்யவேண்டும். உதாரணமாக, தற்போது வெங்காயத்தைக் கூடுகளில் அடைத்து அவற்றைக் கொண்டுபோய்ப் புகையிரதத்தில் ஏற்றுவதைச் சங்கங்கள் செய்கின்றன. அதற்கு வேண்டிய வசதிகளேயும், ஏற்பாடுகளேயும் சமாசம் செய்து கொடுக்க வேண்டும். ஆனுல் பொருள்களேத் தராதரப்படுத்துவதையோ அவைகளேச் சேகரித்துப் பாதுகாத்து விற்கக்கூடிய இடத்துக்கு அனுப்பி விற்பனேசெய்வது போன்ற காரியங்களேயோ சங்கங்களும் செய்ய இயலாது. அதைச் சமாசமே செய்யவேண்டும். இவ்விதம் செய்வது சுலபமான காரியமல்ல. வியாபாரம் எல்லோராலும் செய்யமுடியாது. பொருள்களின் விலேவாசிகளே அறிந்தவரும், எவ்விதமான பொருள்களே எந்தப் பகுதியில் எந்தக் காலத்தில் விற்கலாம் என்று அறிந்து அவ்வப்போது பொருள்களே விற்கக்கூடிய ஆற்றலுடையவரும் ஒருவர் இருக்கவேண்டும். அவ்வித ஆற்றலுடையவரைச் சங்கங்கள் தனித்தனியே வைத்திருக்கமுடியாது. சங்கங்களின் சமாசமே ஒருவரை நியமித்து, அவர் மூலம் எல்லாச் சங்கங்களின் பொருள்களேயும் ஒன்று சேர்த்துத் தராதரப்படுத்தி வியாபாரஞ் செய்யவேண்டும். சிலவேளேகளில் அப்பொருள்களே நேராக நுகர்ச்சிப்பொருள் கூட்டுறவு விற்பனேயாளருக்குக் கொடுக்கவும் வசதியாயிருக்கும்.

உருளேக்கிழங்கு, தக்காளிப்பழம், முட்டை முதலியவைகளே விவசாயிகளிடமிருந்து விலேயின் ஒரு பகுதியைக் கொடுத்து வாங்கி, தராதரப்படுத்தி, பாதுகாத்துவைத்து விலேவருங் காலத்தில் விற்று, செலவுபோக மிகுதிப் பணத்தை, விவசாயிகளுக்கு அவர்கள் கொடுத்த பொருள்களுக்கு ஏற்றவாறு பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். பொருள்கள் விற்கமுடியாமலிருக்கும் காலத்தில் அவைகளே வேறுவிதமாகப் பயன்படுத்தக்கூடிய ஏற்பாடுகள் இருக்கவேண்டும். உதாரணமாகத் தக்காளிப்பழம் விற்கப்படாவிட்டால், அவற்றைத் தகரங்களில் அடைத்து விற்பதற்கும், ஜாம், ஊறுகாய் முதலியன செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யலாம். உருளேக்கிழங்கு விற்கப்படாவிட்டால் அவற்றிலிருந்து சாராயம் வடிக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யலாம். இவ்விதமான ஏற்பாடுகளால் விவசாயிகளுக்குள்ள எல்லாக் கஷ்டங்களேயும் நிவர்த்திசெய்துவிடலாம் என்று எண்ணக்கூடாது. சில சங்கடங்களே நீக்கவோ, சில கஷ்டங்களேக் குறைக்கவோ முடியுமேயொழிய எல்லாக் கஷ்டங்களேயும் நீக்க முடியாது.

இந்தவிதமான வியாபாரத்தைத் தொடங்கும்பொழுது சமாசங்கள் தீர்க்க ஆலோசனே செய்து தொடங்க வேண்டும். எல்லாவற்றை

யும் ஒரே தரமாகத் தொடங்காமல் சில காரியங்களை முதலில் செய்யவேண்டும். வியாபாரத்தில் நல்ல இலாபம் கிடைக்கும்பொழுது, முழு இலாபத்தையும் பங்கிட்டுக் கொடுக்காமல் அதிற் கொஞ்சப் பகுதியை இலாபம் குறையும் காலத்தில், அல்லது நஷ்டமடையும் காலத்தில் உபயோகப்படுத்தக்கூடியதாகச் சேகரித்து வைக்கவேண்டும்.

இவ்விதமாகச் சமாசங்கள் காரியங்களைச் செய்வதற்கு விவசாயிகளினதும், சங்கங்களினதும் ஒத்துழைப்பு வேண்டும். விவசாயிகள் தங்கள் சங்கங்களில் அபிமானம்வைத்து, தாங்கள் உற்பத்திசெய்யும் பொருள்கள் முழுவதையும் சங்கத்திற்கே கொடுக்க முன்வர வேண்டும். தனிப்பட்ட வியாபாரிகள் வலையில் சிக்கி, சங்கத்திற்குப் பொருள்களைக் கொடுக்காது சங்கங்களைக் கஷ்டநிலைக்கு உட்படுத்தக்கூடாது. சங்கங்களும் நேர்மையாக நடந்து, சமாசமூலம் விற்கவேண்டிய பொருள்களைச் சமாசமூலமே விற்க ஏற்பாடு செய்து, அப்பொருள்களைச் சேகரித்துச் சமாசத்திற்கு அனுப்புவதற்கு வேண்டிய உதவிகள் புரிய வேண்டும். இவ்விதமாக விவசாயிகளும், சங்கங்களும் கூட்டுறவில் நம்பிக்கைவைத்து அபிமானத்துடனும் நேர்மையுடனும் நடந்தார்களென்றால், விவசாயிகள்மாத்திரமன்றி நாடும் முன்னேற்றமடையும் மென்பதற்குச் சந்தேகமில்லை.

கூட்டுறவாளர்கள் வாசித்துப் பொருளறிந்து வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டிய கருத்துக்களைத் திருவள்ளுவர் தருகிறார்:

1. களவினா லாகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும்.

2. அழக்கொண்ட வெல்லா மழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

3. இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.

*  *  *  *

தமிழ்நாட்டில் பழையகாலத்தில் வாழ்ந்த வணிகர்கள் தமது பண்டங்களையும் பிறருடைய பண்டங்களையும் ஒரே தன்மையாகப் பார்த்து விலை கணிப்பவராயிருந்தனர். பிறரிடமிருந்து பெறும் பண்டத்தைக் கூடுதலாகப் பெறாதவர்களாயும் தம்முடைய பண்டத்தைக் கொடுக்கும்போது குறைவுபடக் கொடாதவர்களாயும் விளங்கினார்கள். இதனைப் பத்துப்பாட்டுள் ஒன்றாய பட்டினப்பாலை பேசுகிறது:

"நெடு நுகத்துப் பகல் போல
நடு நின்ற நன்னெஞ் சினோர்
வடு வஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வ தூஉம் மிகை கொளாது
கொடுப்ப தூஉங் குறை கொடாது
.............................................."

# வலி—வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசமும் விற்பனை நிலையங்களும்

[ சமாசத்தின் உபதலைவர், வைத்தியகலாநிதி திரு. ஆ. நடராசா அவர்கள், 28-4-69இல் மயிலிட்டி மீன்பிடி உபகரண விற்பனை நிலையத்தைத் திறந்து வைத்தபோது ஆற்றிய சொற்பொழிவின் சாரம் ]

எங்கள் சமாசம் ஆரம்பத்தில் ஒருமொத்த வியாபார நிலையமாக மாத்திரம் இயங்கி வந்தது. இது தனது அங்கத்துவச் சங்கங்களுக்கும், தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் பொருள்களை மாத்திரம் விநியோகம் செய்தது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்தபின்னர், விளைபொருள் உற்பத்திச் சங்கங்களும், விளைபொருள் உற்பத்திச் சங்கம் இல்லாத கிராமங்களில் உள்ள சில பண்டசாலைச் சங்கங்களும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாறின. அதே நேரத்தில் வலிகாமம் வடக்குக் கூட்டுறவுச் சமாசமும், வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமாக மாறியது. மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதை நோக்கமாகக் கொண்டு, எமது சமாசம் பலதுறைகளிற் செயற்பட முற்பட்டது. இவற்றில் ஒன்றாக விளங்குவது விற்பனை நிலையங்கள். எமது சமாசம் ஐக்கிய பண்டசாலைச் சங்கங்கள் இல்லாத இடங்களிலும், ஐக்கிய பண்டசாலைச் சங்கங்கள் இருந்து சீரான முறையில் இயங்காமல் அழிந்துபோன இடங்களிலும் விற்பனை நிலையங்களை ஸ்தாபித்து, அவ்வப் பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து வருவதை யாவரும் அறிவீர்கள். அன்றியும் மக்களின் நலனில் அக்கறைகொண்டு சில விசேட விற்பனை நிலையங்களை ஸ்தாபித்தும் நடத்துகின்றது. இப்போது மயிலிட்டி வாழ் மக்களின் வசதிகளையும், தேவைகளையும் நோக்கி மீன்பிடி உபகரணங்கள் விற்கும் ஸ்தாபனம் ஒன்றை நிறுவி நடாத்த முன்வந்துள்ளோம். பொருள்கள் கொள்வனவு செய்யும் தனிப்பட்ட நபருக்கு, இலாபத்தைப் பங்கீடு செய்து வழங்க, சமாசத்தின் உபவிதிகள் அநுமதிக்கவில்லை. எனினும் எமது சமாசம் மக்களின் பொருளாதார நிலையை உளத்திற்கொண்டு, பொருள்களின் விலையில் ஐந்துவீதம் கழிவு கொடுக்க முன்வந்துள்ளது. இங்கு திறந்து வைக்கப்பட்ட நிலையத்தின் விற்பனையைப் பொறுத்து, இவ் வீதத்தைச் சமாசம் அதிகரிக்கவும் உத்தேசித்துள்ளது. இஃது உங்களில் தங்கியுள்ள தென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இந் நிலையம் இப்பகுதிவாழ் மக்களுக்கு மிக்க பயன் அளிக்கும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. விற்பனை நிலையங்களை முறியடித்து, வியாபாரம் முழுவதையும் தம் வசமாக்கிக் கொள்ளை இலாபம் அடிக்க விரும்பும் கள்ள உள்ளங்கொண்ட சிலர், சில தந்திரங்களைக் கையாளுவர். அவர்கள் விரிக்கும் மாய வலையிற் சிக்கி, நீங்கள் அடையப்போகும் நன்மைகளுக்குத் தீமை தேடிக்கொள்ளாதிருக்கும்படி மிகவும் பணிவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

நட்டத்தில் ஓடிக்கொண்டிருந்து, தம்மால் நடாத்த முடியாதென எம்மிடம் கையளித்த சுன்னாகம் ஐக்கிய 'பேக்கறி'யை எமது சமாசம் பொறுப்பேற்றுச் சிறந்தமுறையில் நடத்துகின்றது என்பதைப் பெருமையுடன் சொல்ல விரும்புகிறேன். அன்றியும் இது சுன்னாகம், தெல்லிப்பழை ஆகிய இடங்களில் ஒவ்வோர் சில்லறை விற்பனை நிலையத்தை மொத்த விற்பனை நிலையங்களுக்குப் பக்கத்தில் ஸ்தாபித்து நல்லமுறையில் நடாத்தி வருவதோடு இரு இடங்களிலும் புடைவை விற்பனை நிலையங்களையும் ஆரம்பித்து எவரும் குறைசொல்ல முடியாமல் இயக்கியும் வருகின்றது. மக்களின் தேவைகள் எங்கெங்கு அவசியமோ அங்கெல்லாம் சமாசம் ஆவன செய்யக் காத்திருக்கின்ற தென்பதை உங்களுக்குச் சொல்லிவைக்க விரும்புகின்றேன்.

இதே நேரத்தில் சிலர் எங்கள்மீது, சில குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர். உபதலைவர் என்ற முறையிற் பொதுமக்களாகிய



சமாசக் கூட்டுறவாளர் தினத்தில்
பிரதம விருந்தினர், மாவட்ட நீதிபதி
திரு. V. M. குமாரசாமி அவர்கள்
உரையாற்றுகிறார்.



யூனியன் கல்லூரித் திறந்த வெளியரங்கில்
1967ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவாளர்தின விழாவில்
மாவட்ட நீதிபதி திரு. V. M. குமாரசாமி அவர்களுக்கு
அந்நாள் தலைவர் திரு. சு. அம்பலவாணர் B. A. அவர்கள்
மாலை சூட்டுகிறார்.

உங்களுக்கு உண்மையை விளக்கவேண்டியவனு யிருக்கின்றேன். பண்டசாலையும், தனிப்பட்ட சில்லறை வியாபாரிகளும் செய்யும் சில்லறை வியாபாரங்களைச் சமாசம் பண்டசாலை இயக் கத்துக்கு முரணுகச் செய்து, தனிப்பட்ட பண்டசாலைகளுக்கும், வியாபாரிகளுக்கும் குந்தகம் விளைவிக்கின்றது என் பது அவர்கள் எம்மீது சொல் லும் குற்றச்சாட்டுகளில் ஒன்று. வியாபாரம் முழுவதையும் நாமே நடத்த முயற்சிக்கின்றோம் என் பதும் இன்னென்று. இவற்றிற் கெல்லாம் விடைபகர்ந்து, அவர் களின் தவறுன எண்ணங்களைப் போக்கி, ஐக்கிய இயக்கத்தை வளர்ப்பது எமது தலையாய கடனும். பண்டசாலைகள் எங் கெங்கு செவ்வனே நடைபெற வில்லையோ, அங்கேயும், பண்ட சாலைகள் இருந்து மூடப்பட்ட இடங்களிலும் நாம் இந்நிலையங் களை ஸ்தாபித்தோம். இவ்வாறு நாம்ஸ்தாபித்திராவிடில் மக்கள், கொள்ளை இலாபம் அடிக்கும் வியாபாரிகளிடம் சிக்கி அவதியுற வேண்டியிருக்கும். அன்றியும் கொள்ளை இலாபம் அடிக்கும் வியாபாரிகளை யும் பொருள்களைக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்று நல்லவர்களாக மாற்ற வசதியில்லாமற் போயிருக்கும். மக்களும் பொருள்களைக் கட் டுப்பாட்டு விலைக்கு எப்போதும் வாங்கக் கூடியதாக இந்நிலையங்கள் உதவிபுரிகின்றன. சில்லறை நிலையங்களை நாம் ஆரம்பித்து இரா விட்டால் வியாபாரிகள் ஒன்றுசேர்ந்து, கட் டுப்பாடில்லாத தட்டுப்பாடான பொருள்களை நினைத்த விலைக்கு விற்று மக்களாகிய உங்க ளுக்குக் கஷ்டங்களைக் கொடுக்கலாம். இந் நிலையங்கள் மக்கள் நலன் கருதி ஏற்படுத்தப் பட்டனவே அன்றி போட்டி மனப்பான்மை யோடோ, அன்றி வியாபாரம் முழுவதையும் கைப்பற்றுவதற்கோ ஸ்தாபிக்கப்படவில்லை



வைத்திய கலாநிதி
திரு. ஆ. நடராசா அவர்கள்

என்பதை யாவரும் உணரவேண்டும். இந்நிலை யங்களைச் சமாசம் கூடிய இலாபம் பெறும் நோக்கத்துடன் ஆரம்பிக்கவில்லை என்பதை யும் எடுத்துக்கூற விரும்புகின்றேன். மக்கள் ஐக்கியத்தின் பெருமையை உணர்ந்து, ஐக்கிய சங்கங்களை உண்டுபண்ணி விற்பனை ஸ்தா பனங்களையோ அன்றி விசேட விற்பனை நிலையங்களையோ தம் மிடம் ஒப்படைக்கும்படி கேட் டால் சமாசம் எவ்வித தங்கு தடையுமின்றி அவற்றை ஒப் படைக்கத் தயங்கமாட்டாது. இக் கிளை ஸ்தாபனங்கள் ஒவ் வொன்றிற்கும், அவ்வப்பகுதி மக்களை உறுப்பினராகக் கொண் டுள்ள ஆலோசனைச் சபை ஒவ் வொன்று அமைப்பதற்கும், அவர்கள் ஆலோசனைகளையும் முறைப்பாடுகளையும் சமாச நிர் வாகசபை பரிசீலனை செய்வதற் கும் திட்டமிட்டுள்ளது. இந்நிலை யங்கள் உள்ள இடங்களில் வசிக் கும் மக்கள் யாவரும் இவ் விற் பனை நிலையங்கள் தமது நிலையங்கள் என்றும், சமாசம் வேறு, தாம் வேறல்லர் என்றும் நினைத்து, ஒத்துழைப்பு நல்கிக் கூடிய நன்மை களை அடைய வேண்டும். வலிகாமம் வடக்கில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் கிளை ஸ்தாபனங் களிலும் சமாசத்திலும் சமவுரிமை உண்டு. பொருளாதாரத்தில் பின்தங்கியவர்க்கும், நடுத்தர நிலையில் இருப்பவர்க்கும் சமாசத்தின தும், பண்டசாலைகளினதும் சேவை மிகவும் அவசியம். ஐக்கிய சங்கங்களின் நிர்வாகத்தில் உள்ள சில குறைபாடுகளை எடுத்துக்காட்டி, செம்மையாக நடக்க உதவி, ஐக்கியத்தின் பயனை அடைவது பொதுமக்களாகிய உங்கள் கடனுகும்.

வாழ்க ஐக்கியம்.

வளர்க கூட்டுறவு இயக்கம்.

# கூட்டுறவுச் சங்கங்களும் சமாசங்களும்

திரு. க. சங்கரப்பிள்ளை அவர்கள், நிர்வாகசபை உறுப்பினர், வலி. வ. கூ. ச. சமாசம்
*(உப–தலைவர், வயாவிளான் ப. நோ. கூ. சங்கம்)*



இலங்கைத் திருநாட்டின் முன் வரிசையில் சிறந்து விளங்குகின்றவற்றுள் ஒன்றெனக் கருதப்படும் வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது இருபத்தைந்து (25) வருட நிறைவான வெள்ளிவிழாவைக் கொண்டாடுகின்ற இந்த வேளையில் எமது கிராமத்தில் ஏறக்குறைய 20 வருடங்களுக்கு மேலாகக் கூட்டுறவுத் துறையில் தொடர்பு கொண்டதன் காரணமாகவும், சென்ற சில வருடங்களாக வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வளர்ச்சியில் ஈடுபட்டதன் காரணமாகவும் ஓர் நிர்வாகசபை உறுப்பினர் என்ற முறையில் இவ்விடயத்தைப் பிரசுரிப்பது குறித்துப் பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

இச் சமாசம் 1944ஆம் ஆண்டு சித்திரைமீ 3ஆம் திகதி வலிகாமம் வடக்குப் பகுதியில் தெல்லிப்பழைச் சந்திக்கருகாமையில் ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஓர் சமாசமாக ஆரம்பிக்கப்பட்டது. இச் சமாசத்திற்கும் சங்கத்திற்குமுள்ள தொடர்பு உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு போன்றதாகும். உயிருக்கு முடலுக்குமுள்ளது போன்ற ஓர் பிரிக்கமுடியாத தொடர்பைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சமாசங்களுக்கும் இடையில் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒரு தாயானவள் தனது பிள்ளைகளை வளர்த்து நல்வழிப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருப்பதுபோல சமாசத்தை வளர்க்க விரும்புகின்றவர்களும் அதன் அங்கத்துவ சங்கங்களைப் பெருக்க முற்படுகின்றவர்களும் இதன் வளர்ச்சியில் கவனம் செலுத்தாமல் இருக்க முடியாது. சமாசங்களின் வளர்ச்சி அங்கத்துவ சங்கங்கள் ஒவ்வொன்றும் தொழிற்படும் முறையிலேதான் தங்கி இருக்கின்றது. ஆரம்ப சங்கங்கள் ஒவ்வொன்றும் தங்கள் கிராமத்தில் சிறந்த முறையில் தொழிற்படாதுவிட்டால் சமாசங்களின் தொழிற்பாடும், ஊக்கமும் தடைப்படும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. சமாசங்கள் ஒவ்வொன்றும் ஆரம்ப சங்கங்களின் தேவைகளை அறிந்து அவற்றைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் செயல்பட வேண்டும். இன்று நாட்டின் பல பாகங்களிலும் சமாசங்கள் மீது பலவிதமான குறைபாடுகள் சுமத்தப்பட்டு வருவதை நேரடியாகக் கண்டும், பத்திரிகை வாயிலாக அறிந்தும் வருகின்றோம். இத்தகைய குறைபாடுகளை நுணுகி ஆராய்ந்து அவற்றை வேரோடு களையவேண்டியது ஆரம்ப சங்கங்களிலும் சமாசங்களிலும் அங்கத்துவம் வகிப்போரது இன்றியமையாத கடமைகளில் ஒன்றாகும்.

எமது சமாசத்தின் வளர்ச்சி வலிகாமம் வடக்குப் பகுதியிலுள்ள சங்கங்களினதும், பொதுமக்களினதும்தேவையைச் சிறந்த முறையில் பூர்த்திசெய்வதிலேயே தங்கியிருக்கின்றது. சில சங்கப் பணியாளர்கள் சமாசத்தில் அருமையாகக் கிடைக்கப்பெறுகின்ற நுகர்ச்சிப் பொருள்களையெல்லாம் சங்கத்தில் வைத்து விற்பனை செய்வதற்குப் பதிலாக இருட்டுச் சந்தைகளிலும் தனிப்பட்ட வியாபாரிகளிடமும் விற்பனைசெய்து வருவதைத் தடுத்து நிறுத்துவதில் ஆரம்ப சங்கங்களும் சமாசங்களும்

செயலாற்றவேண்டியது அவசியமாகும். இத்தகைய தவறுதல்களில் சங்கத்தை இட்டுச் செல்லாமல் சில சங்கங்களின் நிர்வாகசபையினர் விழிப்புணர்ச்சியோடு செயல்பட்டு வருவதும் சங்க ஊழியர்களைச் சரியான முறையில் இட்டுச்செல்வதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

வலிகாமம் வடக்குப் பகுதியில் உள்ள ஆரம்ப சங்கங்களுக்குத் தேவையான நுகர்ச்சிப் பொருள்களை உரிய உரிய காலத்தில் உயர்ந்த தரமான பொருள்களைக் குறைந்த விலையில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திற் பெற்று வழங்கி முன்னின்று உழைப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மேலும் எமது சமாசம் கீரிமலை, மயிலிட்டி முதலிய இடங்களில் நுகர்ச்சிப் பொருள் பண்டசாலைகளை நிறுவியிருப்பதும் வேறு சில கைத்தொழில்களை நிறுவ உத்தேசித்திருப்பதும் வரவேற்கக்கூடியனவாம்.

தனது வெள்ளி விழாவை மிகவும் கோலாகலமாக நடாத்தும் இச்சமாசம் மேலும் மேலும் வளர்ந்து கூட்டுறவுத்துறைக்கோர் எடுத்துக்காட்டாக விளங்க இச்சமாசத்தின் தலைவரும், நிர்வாகிகளும், ஊழியர்களும், பொதுச்சபை அங்கத்தவர்களும் ஆவனபுரிந்து சமாசத்தின் வளர்ச்சிக்கு மேலும் உழைப்பார்கள் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்.

வணக்கம்.

மேனாட்டிலிருந்து கூட்டுறவுப் பண்டம் தமிழ்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டதெனச் சிலர் தவறாகக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூட்டுறவுப் பண்டத்தைச் சுவைத்தவர்கள் நந்தமிழ் மக்கள். அவ்வாறு சுவைத்ததன் பயனாக எழுந்தனவே சங்க இலக்கியங்கள். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண்கீழ்க்கணக்கும் சங்க இலக்கியங்கள் என்று போற்றும் நாம் அக்காலச் சங்க அமைப்பைச் சிந்தித்து இறும்பூதெய்த வேண்டாவோ? அக்கால இலக்கியங்கள் சிறந்தனவாயும் பெருமதிப்புள்ளனவாயும் விளங்குவதற்கு அவை சங்கத்தில் வைத்து ஆராயப்பட்டதே காரணமாகும். அக்காலச் சங்கங்களுக்கு அரசாங்கத்தின் உதவியும் பெருமதிப்பும் கிடைத்ததென்பதை இறையனார் களவியலுரை என்னும் நூல் எடுத்தியம்புகிறது.

★ ★ ★

கூட்டுறவியக்கம் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒவ்வொருவரும் தான் அங்கம் வகிக்கும் கூட்டுறவுச் சங்கத்தின் உபவிதிகளை நன்கு அறிந்து விளங்கியிருப்பது அவசியம். உபவிதியைப் பற்றிய எத்தகைய அறிவுமில்லாத பலர் சங்கப் பொதுக் கூட்டங்களுக்குச் சமுகமளிப்பதனால் கூட்டங்களை ஒழுங்காக நடாத்த முடியாத நிலைமை உண்டாகிறது. அங்கத்தவர்களுக்கு உபவிதிகளை விளக்கும் முகமாகக் கருத்தரங்குகளைக் காலத்திற்குக் காலம் நடாத்துவது ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் கடமையாகும்.

# எங்கள் சமாசத்தின் துரித வளர்ச்சி

பொது முகாமையாளர் திரு. ச. மு. அருளம்பலம் அவர்கள்

இச் சமாசம் 10 வயது பிராயமுடைய தாக இருக்கும்போது எட்டி அடி எடுத்து வைத்து நடக்கும் குழந்தையைப்போல வள ரத் தொடங்கிய காலத்தில்தான் நான் இச் சமாசத்தின் பொது முகாமையாளராகப் பதவி ஏற்றேன். அப்போது ஆண்டு 1955. பலவிதப்பட்ட இன்னல்களுக் கிடையில்— எதிர்ப்புக்கிடையில்—சட்ட குறுக்கீட்டுக்கிடை யில் — இன்று, 25 ஆண்டை அடைந்துள்ளது. இது வலிவடக்கு மக்கள் யாவருக்கும் ஆனந் தத்தைக் கொடுக்கவேண்டிய விடயமாகும். தொடக்கத்தில் ஏறக்குறைய 26,000 அரிசிக் கூப்பன்களுடன் தொடங்கிய இச் சமாசம் 10 வருடத்தில் 60,000 கூப்பன்களை உடைய தாகவும், இப்போது 1,05,000 கூப்பன்களுக் குப் பங்கீட்டுப் பொருள்களை விநியோகம் செய்யும் பெருமையை உடையதாகவும் இருக் கின்றது.

உணவுப் பொருள்களில் மட்டும் வியா பாரஞ் செய்த இச் சமாசம், 1957ஆம் ஆண் டில் கொழும்பிலிருந்து நேரடியாகக் கொள் வனவு செய்யத் தொடங்கியதும், கொழும் பிற்கும், தெல்லிப்பழைக்கு மிடையில் லொறி சேவை ஆரம்பித்து இன்றும் வெற்றிகரமாக அத் தொழிலை நடத்திக்கொண்டு வருகிறது. கொழும்பிற்கு லொறி சேவை ஆரம்பித்ததும் உணவுப் பண்டங்களல்லாத வேறு பல பொருள்களிலும் வியாபாரஞ் செய்து வரு கிறது. புடைவை வியாபாரந் தொடங்கியதி லிருந்து வருடா வருடம், சுத்த இலாம் கூடிக் கொண்டு வருகிறது. 1960ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கத் திணைக்களங்கள் பலவற்றின் கட் டிடக் கொந்திருத்துக்களைப் பொறுப்பேற்று இலாபகரமாகத் திறம்படச் செய்து கொடுத்து அத் திணைக்களங்களின் பாராட்டையும் பெற் றிருக்கிறது. இன்னும் தொடர்ந்து கட்டிடக் கொந்திருத்து வேலைகளில் ஈடுபட்டுக்கொண் டிருக்கிறது. சமீபத்தில் சுன்னுகத்தில் ஒரு பாண் சாலையையும் பொறுப்பேற்றுப் பொது மக்கள் திருப்திப்படக் கூடியவாறு வியாபாரஞ் செயற்படுகிறது.

1958ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கச்சேரி முன்றிலில் சத்தியாக்கிரகப் போர் நடந்த போது, சமாசங்களின் பிரதிநிதிகள் கச்சேரிக் குச் சென்று, கூப்பன்களை ஒப்படைத்து அரிசி யைப் பெற்றுப் பொதுமக்களுக்கு விநியோகஞ் செய்ய முடியாதிருந்த அந்த நேரத்தில், இச் சமாசம் கொழும்பிலிருந்து மா, சீனி மற்றும் உணவுப் பொருள்களையும், வவுனியா, மன் ஞரிலிருந்து நெல்லையும் கொள்வனவு செய்து, வலி–வடக்கு மக்கள் எந்த விதத்திலும் கஷ்ட மடையா வண்ணம் உணவுப் பொருள்களைச் சிறப்பாக விநியோகித்துப் பெரும் சேவையைச் செய்துள்ளது. அத்துடன் நின்றுவிடாது, இப்படிக் கொள்வனவு செய்ய வசதியின்றிக் கஷ்டப்பட்ட வடமாகாணத்திலுள்ள இரண் டொரு சமாசங்களுக்கும் உணவுப்பொருள் களைக் கொடுத்து அப் பகுதி மக்களுக்கு அவற்றை விநியோகிக்க உதவியாக இருந்த பெருமையும் இச் சமாசத்தைச் சாரும்.

12 உத்தியோகத்தர்களுடனும், 8 கூலி ஆட் களுடனும் நான் கண்ட இச் சமாசத்தில் இப் பொழுது 51 உத்தியோகத்தர்களும், 20 கூலி ஆட்களும் வேலை செய்கிருர்கள். இதிலிருந்து சமாசம் எவ்வளவு முன்னேற்றமடைந் திருக் கிறது என்பது புலனுகும். காலத்திற்குக்காலம் அங்கத்துவ சங்கங்களால் தெரியப்படும் நிர் வாகசபை அங்கத்தவர்கள் பொதுச்சேவை ஆர்வத்துடனும், நீதி தவருமலும், கடமை யுணர்ச்சியுடனும் செய்கின்ற சேவையும் பணி யாளர்கள் எல்லோரும் ஒற்றுமையாகத் தத்தம் கடமைகளிற் கண்ணுங் கருத்துமாக மெய் வருத்தம் பாராது செய்கிறன்ற சேவை யுமே இச் சமாசத்தின் நல் வளர்ச்சிக்குக் காரணமாகும்.

கூட்டுறவுப் பகுதியினர் வருடா வருடம் எண்பார்வையறிக்கை மூலமும், சந்தர்ப்பம்

ஏற்பட்ட நேரங்களில் வேண்டிய ஆலோசனை களைக் கூறியும் ஊக்கப்படுத்தியமை சமாசத் துடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொருவராலும் போற்றப்பட வேண்டியதாகும்.

தெல்லிப்பழையிலும், சுன்னுகத்திலும் தொடங்கப்பெற்ற மொத்த நிலையங்கள் தொடக்கத்தில் வாடகைக் கமர்த்தப்பட்ட கட்டிடங்களிலேயே நடத்தப்பட்டு வந்தன. சிறிது காலத்தின்பின் தெல்லிப்பழையிலுள்ள கட்டிடத்துடன் சேர்ந்த நிலமும் சமாசத் தால் வாங்கப்பட்டு மேலும் கட்டிடங்கள் அமைத்து ஒரு முக்கிய மூலதன மாக்கப் பட்டது. 1958ஆம் ஆண்டில் சுன்னுகத்திற் கென ஒரு காணி வாங்கப்பட்டு அதில் ஒரு நவீன கட்டிடம் கட்டப்பட்டு, அக் கட்டிடத் தில் சுன்னுகத்தின் கிளை இப்பொழுது நடத்தப் பட்டு வருகிறது. இத்துடன் இப்போதைய கட்டிடத்தில் பொருள்கள் சேகரித்துவைக்கப் போதிய இடவசதி யில்லாததால் பக்கத்தில் உள்ள காணியையும் வாங்குவதற்கு நட படிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இச் சமா சத்திற்கென 5 லொறிகள் நிற்கின்றன. இருந் தும் வருடாவருடம் பல ஆயிரக்கணக்கான ரூபா லொறி வாடகையாகக் கொடுக்கப்படுவ தால், இன்னும் ஒரு லொறியும், ஒரு வானும் வாங்குவதற்கான நடபடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. இத்தகைய மூலதனப் பெருக்கம் வடபகுதியில் இச் சமாசத்திலுள் ளதுபோல இன்னும் சில சமாசங்களில் மட்டுமேயுண்டு எனக் கூறலாம்.

மேலும் தொழிலைப் பெருக்கும் முயற்சியில் சமாச நிர்வாகம் மிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. சமாசப் பரப்பில் ஒரு பருத்தி மின்தறி நிலையத்தை நிறுவுதற்கு ஏறக் குறைய 2 வருடகாலமாக விடா முயற்சி எடுத்து வந்துள்ளோம். இப்போதைய தலைவ ரான பண்டிதர் திரு. க. நாகலிங்கம் அவர் கள் ஓய்வு ஒழிவின்றி எடுத்த பிரயாசையின் காரணமாக அந் நிலையத்தை நிறுவுதற்கான உத்தரவு கிடைத்துள்ளது. அதை நிறுவுதற் கான முயற்சியில் நிர்வாகசபை உறுப்பினர்கள் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறுர்கள். நவீன வசதியுடன் மிகத் திறமான விஸ்கோத்து உற்பத்திச்சாலை யொன்றை நிறுவுதற்கு அர சாங்கத்திடம் உத்தரவு பெறுவதற்கான ஒழுங்குகள் நடைபெற்றுக்கொண்டு இருக் கின்றன. வடபகுதி மக்களுக்கு அத்தியாவசி யம் தேவைப்படும் பிறநாட்டுப் பொருள் களை இறக்குமதி செய்யும் முயற்சியிலும் சமாசம் ஊக்கங்காட்டி வருகிறது.

சமாசத்தின் முன்னேற்றத்தில் முழுக்க முழுக்க அக்கறைகொண்டு அயராதுழைத்த உழைக்கின்ற பணியாளர்களுக்கும், நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் என் மனமார்ந்த பெரு நன்றியைத் தெரிவிப்பதுடன் இப்பகுதி மக்கள் இந்த நிறுவனம் மேலும் மேலும் செழித்தோங்கத் தங்களால் இயன்ற ஒத் துழைப்பை நல்கவேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன்.

❀

*கூட்டுறவு இயக்கத்தைப் பாழ்படுத்துஞ் சாதனங்களில் பிழையாகச் செயலாற்றும் நிர்வாக சபைக்கே முதலிடமுண்டு. நிர்வாகசபை சங்கத்திற்குப் பாதகம் விளைப்பது வேலியே பயிரை மேய்ந்த கதைபோல்வது. வேலி பயிரை மேய முற்பட்டால் பயிர் தழைப்பதெப்படி? சங்க ஊழியர்கள் தமது உழைப்பிற்கு வழிகாட்டுஞ் சங்கத்தில் விசுவாசமில்லாமல் நடந்தால் அச் சங்கமும் விரைவில் அழிந்துபோகும். சங்கம் புனிதமானது; அங்கு தகாத செயல்கள், எண் ணங்களுக்கு இடமில்லை என எண்ணி ஊழியர்கள் கருமமாற்றுவிட்டால் சங்கம் பலன் தர மாட்டாது. நிர்வாகசபைக்கும் ஊழியர்களுக்கும் பலியாகாத சங்கம் நன்கு வளர்வதில் ஐயமில்லை.*

# முன்னேற்றப் பாதையில் நாம்

சமாசக் கணக்காளர், திரு. மு. சின்னையா அவர்கள்

வலிகாமம் வடக்குப் பகுதி மக்களுக்குத் தேவையான நுகர்ச்சிப் பொருள்களைக் கொள்வனவு செய்து விநியோகம் செய்யும் நோக்கத்துடன் எமது நிறுவனம் அப் பகுதியிலுள்ள கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கங்களின் சமாசம் என்ற பெயருடன் 1944ஆம் ஆண்டு சித்திரை மாதம் 3ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. நுகர்ச்சிப் பொருள் விநியோக நோக்கத்துடன் ஆரம்பித்த சமாசம் நாளடைவில் தனது அங்கத்துவ சங்கங்களுக்குப் புடைவையும் மலிவான விலையிற் கொள்வனவு செய்து விநியோகம் செய்யத் தொடங்கியது.

ஒரு நோக்குள்ள கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கங்களின் சமாசமாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் 1960ஆம் ஆண்டு தை மாதம் 22ஆந் திகதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமாகித் தனது நோக்கங்களைப் பலவாக்கித் தனது அங்கத்துவ சங்கங்களுக்குப் பல வழிகளிற் சேவை செய்யக்கூடிய முறையில் விஸ்தரிக்கப்பட்டது. அதன் விளைவாகச் சீமெந்து, இரும்புவகை முதலிய பொருள்கள் உட்படத் தனது அங்கத்துவ சங்கங்களுக்குத் தேவையான பொருள்களனைத்தையும் மலிவான விலைக்குக் கொள்வனவு செய்து விநியோகம் செய்துகொண்டிருக்கின்றது.

ஆரம்பத்தில் கொழும்பிலிருந்து கூலி லொறிகளில் வரவழைத்த தனது பொருள்களை இன்று ஐந்து லொறிகளைச் சொந்தமாக வைத்திருப்பதால் தனது சொந்த லொறிகளில் ஏற்றி மலிவான விலைக்கு வரவழைக்கின்றது. தனது பொருள்களை ஏற்றுவது மட்டுமன்றி அங்கத்துவ சங்கங்களுக்கும் பொருள்களை மலிவான முறையில் ஏற்றுமதி செய்து கொடுத்துதவுகின்றது.

அங்கத்துவ சங்கங்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்துடன் மட்டும் நின்றுவிடாமல் எமது சமாசம் கட்டிடம், தொழில், ஏற்றுமதி முதலிய ஒப்பந்த வேலைகள் செய்வதிலும் ஈடுபட்டுப் பலருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்துக்கொண்டுமிருக்கிறது.

எமது நோக்கங்கள் அதிகரிப்பதுபோலவே வியாபாரமும், அதன் விளைவாக இலாபமும் வருடா வருடம் அதிகரித்துக்கொண்டிருப்பதை நோக்கினால் எம்மை எங்கள் அங்கத்தவர்கள் முழு மனதுடன் ஆதரிக்கிறார்களென்பதும், நாம் வளர்ந்துகொண்டே யிருக்கின்றோமென்பதும் நன்கு புலப்படும். இச் சந்தர்ப்பத்திற் கடந்த சிலகால வியாபார, இலாபப் பட்டியல் ஒன்றைத் தருவது பொருத்தமாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் எமது வியாபார, இலாபப் பட்டியல் வருமாறு :

| நிதிவருடம் | விற்பனை | மொத்த இலாபம் | சுத்த இலாபம் | மொ. இ. நூ. வீ. |
|---|---|---|---|---|
| 1963/64 | 7,047,804-98 | 100,653-63 | 52,316-73 | 1·4% |
| 1964/65 | 9,561,009-75 | 192,910-19 | 40,312-40 | 2% |
| 1965/66 | 9,999,744-81 | 196,069-36 | 12,510-10 | 2% |
| 1966/67 | 9,890,902-81 | 196,512-63 | 33,195-91 | 2% |
| 1967/68 | 10,698,523-27 | 280,530-90 | 95,093-35 | 2·6% |

மேற்காட்டிய பட்டியலிலிருந்து நாம் எப்படி முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்பது நன்கு புலப்படும். இன்றும், அண்மையில் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட பாண் உற்பத்தித் தொழிலும் விரைவில் எம்மால் ஆரம்பிக்கப்பட இருக்கும் மின்தறி நெசவு உற்பத்தியும் எமது சேவையும் வியாபாரமும் மேலும் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன என்பதற்குப் பெரும் எடுத்துக் காட்டுகளாகும்.

# எமது சமாசம் அன்றும் இன்றும்

பிரதம லிகிதர் பிரம்மஸ்ரீ ச. ஐயாச்சாமிக் குருக்கள் அவர்கள்



இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவுற்ற காலத்தில் நாம் ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் அடிமைகளாக இருந்தோம். அக்காலத்தில் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி மக்கள் இன்னல்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில், கூட்டுறவுமூலமே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளலாம் என உணர்ந்தார்கள். அதன் காரணமாக ஆங்காங்கு ஐக்கியபண்டசாலைகள் நிறுவப்படுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. அதே நேரத்தில் அரசாங்கம் காட்டிய ஆதரவு காரணமாக மழைக்காலத்தில் காளான் முளைத்ததுபோல ஆங்காங்கு பல கூட்டுறவுப் பண்டசாலைகள் நிறுவப்பட்டுப் பதியப்பட்டன.

அக்காலத்தில் தனவந்தர்கள் அத்தியாவசியம் தேவைப்படும் பொருள்களைத் தேவைக்கதிகமாக வாங்கக்கூடியதாயும் ஏழை மக்கள் அப் பொருள்களை வாங்க முடியாமலும் கஷ்டப்பட்ட ஒரு சூழ்நிலை இருந்தது. இதற்கு நிவாரணம் தேடும் முகமாக அரசாங்கம் பங்கீட்டுப் புத்தகம்மூலம் தேவையான பொருள்களைப் பங்கீடு செய்யும் முறையைத் தொடங்கியது. அதன் காரணமாக எல்லோரும் தத்தமக்குக் கிடைக்க வேண்டிய பங்கீட்டுப் பொருள்களைக் கூட்டுறவுப் பண்டசாலையில் இருந்து கஷ்டமின்றிப் பெறக்கூடியதாக இருந்தது.

தொடக்கத்தில் பண்டசாலைகளும் பங்கீட்டுப் பொருள்களை மொத்த வியாபாரிகளிடமிருந்து பெற்றுவந்தன. இப்படிப் பெறுவதில் ஒழுங்கீனங்கள் ஏற்பட்டதால் ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் உள்ள பண்டசாலைச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுப் பண்டசாலைச் சமாசங்களை நிறுவிக்கொண்டன. 1944ஆம் ஆண்டு வலிகாமம் வடக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நிறுவப்பட்டது. இச் சமாசம் அரிசி, மா, சீனி மூன்றையுமே விநியோகம் செய்தது. மற்றும் சில்லறைப் பொருள்களையும் கொர்லிக்ஸ், நெஸ்ரோ மோல்ட், ஓவல்ரின், தகரப்பால் போன்ற உப உணவுப் பொருள்களையும் மல்லாகத்தில் இருந்த கூட்டுறவு மொத்த ஸ்தாபனம் விநியோகம் செய்து வந்தது. சில வருடங்களின் பின் கூட்டுறவு ஆணையாளரின் ஆலோசனைப்படி கூட்டுறவு மொத்த ஸ்தாபனம் மூடப்பட்டு அங்கே இருந்த பொருள்கள் எல்லாம் சமாசத்தில் ஒப்படைக்கப்பட்டன.

இதன்பின் உப உணவுப் பொருள்களையும் சமாசமே சங்கங்களுக்கு விநியோகம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் சுன்னாகத்திலும் தெல்லிப்பழையிலும் தேவையான இடவசதியுடன் கூடிய கட்டிடங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு அக் கட்டிடங்களில் வைத்துப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. இவ்வாறு தனது அங்கத்துவ சங்கங்களுக்கு வேண்டிய அளவு திருப்தியாக உணவுப் பொருள்களை விநியோகம் செய்து அதன் காரணமாகக் கொள்ளை லாபமடித்த கள்ளச் சந்தைக்காரரை மண் கவ்வச் செய்து வலிகாமம் வடக்கில் வாகை மாலை சூடியது. தெல்லிப்பழையில் வாடகைக்கு அமர்த்திய கட்டிடத்தை அதுவரை சேர்ந்த லாபப் பணத்துடன் வங்கியிலும் கடனெடுத்து, 1949ஆம் ஆண்டில் இருபதினாயிரம் ரூபாவிற்கு வாங்கித் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டது.

சமாசங்கள் பண்டசாலைகளுக்கு உணவுப் பொருள்களை விநியோகம் செய்வதுபோல மொத்த வியாபாரிகள் தனிப்பட்ட சில்லறை வியாபாரிகளுக்கு உணவுப் பொருள்களை விநியோகம் செய்து வந்தனர். அப்படிச் செய்வதில் மொத்த வியாபாரிகள் ஒழுங்காக நடந்துகொள்ளாததினால் சில்லறை வியாபாரி

களும் சமாசத்திலேயே பங்கீட்டுப் பொருள் களைப் பெற்றுக்கொள்ளவேண்டிய ஒழுங்கு செய்யப்பட்டது. இதனுல் சமாசத்தின் வியா பாரம் மேலும் மேலும் விருத்தி அடைந்து வந்தது. அதன் காரணமாகச் சுன்னுகத்தில் ரூபா ஐம்பத்திராயிரத்துக்கு ஒரு காணி வாங்கி, 1964ஆம் ஆண்டில் இரு இலட்சம் பெறுமதியான கட்டிடம் ஒன்றை நிறுவி வாடகைக் கட்டிடத்தில் இருந்து சமாசம் புதிய கட்டிடத்துக்கு மாற்றப்பட்டது. தெல் லிப்பழையில் இயங்கிவந்த கந்தோர்ப் பிரிவும் இக் கட்டிடத்துக்கு மாற்றப்பட்டது.

இருபத்தைந்து வயது பூர்த்தி அடைந்த இச் சமாசம் தெல்லிப்பழையிலும் சுன்னுகத் திலும் சொந்தக் கட்டிடங்களில் மொத்தமாக நுகர்ச்சிப் பொருள் விநியோகம் செய்யும் இடங்களையும், தெல்லிப்பழையில் மொத்தப் புடைவை விநியோக நிலையத்தையும், தெல் லிப்பழையிலும் சுன்னுகத்திலும் பொதுமக்க ளுக்குச் சேவை செய்யும் முகமாக இரு சில் லறைப் புடைவை நிலையங்களையும், இரு சில்லறைப் பொருள்கள் விற்பனை நிலையங்களை யும் நடத்திக்கொண்டு வருகிறது. அத்துடன் கீரிமலையிலும் மயிலிட்டியிலும் இரு பங்கீட்டுப் பொருள் கிளை நிலையங்களை நடத்திக்கொண்டு வருகிறது. மிகச் சமீபத்தில் மயிலிட்டி மக் களின் வேண்டுகோளுக்கிணங்கி மீன்பிடி உப கரணங்களையும் இயந்திர உதிரிப் பாகங்களை யும் விற்பதற்காக ஒரு நிலையம் நிறுவப்பட் டிருக்கிறது. மிக விரைவில் ஒரு மின் தறி நிலை யத்தை நிறுவுதற்கான முயற்சிகள் நடைபெற் றுக்கொண்டிருக்கின்றன. ஐந்து லொறிகளைச் சொந்தமாக வைத்திருக்கும் இச் சமாசம் இன்னும் இருலொறிகளும் ஒரு வானும் வாங்கு வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இச் சமாசம் இப்படி வளர்ச்சி பெறக் காலத்துக்குக்காலம் பெரிதும் உதவியும் ஊக்க மும் அளித்த உதவி ஆணையாளர்கள்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றேன் எனக்கேட்ட தாய்"

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க உள்ளங் குளிர்வார்கள்.

கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாகஸ்தர்களாகக் கடமையாற்றுவோர் தங்கள் கதிரைகளை விட்டு விலக மனமில்லாது தவருன முறைகளைக் கையாண்டேனும் வருடாந்தப் பொதுக்கூட் டத்தில் தாம் திரும்பவும் நிர்வாகியாகக் கூடிய நிலைமையை உண்டாக்குகிருர்களென்பது பகிரங்க இரகசியம். இத்தகைய நிலைமை வெறுக்கத்தக்கது. நேர்மையான வழியில் தெரிவு செய்யப்பட்டாலுங்கூட வயோதிப நிர்வாகிகள் இளைஞர்களுக்குச் சந்தர்ப்பமளித்து எதிர்காலத் திலும் சங்கம் நன்கு நடைபெற வழிவகுக்க வேண்டும்.

* * *

கூட்டுறவுத் துறையில் கௌரவ பணியாளராகிய நிர்வாகசபையினரில் ஒரு சிலர் மக்கள் பணிபுரிதலையே பெருநோக்காகக் கொண்டு அதில் ஈடுபட்டு வருகிருர்கள். இவர்கள் போற்றத் தக்கவர்கள். இன்னெரு சாரார் பேரையும் புகழையும் விரும்பி ஈடுபடுகிருர்கள். இவர்களைப் பற்றிப் பேசாதிருப்போம். இவர்களால் தீங்கில்லையல்லவா? மற்றெரு சாரார் தமது நயங் கருதி ஈடுபடுபவர்கள். இவர்களைக் கூட்டுறவுத் துறையிலிருந்து விரட்டினுலன்றிக் கூட்டுறவு இயக்கம் சிறப்பாக நடைபெற முடியாது. இவர்களைக் கண்டுபிடிப்பதில் அங்கத்தவர்கள் அதிசிரத்தை யெடுக்கவேண்டும்.



அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா அவர்கள்
கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைக்கிறார்.



சுன்னாகத்திலுள்ள மொத்த விற்பனைநிலையக் கட்டிடத்
திறப்பு விழாவில்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்
திரு. P. E. வீரமன் அவர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்படுகிறார்.

# கூட்டுறவில் நிர்வாகமும் ஊழியர்களும்

சமாச லிகிதர், திரு. சி. செல்வராசா அவர்கள்

கூட்டுறவு என்பது வெறும் பேச்சுத் தத்துவமுமல்ல, பொழுதுபோக்கு விஷயமுமல்ல. இது ஒரு சிறந்த வாழ்க்கைமுறை. நமது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு ஒத்த தேவைகள் நிறைந்த பலர் ஒன்றுகூடிச் செயலாற்றும் முறை. இன, மத, மொழி வேறுபாடுகளுக்கப்பால் நின்று ஐக்கியத்தையும் நிலையையும் உண்டாக்கும் ஒரே வழிதான் கூட்டுறவுமுறை.

தேவைகளைப் பூர்த்திசெய்ய விழைவோர் ஒன்று சேர்ந்தபின் எல்லோரும் அத் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய கருமங்களிலீடுபடத் தேவையில்லை; ஈடுபடவும் முடியாது. எனவே, தமக்காகத் தமது கருமங்களைத் திறம்படச் செய்யக்கூடியவர்களைத் தமக்குள்ளே தாமே தெரிந்தெடுக்கின்றனர். இவ்விதம் தெரிந்தெடுக்கப்பட்டவர்களிடமே நிருவாகப் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் தமக்குள் ஒரு தலைவரைத் தெரிந்தெடுக்கின்றனர்.

நிருவாக உறுப்பினர்களும், தலைவரும் கௌரவ ஊழியர்கள். அவர்களிடம் முழு நேரப் பணியை எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்ப்பதும் முறையல்ல. எனவே கூட்டுறவு ஸ்தாபனங்களில் அன்றாட அலுவல்களை அவதானிப்பதற்காகக் கூட்டுறவு நிருவாகம் ஊழியர்களை நியமிக்கின்றது. எனவே கூட்டுறவு நிருவாகத்தில் இரு தூண்கள் உண்டு. ஒன்று நிருவாக உறுப்பினர், மற்றது பணியாளர்கள்.

கூட்டுறவு இயக்கத்தை அழிக்க எழும் புயல், பூகம்பம், இடிமுழக்கம் போன்ற சமூகத் தீய சக்திகளிடமிருந்து காப்பாற்ற இவ்விரு தூண்களும் முழுப் பலத்துடனும், நிரந்தர ஒற்றுமையுடனும் எந்நேரமும் நிமிர்ந்துநிற்றல் வேண்டும். ஒரு தூணின் சிறு சரிவுகூட கட்டிடத்தை விழுத்தப் போதுமானதல்லவா?

ஊழியர்களைக் கூட்டுறவில் உருவாக்கிவிடுபவர்கள் நிருவாக உறுப்பினர். அவர்களை மேற்பார்வை செய்து வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தை நிர்ணயித்து அவர்களை வாழ்விப்பவர்கள் நிருவாக உறுப்பினர். அவர்களின் தகாத செயல்களைக் கண்டித்தும், தண்டித்தும் நல்வழிப்படுத்துபவர்கள் நிருவாக உறுப்பினர். எனவே கூட்டுறவு ஊழியர் கூட்டுறவுக் கொள்கைகளுக்கு முரணுன அல்லது தவருன பாதையிற் செல்வாராயின் அதன் பெரும் பகுதிப் பொறுப்புக் கூட்டுறவு நிருவாகத்தினுடையது என்பதை எவரும் மறுக்கமுடியாது. குழந்தைகளின் தவறுகளுக்குப் பெற்றேர் எவ்விதம் பொறுப்பாளியாகின்றுர்களோ அவ்விதமே கூட்டுறவு ஊழியர்களின் பிழைகளுக்கும் நிருவாக உறுப்பினர் பொறுப்பாகின்றுர்கள். குடும்பச் சூழ்நிலை, பெற்றேரின் பழக்க வழக்கங்கள், பெற்றேரின் செயல்கள், குழந்தைகளின் தனித்திறன் வளர்ச்சியில் பெற்றேர் காட்டும் ஆர்வம் போன்றவையே குழந்தையின் மனப்போக்கையும் வளர்ச்சியையும் நிர்ணயிக்கிறது. பெற்றேரின் தீய பழக்கங்கள் குழந்தைகளிற் படிந்துவிடுகின்றன. பெற்றேர் காட்டும் புறக்கணிப்பு குழந்தைகளைத் தீயவர்களாக்குகின்றது. அளவு கடந்த அன்புங்கூட (செல்லங்கொடுத்தல்) குழந்தையைத் தீயவனுக்கிவிடுகிறது. குழந்தை அறிவுத்துறையில் வளர்ச்சியுருமையும் பெற்றேரின் அறிவின்மையும் குழந்தை தீயவனுக உதவுகின்றன. குழந்தையின் வளர்ச்சியில் பெற்றேருக்கு எவ்வளவு பங்குண்டோ, அவர்களின் தவறுதல்களுக்குப் பெற்றேர் எந்த அளவில் பொறுப்பாளிகளோ, அதே போன்று கூட்டுறவு ஊழியர்களின் வளர்ச்சியிற் பங்கும், அவர்கள் விடும் தவறுகளில் பொறுப்பும் கூட்டுறவு நிர்வாக உறுப்பினர்களுக்கு உண்டு. எனவே நிருவாகம் தனது பொறுப்பையும், கடமையையும் உணர்ந்து, கூட்டுறவுத் தத்துவத்தில் முழு நம்பிக்கை கொண்டு கூட்டுறவு ஊழியர்கள் எல்லோரையும், எவ்வித பேதமுமின்றிச் சம அன்பு பாராட்ட வேண்டிய தமது குழந்தைகளென மனதிலிருத்திச் செயல்புரிந்தால் கூட்டுறவு இயக்கம் மேன்மையுறும்.

குடும்ப மேன்மையும் சிறப்பும் முழுக்க முழுக்கப் பெற்ருேரில் தங்கவில்லை; பிள்ளைகளிலும் தங்கியுள்ளது. குடும்பச் சிறப்பையும் மேன்மையையும் காப்பாற்ற எப்படிப் பிள்ளைகள் வாழவேண்டுமோ, எப்படி அயராது உழைக்க வேண்டுமோ, அதேபோன்று கூட்டுறவு ஊழியர்களும் தமது குடும்பமாகிய கூட்டுறவின் சிறப்புக்கும் மேன்மைக்குமாக அயராது நேர்மையாக உழைத்தல் வேண்டும். கூட்டுறவு ஊழியர்களின் நேர்மையும் ஆர்வமிக்க உழைப்புமே கூட்டுறவு நிருவாக உறுப்பினருக்குப் பெருமை தேடித்தரத்தக்கன. அது மட்டுமல்ல, கூட்டுறவுக் குடும்பத்தை வளர்ப்பனவுங்கூட.

கூட்டுறவு நிலையங்கள் கள்வர்கள் இருப்பிடம், நேர்மையற்றவர்களின் புகலிடம், மறைமுக வருமானங்கள் தேடுவோரின் இன்ப வீடு என்றெல்லாம் மக்கள் மத்தியில் பேச்சடிபடுகின்றனவே. இதற்குக் காரணம் என்ன? கூட்டுறவு எதிரிகளாற் கிளப்பிவிடப்பட்ட பொய்ப்பிரசாரத்தின் ஒலி என்று கூறி நம்மை நாமே சமாதானப்படுத்திக்கொள்ளலாம். ஆயினும் ஏதோ ஒன்று எம்முள்ளத்தை உறுத்துகின்றது, இவ் விடையைக் கேட்டு. அதுதான் மனச்சாட்சி.

கூட்டுறவு இயக்கங்களின் கடந்தகாலச் சரித்திரத்தின் கதாபாத்திரங்களாக கௌரவ உத்தியோகத்தர்கள், சம்பளம் பெறும் ஊழியர்கள், மேற்பார்வை செய்யும் அரசாங்க அதிகாரிகள் அத்தனைபேரும் ஒன்று கூடிக் கூட்டுறவோடு தொடர்புள்ள தமது சரித்திரச் சம்பவங்களை மறைக்காமலும் மழுப்பாமலும் நேர்மையுடன் உண்மையை எடுத்துக் கூறிஞல் தூய்மையுள்ளவர்கள் எத்தனை வீதம் வரும் என்பதை உங்கள் கற்பனைக்கு விட்டுவிடுகின்றேன். வேலியே பயிரை மேயும் விந்தைகளும், கண்ணில் மண்ணைத் தூவும் காட்சிகளும், பித்தலாட்டமும், அதிகார துஷ்பிரயோகமும் காணப்படவில்லையெனக் கூட்டுறவுச் சரித்திர புருடர்கள் இதய சுத்தியுடன் கூறமுடியுமா? இத் தவறுகளுக்குக் காரண புருடர் யார்? பொதுச்சபை என்றே கூற வேண்டும். திறமையும், மதிநுட்பமும், கூட்டுறவுக் கொள்கையில் உறுதியான நம்பிக்கையும், நடுவழி நிலைமையும், நேர்மையும், ஆர்வமும் நிறைந்த சிறந்த நிருவாக உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் வேண்டும். 'ஆமாம் சாமி'களும், அக்கறையற்ருேரும், கூட்டுறவுத் தத்துவம் புரியாதவர்களும், நேர்மையற்றவர்களும், நடுநிலையற்ருேரும், பொறுப்புணர்ச்சியற்ருேரும் நிருவாகத்தில் இடம் பெறுதல் கூடாது.

கூட்டுறவு ஊழியர்களை நிருவாக சபை தெரிவு செய்கிறது. கூட்டுறவுக் கொள்கையில் பற்றும் நேர்மையும் மிக்கவர்களையே தெரிவு செய்தல் வேண்டும். கூட்டுறவு ஊழியர்கள் ஒரு கொள்கைக்காக இலட்சியத்துக்காகத் தமது சேவையை அளிக்கிருேம் எனக் கருத்தில் இருத்தல் வேண்டும். தமது விவேகத்தையும செயல்திறனையும் ஆர்வத்தையும் நேர்மையற்ற வழிகளிற் செலுத்துவதை விடுத்து உண்மையான நேர்வழிகளிற் செலுத்தவேண்டும். கடமைகளை உணர்ந்து பொறுப்புணர்ச்சியுடன் கட்டுப்பாடற்ற சுதந்திரமுறையில் பணியாற்றும் பண்பு இருத்தல் வேண்டும். கூட்டுறவுக் கொள்கையின் வெற்றியே தமது வாழ்வு எனக் கொள்ளுதல் வேண்டும்.

கூட்டுறவு இயக்க நிருவாகத்தில் ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்க நிருவாகமும் ஊழியர்களும் நீண்டநாள் இதயசுத்தியுடன் உழைக்க வேண்டியுள்ளது. பெற்ருேரும் பிள்ளைகளும் போன்று கூட்டுறவுத் தத்துவங்கள் காட்டும் உண்மை வழியில் தூய அன்புடன் இணைந்து உழைக்க வேண்டும். மலைபோல் வளர்ந்துள்ள மாசுகளை மாற்றவேண்டும். கூட்டுறவு என்பது நேர்மையான வழி, கூட்டுறவாளர்கள் நேர்மையானவர்கள், கூட்டுறவு ஊழியர்கள் நேர்மையானவர்கள் என்ற மனப்பான்மை மக்கள் மத்தியில் நிலைத்திருக்கச் செய்தல் வேண்டும். அப்போதுதான் கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக மலர முடியும். அந்த நல்ல பணியினைச் செய்திடக் கூட்டுறவு ஊழியரே, கூட்டுறவாளரே இந்த வெள்ளிவிழாவில் மன உறுதி கொள்ளுங்கள். மலர்ச்சி நிறைந்த கூட்டுறவுச் சமுதாயத்தை விரைவிற் காணுங்கள்.

# கூட்டுறவும் கிராம விருத்தியும்

சமாச லிகிதர், திரு. சீ. விஜயசுந்தரம் அவர்கள்

'கூட்டுறவு' என்றதும் நமது கண் முன்னே ஒரு வகுப்பறையும், சில மாணவர்களும், பிரம்புடன் மேசையருகே தமது மூக்குக் கண்ணுடியைச் சற்று நிமிர்த்திவிட்டுக் கொண்டு மிடுக்கோடு நிற்கும் ஆசிரியரின் தோற்றமும் தெரிவதை நாம் உணர்கிறேம். ஆம்! பல ஆண்டுகளுக்குமுன் நாம் கற்ற 'ஒற்றுமையே பலம்' என்ற பாடம் நமது மனமாகிய 'ரேப் றெக்கோடரிலே' ஓடுகிறது. விறகுக்கட்டைத் தனித்தனியாக முறிக்க முடியாத சகோதரர்கள் ஒன்று சேர்ந்து அதை இலகுவிலே முறித்துவிட்டதை எண்ணும்போது கூட்டுறவு இயக்கத்தின் ஆணிவேர் எங்கு இருக்கிறது என்பதை யாரும் இலகுவிற் புரிந்து கொள்வர். ஆதிகாலத்திலே வாழ்ந்த மக்கள் காட்டு மிருகங்களுக்குப் பயந்து கூட்டம் கூட்டமாக வாழ்ந்தார்கள். கடலிலே வியாபாரம் செய்யச் சென்றவர்கள் கடற் கொள்ளைக்காரரிடமிருந்து தம்மைப் பாதுகாக்க ஒன்று சேர்ந்துசென்றனர். இவ்வாறு இவர்கள் ஒன்று சேர்ந்த சேர்க்கையை ஒரு கூட்டுறவு என்றுல் அது பிழையாகாது.

மனித சமுதாயம் நாகரீகம் அடைய முற்பட்டது. சிறிது சிறிதாக நாகரீகம் வளர்ச்சி பெற மனிதன் தனது உணவு உடை முதலியவற்றை மாற்றிக்கொண்டான். காட்டிலே வேட்டையாடி உண்டவன் காய்கறிகளையும், தானியங்களையும் உண்டாக்கி உண்ணப் பழகிக்கொண்டான். இதனுல் அதிக உணவு தேவைப்பட்டது. காடாகக் கிடந்த இடங்களைக் களனிகளாக்கி அவற்றிலே பயிரை உண்டாக்கினுன். இவ்வாருக வளர்ச்சியுற்ற மனித சமுதாயம் காலத்துக்கேற்பப் பல வழிகளிலே மாற்றம் அடையத் தொடங்கியது. பண ஆசை கொண்ட பலர் செல்வம் சேர்ப்பதையே நோக்கமாகக்கொண்டு சிலரின் உரிமைகளைத் தமதாக்கி, வசதி குறைந்தவர்களைத் தமது அடிமைகளாக்கி, அவர்களின் இரத்தத்தைப் பிழிந்து, தமது நிலைமையை மேம்படுத்திக் கொண்டனர். விற்பவர், வாங்குவோர் என்ற நிலை ஏற்பட்டது. இதனுல், பொருள்களின் விலை ஏற்றமடைய ஏழைமக்கள் பாதிக்கப்பட்டுப் பட்டினியால் இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த மாதிரியான ஒரு நிலையை மாற்றியவர்கள் 'றுெச்டேல் முன்னேடிகள்' என்று கூறலாம்.

'றுெச்டேல்' என்னும் கிராமத்திலே வேலை செய்த ஒரு சில தொழிலாளர்கள் ஒன்றுசேர்ந்தனர். தமக்குத் தேவையான உணவுப் பொருள்களைத் தாமே தயார் செய்துகொண்டனர். இலாப நோக்கங் கருதாது தமது அங்கத்தவரிடையே பொருள்களை விநியோகஞ் செய்து, வருட இறுதியிலே தேறிய இலாபத்தை அங்கத்தவர்களுக்குள் பகிர்ந்துகொண்டனர். 1844ஆம் ஆண்டளவிலே ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம் மாபெரும் வெற்றியைக் கொடுத்தது, இவர்களைப் பின்பற்றி வேறு பல பாகங்களிலும், பல இயக்கங்கள் தோன்றின. இவ்வியக்கங்கள்தான் இன்று உலகின் பல பாகங்களிலும் பல்கிப் பெருகிக் 'கூட்டுறவு இயக்க'மாக மிளிர்கின்றன.

புனிதமான இக் கூட்டுறவு இயக்கத்திலே சாதி, மத பேதத்துக்கு இடமின்றி, அனைவரும் சமத்துவமென்ற அத்திவாரத்திலே, தங்கள் பொருளாதார நிலையை வளர்க்க. தாமாக விரும்பி இவ்வியக்கத்திலே பொதுப் பற்றுடையவராகச் சேருகின்றனர். இவ்வியக்கத்திலே அங்கத்தவராகச் சேருகின்ற ஒருவர் எத்தனை பங்குகள் வைத்திருந்தபோதிலும் ஒரு வாக்குரிமையே பெறுகின்றுர். ஆகவே இவ்வியக்கத்தில் முதலீட்டின் பலத்தைக்கொண்டு சொந்தச் செல்வாக்கை உபயோகிக்குந் தன்மை அற்றுப்போய்விடுகிறது. இதுவரை கூட்டுறவு இயக்கத்தின் பொதுத்தன்மை ஆராயப்பட்டது. இனி நமது நாட்டிலே கூட்டுறவு இயக்கம் எந்த அளவுக்குப் பயன்படுத்தப் படலாமென்பதை ஆராய்வோம்.

நமது நாட்டிலே, இவ்வியக்கம் ஆரம்பமாகி 50 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இவ்வியக்கம் ஏனைய நாடுகளில் இருக்கின்ற அளவுக்கு இங்கு வளர்ச்சி பெருகாவிட்டாலும், குறிப்பிடத்தக்களவு நாட்டுக்குச் சேவை புரிகிறது என்பதை மறுக்க இயலாது. கிராமப் புறங்களிலே உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு மக்களுக்குச் சேவை புரியலாமென்பதை ஆராய்வதே நமது நோக்கமாதலால், இங்கு விரிவாக அவ் விஷயத்தை நோக்குவோம். பெரும்பான்மையும், கிராமப் பகுதிகளிலே, விவசாயம், குடிசைக் கைத்தொழில் முதலியனவே காணப்படுகின்றன. இவற்றிற்கான மூலப்பொருள்கள் இலகுவில் கிடைக்கக்கூடியதாக இருக்கும். உதாரணமாக யாழ்ப்பாணப் பகுதியிலே, பனை அதிகம். பனையிலே இருந்து கிடைக்கும் ஓலை, ஈர்க்கு, கருப்பநீர் முதலியவற்றைக் கொண்டு சில சிறு கைத்தொழில்களைச் செய்யலாம். வேறு சில பகுதிகளிலே தென்னைமரங்கள் அதிகமாக இருக்கும். அப்பகுதிகளிலே தும்புக் கைத்தொழிலை ஆரம்பிக்கலாம். இவ்வாறு நமது நாட்டின் பலபாகங்களிலும் பல மூலப்பொருள்களை நாம் காண்கிறோம். ஆனால் இன்றைய உலகிலே, மூலப்பொருள்களுக்கெல்லாம் மூலப் பொருளாக இருக்கும் பணப்பிரச்சினைதான் தீர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. இப் பிரச்சினைக்குத் தீர்வு காணவே கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றுபட்டு உழைத்தல் வேண்டும்.

இன்று மேற்கூறியவை சம்பந்தப்பட்ட சில கைத்தொழில்கள் தனியார் துறையினரால் நடாத்தப்படுகின்றன. இதனால் பலர் குறைந்த சம்பளத்துக்கு வேலை பெறுவதும், அதிக விலை கொடுத்து அப்படி உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வாங்க வேண்டியதுமான நிலைமை இருக்கின்றது. ஏனெனில், தனிப்பட்ட முதலாளிகளின் ஒரே நோக்கம் கூட்டுறவு இயக்கத்தின் நோக்கத்துக்கு நேர்மாறான அதிக இலாபம் பெறுவதேயாகும்.

கூட்டுறவுச் சங்கங்களிலே அந்த அந்த இடங்களைச் சேர்ந்தவர்களே அங்கத்தவர்களாய் இருப்பதால் ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்து, புரிந்துகொள்ளும் வாய்ப்பு உண்டு. எனவே சிறு சிறு தொகைகளைக் கடனாகக் கொடுத்து, குறிப்பிட்ட அங்கத்தவர்கள் அதைச் சரியான முறையிலே உபயோகிக்கிறார்களா என்பதை நன்கு அவதானித்து உரிய காலத்திலே விளைபொருள்கள் விற்கப்பட்டதும் அக்கடனைத் திரும்ப அறவிட்டுக்கொண்டால் சங்கத்தின் பணநிலை எப்பொழுதும் சீராக இருக்கும். அங்கத்தவர்கள் பணத்தைத் தவறான வழியிலே உபயோகிப்பதும், பின் குறிப்பிட்ட தொழிலைச் செய்து முடிக்க வியலாது திண்டாடுவதும், பலர் தமது கடனை அடைக்க முடியாது கஷ்டப்படுவதுமே சங்கத்தின் பணநிலை மோசமடைதற்குக் காரணமாகும். கிராம மக்கள் ஒன்று சேர்ந்து தத்தமது நிலைமையை விருத்தி செய்வதற்காகப் பல கைத்தொழில்களிலும் ஈடுபடல் வேண்டும். சுயநலங் கருதித் தனிப்பட்ட முறையிலே சில தொழில்களை நடாத்த எத்தனிப்பதால் பணக்கஷ்டம் கண்டு, இடை நடுவே நிறுத்தவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனாற் சொற்ப முதலையும் இழந்துவிட வேண்டியநிலை உருவாகும்.

மேலும் நமது மத்தியிலே, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், சமாசங்களும் உள்ளூர் உற்பத்திகளை, பொதுமக்களாகிய அங்கத்தவர்களிடம் இருந்து வாங்கி அவற்றைச் சந்தைப்படுத்த வேண்டும். இத் துறையிலே சமாசங்கள் இக் காலத்திலே ஈடுபட்டுள்ளன. உதாரணமாக, உள்ளூர்களிலே தயாராகுந் துணிகளை நமது வலிவடக்குச் சமாசம் கொள்வனவு செய்து, விற்பனை செய்வது, அவ்வூர் நெசவுத் தொழிலாளர்களுக்கு ஒரு பெரிய நிவாரணமாகும். இவ்வாறு ஒவ்வொரு சமாசமும் செய்தல் வேண்டும். இப்படியே கிராமங்களில் உற்பத்திசெய்யப்படும் ஏனைய பொருள்களையும் வாங்கி, சந்தைப்படுத்திக் கொடுத்தால், அவர்களுக்கு மேலும் மேலும், அத் தொழிலிலே ஊக்கம் உண்டாகும். இதனால் உற்பத்திகளும் நாட்டின் பொருளாதார நிலையும் சீரடைவதோடு, இன்று வேலை தேடி அலையும் நமது வாலிபர்களும், ஊதியம் கிடைக்குமென்ற ஒரு நம்பிக்கையோடு வேலை செய்வார்கள். இதனால் வேலையில்லாப் பிரச்சினையும் குறையும்.

கிராம அபிவிருத்தியானது அக் கிராம மக்களுடைய ஒற்றுமையிலும், முயற்சியிலுந்

தான் தங்கியிருக்கிறது. அரசை நம்பியிராது மக்கள் தாமாக்வே பல பொதுப் பணிகளில் ஈடுபடல் வேண்டும். இதனுல் அதிக நன்மைகளைப் பெறலாம். இத் துறையில் கூட்டுறவுச் சங்கங்களின் கடமை குறிப்பிடத்தக்கது. கட்டடங்கள், வீதிகள் அமைத்தல் போன்ற அபிவிருத்தி வேலைகளைக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களே பொறுப்பேற்றுச் செய்தால் தனிப்பட்டவர்கள் கொள்ளை இலாபம் பெறுவதைத் தடுப்பதோடு, சிக்கனமாகச் செலவு செய்வதையுங் கடைப்பிடிக்கலாம்.

இன்னுங் கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றிகரமாகச் சேவையாற்றக் காலத்துக்குக்காலம் கணக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களை முறைப்படி எண்பார்வை செய்துகொள்வது அவசியம். அரசாங்கக் கூட்டுறவுப் பரிசோதகர்கள் இக்கருமத்தை ஆற்றிவந்தாலும் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களும் காலத்துக்குக்காலம் அங்கத்துவ சங்கங்களின் கணக்குகளை எண்பார்வை செய்வதோடு, அங்கத்தினருக்கு விநியோகிக்க, வழங்கும் பாவனைப் பொருள்கள் சரியான முறையிலே விநியோகிக்கப்படுகின்றனவா என்பதையும் அவதானித்தல் வேண்டும். இவ்வாறு செய்வது கூட்டுறவுச் சங்க வளர்ச்சிக்குத் துணையாக இருப்பதோடு, பொதுமக்கள் இவ் வியக்கத்திலே நம்பிக்கை வைக்கவும் ஏதுவாக இருக்கிறது. எனவே, நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து கூடி வாழ்ந்து நமது கிராமங்களை விருத்தி செய்வதன் மூலம் நாட்டுக்கும் உழைக்கிறவர்களாக கோடி நன்மைகள் பெறுவோமாக.



**திரு. எஸ். முத்தையா அவர்கள்**
காரியதரிசி, வெள்ளிவிழா உபசபை

# சமாசக் கொள்வனவு

திரு. மு. நடராசா அவர்கள்

ஒரு வர்த்தக ஸ்தாபனத்தின் முன்னேற்றம் கொள்வனவிலும் விற்பனையிலுமேயே தங்கியிருக்கிறது. சமாசத்தின் நோக்கங்களில் கொள்வனவும் விற்பனவும் முக்கிய இடம் வகிக்கின்றன. கொள்வனவு, புத்திசாலித் தனத்துடன் திட்டமிட்டுப் பின்னுல் விற்கப் படக்கூடிய ஏதுவைப் பற்றிய ஆராய்வுடனும் செய்யப்படவேண்டும். அப்படிக் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் சந்தை நிலைபரத் திற்குத் தகுந்தபடி வெகுநுணுக்கமான ஆராய் வுடன் விற்கப்பட வேண்டும். அப்படிச் செய் தால்தான் வியாபாரம் பெருகி இலாபம் கூடும். சமாசமும் முன்னேற்றம் அடையும்.

*1963*ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் வலிவடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசத்தின் பொருட் பொறுப்பாள ராகவும் கொள்வனவுகாரராகவும் பதவி ஏற்றேன். கொள்வனவு செய்வதில் பெரும் அவதானம் தேவைப்பட்டது. கொழும்பில் கூட்டுறவு மொத்த வியாபார நிலையம் ஏறக் குறைய சர்வாதிகார ஆட்சிமுறையில் இயங் குவதொன்ருகும். எமது சமாசத்தின் தேவைக்கு வேண்டியபடி ஒரு பொருளைக் கூட்டியோ குறைத்தோ வாங்க முடியாது. அந்த நிறுவனத்தாரின் ஒழுங்குப்படிதான் வாங்கவேண்டும். சில சமயங்களில் சில பொருள்கள் கடைத்தெருவில் விலை ஏற்றமா யிருக்கும். கூட்டுறவு மொத்த நிலையத்தில் குறைவாக இருக்கும். விலை குறைவாக இருப் பதால் அங்கு அப்பொருள்களை வாங்கிய சில மணிநேரத்தில் கூட்டுறவு மொத்த நிலைய விலையிலும் பார்க்கக் குறைந்த விலையில் கடைத்தெருவில் வாங்கக்கூடிய நிலைபரம் ஏற்படலாம். அந்தக் கொள்வனவால் சாதா ரணமாகச் சமாசத்திற்கு நட்டமே ஏற்படும். சில வேளைகளில் உடனுக்குடன் கூடிய இலா பத்துடன் விற்கப்படலாமென நினைத்து வாங் கும் பொருள்கள் பிற வியாபாரியின் தந்திர மான விற்பனை காரணமாகச் சமாசத்தில் விற்பனையாகாது, இருப்பில் இருக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம். பொதுவாகச் சங்கங்கள் சமாசங்களின் வியாபாரத்திற்குத் தனியார் வியாபாரிகள் எப்பொழுதுமே முட்டுக்கட்டை யாக இருக்கிருர்கள். இத்தகைய சூழ்நிலையில் மிக நிதானமாகவும், நுணுக்கமாகவும், புத்தி சாலித்தனமாகவும் கொள்வனவு செய்தால் தான் பிற வியாபாரிகளுடன் போட்டியாக விற்பனை செய்யக்கூடியதாக, அங்கத்துவ சங் கங்களுக்குப் பொருள்களை விநியோகம் செய்ய முடியும்.

பெரிய வியாபார நிலையங்கள் பல சமா சங்களுக்கும் தங்களின் ஏஜெண்டுகளுக்கும் ஒரே விலையில் பொருள்களை விநியோகம் செய்ததின்பின் தங்கள் ஏஜெண்டுகளுக்கு மறைவுக் கழிவு (Hidden Bonus) என்று ஒன்றைக் கொடுக்கிருர்கள். அதன் காரண மாக அந்த ஏஜெண்டுகள் அப் பொருள்களைக் கொள்விலையிலும் பார்க்கக் குறைத்து விற் கிருர்கள். அதனுல் சமாசங்கள் கொள்வனவு செய்த பொருள்கள் ஒன்றில் இருப்பிலிருக்க வேண்டும். அல்லது கொள்விலையிலும் பார்க்கக் குறைந்த விலையில் விற்று நட்டம் ஏற்படும்.

இத்தகைய இக்கட்டுகளுக்கிடையில்தான் சமாசங்களின் கொள்வனவும் விற்பனையும் நடைபெறுகின்றன. வலிகாமம் வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் கொள்வனவும் விற்பனையும் எவ்வளவு தூரம் முன்னேறி உள்ளன வென்பதை அதன் இன்றைய நிலைமையிலிருந்து தெரிந்துகொள் ளலாம். 25 ஆண்டு நிறைவு விழாவை மிகக் கோலாகலமாகக் கொண்டாடக்கூடிய நிலை மைக்கு உயர்ந்துவிட்ட இச் சமாசம் வலி வடக்குப் பகுதிப் பொதுமக்களின் ஆதரவுடன் தன் பொன்விழாவையும் சிறப்பாகக் கொண் டாட ஆண்டவன் அருள்புரிவாராக.

# சமாசமும் தொழிலாளர்களும்

**தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு. த. கனகரத்தினம் அவர்கள்**

இச்சமாசம் 1944ஆம் ஆண்டு இரு பணியாளர்களுடனும் இரு வகுப்புத் தொழிலாளர்களுடனும் 'ஐக்கிய பண்டசாலைகளின் சமாசம்' என்னும் பெயருடன் ஆரம்பமாயிற்று. இன்று 56 பணியாளர்களுடனும் 20 வகுப்புத் தொழிலாளர்களுடனும் 'பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம்' என்னும் பெயருடன் இயங்கி வருகின்றது. ஆரம்பத்தில் 8000 கூப்பனுடன் தொடங்கிய சமாசம் இன்று ஒரு இலட்சத்து ஏழாயிரம் கூப்பன்களையுடையதாக இயங்கிவருகின்றது.

சமாச – நிர்வாகசபையினரின் நிர்வாகத் திறனுடனும் பணியாளரின் இடையறு உழைப்புடனும் வருடாவருடம் சமாசம் பல துறைகளிலும் தொழிலை விருத்திசெய்துவருகின்றது. 3 மொத்த வியாபார நிலையங்களையும் 8 சில்லறை விற்பனை நிலையங்களையும் நடாத்தி வருகின்றது. நுகர்ச்சிப் பொருள்களுடன் புடைவை, இரும்பு, மீன்பிடி உபகரணம், பாண்வியாபாரம் முதலியவற்றைச் செய்து வருகிறது. கொந்தருத்து வேலைகள் பலவற்றைச் செய்துவருவதுடன் இவ் வருடம் மின்தறி நெசவு நிலயமொன்றையும் நடாத்துவதற்குத் திட்டமிட்டு அதற்கு ஏற்ற ஒழுங்குகளையும் செய்துகொண்டிருக்கிறது.

சமாசத்தின் நிர்வாகசபையினர் பணியாளர்களின் தொழிலுக்கேற்பப் பதவிகளை வகுத்துள்ளனர்.

சமாசத்தின் தொழில் வகுப்பினர் :

| | |
|---|---|
| நிர்வாகக் காரியதரிசி | 1 |
| பொது முகாமையாளர் | 1 |
| பொது உதவி முகாமையாளர் | 1 |
| கணக்காளர் | 1 |
| பொருட்பொறுப்பாளர் | 2 |
| கொள்வனவுக்காரர் | 1 |
| கிளை முகாமையாளர் | 8 |
| பிரதம லிகிதர் | 1 |
| சிரேஷ்ட லிகிதர் | 2 |
| லிகிதர் | 4 |
| தட்டெழுத்தாளர் | 1 |
| தொழில் மேற்பார்வையாளர் | 1 |
| ஏவலாளர் | 1 |
| விற்பனையாளர் | 17 |
| காவலாளர் | 2 |
| லொறிச்சாரதிகள் | 5 |
| லொறிக் கிளீனர்கள் | 5 |

சமாசப் பணியாளர்கள் 1964ஆம் ஆண்டு தொடக்கம் 'வலி. வட. பல. நோ. கூ. சமாசத் தொழிலாளர் சங்கம்' என ஒரு சங்கத்தைத் தொடங்கித் தொழிலாளர் மத்தியில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கவும் சமாச வளர்ச்சியைப் பாதுகாக்கவுமாக மாதா மாதம் கூட்டங்களைக் கூட்டி ஏற்ற நடவடிக்கைகளைக் கையாண்டு வருகின்றனர். பணியாளர்கள் சமாச வளர்ச்சிக்குரிய விஷயங்களை ஆலோசிக்குமிடத்துச் சமாசத் தலைவரையும் அவ்வக் காலங்களிற் கூட்டங்களிற் பங்குபற்றச் செய்து அவர்கள் ஆலோசனைக்கேற்ப நடாத்திவருகின்றனர். சமாசப் பணியாளர்கள் கோரும் கோரிக்கைகளையும் நிர்வாகசபையினர் தீர்க்க ஆலோசனைசெய்து அவைகளையெல்லாம் செய்து தருகின்றனர்.

பணியாளர்களுக்குரிய சமயோசித லீவு, வைத்திய லீவு முதலியவைகளையும் தந்து உதவுகின்றனர். ஏனைய சமாசங்களிலும் பார்க்க இச் சமாசத்தால் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகவும் கூடுதலாகவிருக்கின்றது. எமது சமாசத்தில் பணியாளர் பெறும் குறைந்த சம்பளம் 130 ரூபாவாகும். கூடுதலாகப் பெறும் சம்பளம் 750 ரூபாவாகும். வடமாகாணத்தில் உள்ள ஏனைய சமாசங்களுடன் ஒப்புநோக்கின் அச் சமாசங்களிலும் பார்க்க இச் சமாசம் மிகவும் உன்னத நிலையிலிருக்கின்றது. அதுவுமன்றி இலங்கையிலுள்ள மிகவும் சிறந்த சமாசங்களில் இதுவும் ஒன்று எனத் துணிந்து கூறலாம். இத்தகைய வளர்ச்சிக்கெல்லாம் மூலகாரணம் சமாச நிர்வாகமும் பணியாளர்களும் ஒன்று பட்டு நேர்மையாகச் சேவை செய்வதேயாகும்.

மேலும் 'சமாசப் பணியாளர்கள் ஓய்வுகால நிதி' என மாதாமாதம் சம்பளத்தில் ஒரு பகுதியைக் கழித்து சமாசத்தில் வைத்து அத்தொகையுடன் வருடாவருடம் சமாசலாபப் பங்கீட்டில் ஒரு பகுதியைப் பொதுச் சபையின் அனுமதியுடன் சேர்த்து சமாச சேவையிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்குக் கொடுத்துதவ ஏற்ற நடவடிக்கைகளைக் கையாண்டு வருகின்றோம். மேன்மேலும் சமாசம் வளரவும் தொழிலாளர் நலன்பெறவும் ஒன்றுபட்டு உழைப்போமாக.

படித்தீர்களா!

கூட்டுறவின் மகத்தான கருத்துக்களையும்
கூட்டுறவுலகின் செய்திகளையும்
செந்தமிழில் வாரி வழங்கும் திங்களிதழ்

# ஐக்கிய தீபம்

விலை சதம்: 25 வருடச் சந்தா: ரூ. 3-00

★

அழகு கொஞ்சும் ஆங்கிலத்திலும், நெஞ்சை அள்ளும் தமிழிலும்
வெளியாகும் திங்களிருமுறை ஏடு

# கூட்டுறவு

விலை சதம்: 20 வருடச் சந்தா: ரூ. 6-00

★

இவ்வேடுகள் கூட்டுறவு நிறுவனங்கள், பாடசாலைகள் எங்கும்
பொங்கும் அறிவு விருந்து படைத்து வருகின்றன.

**இவற்றில் உங்கள் விளம்பரங்களை வெளியிட்டு நற்பயனை நுகருங்கள்.**

கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சகல புத்தகங்களும் பத்திரங்களும்
எம்மிடம் விற்பனைக்கிருக்கின்றன.

★

# வீரசிங்கம் மண்டபம்

இயல், இசை, நாடக நிகழ்ச்சிகள், திருமண வைபவங்கள், உபசரணைகள்,
அரசியற் தொடர்பற்ற கூட்டங்கள் முதலியவைகளுக்கு
வாடகைக்குக் கொடுக்கப்படும்.

சிறந்த ஆசன வசதிகளும் நவீன மேடை வசதிகளும் கொண்டது
"வீரசிங்கம் மண்டபம்".

## வ. ஐ. மே. சபை,

காங்கேசன்துறை வீதி : : யாழ்ப்பாணம்.

# பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவின் பங்கு

[சமாச வெள்ளிவிழாக் கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவில் முதற்பரிசு பெற்ற கட்டுரை]

**செல்வன் நா. சண்முகலிங்கம், மத்திய மயிலிட்டி ஐ. ப. சாலை**

"பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்று பேசப்படுகின்றது. இன்றைய உலகில் செல்வமில்லாதவன் வாழமுடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. உலகில் எங்கு பார்த்தாலும் பொருளாதாரப் பிரச்சினையை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இன்றைய எமது இலங்கையிலும் இந்தப் பொருளாதாரப் பிரச்சினையைத்தான் நாம் காண்கின்றோம்.

ஒரு நாட்டின் வளம் அந்த நாட்டின் பொருளாதார நிலையினால் தரப்படும். ஒரு நாடு வளம்பெற, அந்த நாட்டு மக்கள் நலமிக்க வாழ்வு வாழ அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி அவசியமாகின்றது. குளிர் நீரால் நடுக்கமுற்ற ஒருவன் எரிகின்ற நெருப்பை நோக்கி ஓடுகின்றான்; அங்கே சுகம் காண்கின்றான். பறக்கின்ற வெய்யிலிலே பரிதவிக்கும் ஒருவன் பாய்ந்தோடிச் செல்கின்றான், குளிர் நிழலை நோக்கி. அங்கே குழுமை தரும் இன்பத்தில் திளைக்கின்றான். இது போலவே ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக அலைபவர்களுக்கு வழிகாட்டுகின்றது கூட்டுறவு. இன்றைய எமது ஈழநாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவு பெரும்பங்கு கொண்டிருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

கூட்டுறவிற்கு வகை செய்த, வழிவகுத்த "றோச்டேல்" முன்னோடிகளின் பாதையை நாம் பார்ப்போமாயின் அங்கே பொருளாதார வளர்ச்சிக்கு கூட்டுறவு எந்த அளவில் உதவியது, உதவுகின்ற தென்பதை நாம் சுலபமாக அறியமுடியும். மிகக் குறுகிய காலத்தில் முன்னேறியுள்ள ஜேர்மனி, சுவீடன், நோர்வே போன்ற நாடுகளிலும் நாம் இதையே காண்கின்றோம்.

கூட்டுறவு முறையினால் எந்த ஒரு கடின வேலையையும் தீர்த்துவிடலாம் என்பதில் எவ்வித ஐயமும் எவருக்கும் ஏற்படாது. அதன் முயற்சியான பொருளாதார வளர்ச்சியும் இத்தகையதே. உணவு உற்பத்தி, கைத்தொழில் அபிவிருத்தி ஆகியவற்றில் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி தங்கியுள்ளது. நாட்டுயர்வு தரும் கூட்டுறவு இயக்கம் விவசாயிகளுக்குக் கடனுதவி மற்றும், விவசாயத்திற்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்துகொடுத்து அவர்களை ஊக்குவித்து நாட்டில் விவசாயம் சிறந்தோங்க வழிசெய்கின்றது. இதனால் நாடு உணவு விடயத்தில் தன்னிறைவு பெறுவதால் வெளிநாடு செல்லும் எமது பணமெலாம் காப்பாற்றப்படுகின்றது; நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சியடைகின்றது. இவ்வண்ணமே குடிசைக் கைத்தொழில், மற்றும் பெரிய கைத்தொழில்களை முன்னேற்றக் கூட்டுறவு இயக்கங்கள் ஊக்குவித்தலை நாம் காண்கின்றோம். அதற்காக நெசவுசாலைகள், மற்றும் பல தொழிற்சாலைகளை நாடெங்கணும் நிறுவியுள்ளனர். அதனால் தொழிற்றுறை முன்னேற நாட்டின் பொருள் நிலை அதிகரிக்கின்றதைக் காண்கின்றோம்.

மீன்பிடித் தொழில் மற்றும் பாற்பண்ணைகள் அமைத்தல் போன்றவற்றாலும் நாட்டின் பொருளாதார நிலையை நாம் வளர்க்கலாம். இன்று பல மீன்பிடி நிலையங்கள், பாற்பண்ணைகள், கோழிவளர்ப்பு நிலையங்களாதியன கூட்டுறவு இயக்கங்களின் மூலமாக நடாத்தப்படுவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இங்கு கூட்டுறவின் பங்கு மிக மிக இன்றியமையாததாயிருத்தலை நாம் காணக்கூடியதாக வுள்ளது.

இன்னும் எத்தனையோ வழிகளிலெல்லாம் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலே கூட்டுறவு பங்குறலாம். நாட்டிலே பல பெரும் தொழிற்சாலைகளை அமைத்து நாட்டிலுள்ள மூலதனங்களின் மூலமாகவோ அன்றேல் வெளி நாடுகளிலிருந்து மூலப் பொருளைப் பெற்று அவை மூலமாகவோ நாட்டின் பொருள் நிலையை அதிகரிக்கலாம்.

பொருளாதார வளர்ச்சியிலே கூட்டுறவின் பங்கு போற்றுதற்குரிய தொன்றாகும். எனினும், புல்லுருவி போன்ற "கள்ளச்சந்தை வியாபாரம்", மற்றும் வெளிநாட்டுப் பொருள் மோகம் என்பன எமது பொருளாதார வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தாலும் அவற்றையெல்லாம் அழித்து நாட்டை வளமாக்கும் பொறுப்பு கூட்டுறவில்தான் இருக்கின்றது. ஒன்றுபட்டால்தான் எமக்கு நல்ல வாழ்வுண்டு; வளமுண்டு. எனவே, நாமெலாம் கூடிவாழ்ந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குதவிய மன நிறைவுடையவர்களாகக் கோடி நன்மை பெறுவோமாக.

"கூட்டுறவே நாட்டுயர்வு"

# சமாச வெள்ளிவிழாப் போட்டிகள்

1. பேச்சுப் போட்டி
2. கட்டுரைப் போட்டி
3. இசைப் போட்டி
4. நடனப் போட்டி
5. நாடகப் போட்டி
6. மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி
7. சைக்கிள் ஓட்டப் போட்டி
8. மரதன் ஓட்டப் போட்டி
9. கயிறிழுவைப் போட்டி
10. விநோத உடைப் போட்டி
11. 100 யார் ஓட்டப் போட்டி.

## இப்போட்டிகளில் இதுவரை நடைபெற்ற போட்டிகளும் பரிசில் பெற்றவர்களும்

### பேச்சுப் போட்டி :

| | | |
|---|---|---|
| | கீழ்ப்பிரிவு : ஆண்கள் | |
| அ. புராந்தகன் | ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி. | முதலாம்பரிசு |
| உ. சேரன் | ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி. | இரண்டாம்பரிசு |
| ஆ. குகானந்தன் | ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி. | மூன்றும்பரிசு |
| | கீழ்ப்பிரிவு : பெண்கள் | |
| நா. உஷாதேவி | ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி. | முதலாம்பரிசு |
| கா. உஷாராணி | ப. நோ. கூ. சங்கம், காங்கேசன்துறை. | இரண்டாம்பரிசு |
| செ. பாலயோகினி | ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி. | மூன்றும்பரிசு |
| | மேற்பிரிவு : ஆண்கள் | |
| நா. சண்முகலிங்கம் | ஐக்கிய பண்டகசாலை, மயிலிட்டி மத்தி | முதலாம்பரிசு |
| வ. குணலிங்கம் | யூனியன் கல்லூரி | இரண்டாம்பரிசு |
| வை. பாலகிருஷ்ணன் | ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி. | மூன்றும்பரிசு |
| | மேற்பிரிவு : பெண் | |
| ந. ஜெகதீஸ்வரி | ப. நோ. கூ. சங்கம், உடுவில். | முதலாம்பரிசு |

### கட்டுரைப் போட்டி :

| | | |
|---|---|---|
| | கீழ்ப்பிரிவு | |
| தி. மனோகரன் | ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி. | முதலாம்பரிசு |
| உ. பாண்டியன் | ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி. | இரண்டாம்பரிசு |
| அ. புராந்தகன் | ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி. | மூன்றும்பரிசு |
| | மேற்பிரிவு | |
| நா. சண்முகலிங்கம் | ஐ. ப. சாலை, மயிலிட்டி மத்தி. | முதலாம்பரிசு |
| வ. குணலிங்கம் | யூனியன் கல்லூரி. | இரண்டாம்பரிசு |
| வை. பாலகிருஷ்ணன் | ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி. | மூன்றும்பரிசு |

### சவாரிப் போட்டி :

| | | |
|---|---|---|
| வே. பிள்ளையார் | உடுவில் | முதலாம்பரிசு |
| ச. திருச்செல்வம் | மயிலிட்டி | இரண்டாம்பரிசு |
| இ. செல்லையா | பலாலி | மூன்றும்பரிசு |

### நாடகப் போட்டி :

| | | |
|---|---|---|
| ப. நோ. கூ. சங்கம், வயாவிளான் – பலாலி தெற்கு | ''கூப்பன் மாஸ் எங்கே'' | முதலாம்பரிசு |
| ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி | ''கோலம்'' | இரண்டாம்பரிசு |
| இளந் தென்றல் மன்றம், சுன்னுகம் | ''பொதுவுடைமை'' | மூன்றும்பரிசு |

மற்றைய போட்டிகள் வெள்ளிவிழா இறுதிநாள் நிகழ்ச்சிகளில் இடம்பெறும்.

# வெள்ளி விழா வாழ்த்துக்கள்

✻

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகக் கண்ணியமான முறையில் நாட்டிற்கு எண்ணற்ற சேவைகளைச் செய்து நன்மதிப்பை நாடெங்கும் பெற்றுவரும்

## வலிகாமம் வடக்கு
## ப. நோ. கூ. சங்கங்களின் சமாசம்

வெள்ளி விழாக் கொண்டாடுவதை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்




மேன்மேலும நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் சேவையில் ஈடுபட்டு எல்லோருக்கும் வாழ்வளிக்க அயராது உழைப்பதற்கு மேற்படி தாபனத்தை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

தரத்தில் சிறப்புமிக்க **மில்க் வைற்** உற்பத்திப் பொருள்களையே பாவியுங்கள்.

மில்க் வைற் நீல சோப் — மில்க் வைற் பார் சோப்

மில்க் வைற் சலவைத் தூள்

மில்க் வைற் மெடிக்கேட்டற் வாசனை சோப்

**மில்க் வைற் என்பது நம்பிக்கையுள்ள ஒரு வியாபாரச் சின்னம்.**

வணக்கம்

## *மில்க் வைற் சோப் தொழிற்சாலை*

**யாழ்ப்பாணம்**

தொலைபேசி: **7233** தந்தி: மில்க் வைற்

# National Diesel Engineers

109, Sivan Temple North Road,

**JAFFNA.**

★

All Major repairs undertaken. Prompt Attention.

Approved Garage for Accident Vehicles

(Ceylon Insurance Corporation)

★

**Importers of Spare Parts & Engines for Motor Vehicles.**

**We wish Valigamam North M. P. C. S. Union Ltd., Chunnakam,**

*A Grand Future on the Occasion of the*

**Silver Jubilee Celebrations.**

# RAJAN IRON WORKS



ELECTRIC WELDERS,

MAKERS OF
IRON WINDOW GRILLS,

GATES, STEEL TRUSSES,

BALCONY RAILS,

SHUTTERS & COLLAPSIBLE
GATES,

TRACTORS CAGE WHEELS,

GARDEN SWINGS ETC.

*Please Contact*

## RAJAN IRON WORKS

*Workshops:*

**Opposite, Old Police Station,**

**ANAICOTTAI**

*Head Office:*

**No. 8, Stanley Road,**

**JAFFNA**

# S. Senathirajah & Sons

20/4, Stanley Road,

**JAFFNA.**

T'Phone : **7192**

*Dealers in all kinds of motor spares & Tyres.*

# ASI HARDWARE STORES

STANLEY ROAD,

**JAFFNA.**

T'Phone : **7017**

*Power of attorney in the name of*

**S. SENATHIRAJAH**

GENERAL MERCHANTS IN HARDWARE & BUILDING MATERIALS.

Specialists in Sanitary Ware,

**GALV. PIPES, FITTINGS ETC.**




## MALAYALAM TOBACCO SALES SOCIETY LTD

★

காரம், மணம், குணம்
நிறைந்தது.

★

உற்பத்தியாளர்கள் :

யாழ்ப்பாணம் மலையாளம்
புகையிலை விற்பனவுச் சங்கம்

தொலைபேசி இல. **543**

---

*With best Compliments*
*from*

# SARATHAS

**MAIN STREET — PETTAH**

T'Phone: **21740**

Branch: **96 — 98**
**YORK STREET, FORT, COLOMBO.**

பலவித கைத்தறி சாறிகள், ஜவுளிகள்

மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

★

# எஸ். ஆர். எஸ்.

## ஜவுளி மாளிகை

216, கே. கே. எஸ். வீதி :: யாழ்ப்பாணம்



கேட்டீர்களா !! — பார்த்தீர்களா !! — உபயோகித்தீர்களா !!

## இல்லையேல் ?

இன்றே வாங்கி உபயோகியுங்கள் எங்களின் 'ரேடியோ' மார்க் சாரங்களை.

★

சாயம்போகாத கண்ணைக் கவரும் டிசைன்களில், நீடித்த உபயோகிப்புக்கு உகந்த எங்களின் 'ரேடியோ' மார்க் சாரங்கள் எங்கும் கிடைக்கும்.

கவனிப்பு

*நீங்கள் தமிழ் நாட்டிற்குச் சென்றால் பட்டு, ஜவுளி, அமெரிக்கா சேட்டிங் ரகங்களுக்குப் பெயர்போன எங்களின் கீழ்ககண்ட ஸ்தாபனங்களுக்கு மறவாமல் விஜயஞ் செய்யுங்கள் :*

கே. எஸ். பி. பாலகிருஷ்ணன் & கோ.
அம்மையப்பன் ; காஞ்சிபுரம் ; சென்னை.

சரஸ்வதி ஜவுளி ஸ்ரோர்ஸ்
கிருஷ்ண சில்க் பெலஸ், பஜார் வீதி,
விஜயபுரம், திருவாரூர்.

கே. எஸ். பி. பாலகிருஷ்ணன் & கோ, 134, 2ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு.

T'grams: 'KAEYES-MARK' T'phone: 6452

சிக்கனமான செலவில் சிறப்பாக வாழ்வதற்கு

*இணுவில்*

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கூட்டுறவு நாட்டுயர்வு

* உண்ணவேண்டிய உணவுப் பொருள்கள்.
* உடுக்கத் தேவையான எல்லாவித புடைவை வகைகள்.
* கைத்தறிப் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் சிறந்த துணி வகைகள்.
* பாடசாலைக்குரிய புத்தகங்கள் உபகரண வகைகள்.
* விவசாயத்திற்குத் தேவையான கடன் வசதிகள், கிருமி நாசினிகள், பசளைகள், தெளிகருவிகள் மற்றும் நீர் இறைக்கும் யந்திர வகைகள்.
* சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான பாண், பணிஸ், விஸ்கோத்து வகைகள்.

*வேறு என்ன வேண்டும்?*

* சேமிக்க வேண்டுமா?
* குறைந்த வட்டியில் கடன்பெற வேண்டுமா?
* நகை அடைவுமூலம் கடன்பெற வேண்டுமா?

*யாவற்றிற்கும் நிகரற்ற ஸ்தாபனமாக விளங்குகிறது*

**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இணுவில்.**

*Wishing All Prospects*

*on the eve of*

**The Silver Jubilee Celebrations**

*of the*

*Valigamam North M. P. C. S. Union Ltd.,*

*Chunnakam.*

★

**N. M. Sultan Mohideen Hadjiar & Bro.**

**Importers, Exporters, Wholesale & Retail Merchants,**

**123, 125. & 143. K. K. S. ROAD.**

**JAFFNA.**

T'phone: **531** T'grams: **ENEMES**

# உங்கள் சகல தேவைகளுக்கும்

# எங்களிடம் வாருங்கள்!

★

ஏஜென்ட்ஸ் → I. C. I. உற்பத்திகள்,

ஜோன்சன் அன் ஜோன்சன் உற்பத்திகள்,

ரோமர் இனிப்புகள்,

ஹனிபெக் ஜாம், பழரச பானங்கள்,

மற்றும்

பல உற்பத்திப் பொருள்கள்.

★

சைக்கிள் உறுப்புகள், ← விநியோகஸ்தர்

மோட்டார் உறுப்புகள்,

ஹம்பர் சைக்கிள்கள்,

பரிசுப் பொருள்கள்,

சைக்கிள், மோட்டார் டயர்கள்

மற்றும் பல.

★

**சின்னத்துரை ஏஜென்சீஸ் அன் டிஸ்றிபியூட்டர்ஸ்**

25, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்

Tel. No. 284



பி. ஸி. ஸி.
சவரின் பார் சோப்

சவரின் பார் சோப்
உபயோகித்தால்
என்ன தூய்மை!
எவ்வளவு சுலபம்!

சவரின் பார் சோப் தரும் சக்தி நிறைந்து நீடிக்கும்நுரை. சலவை செய்யும்போதும், வீட்டு உபயோகத்தின்போதும் அழுக்கையும் எண்ணெய்ப்பற்றினையும் எவ்வளவு விரைவாக அகற்றிவிடுகிறது அதனால், கழுவுவதும் சலவை செய்வதும் எளிதாகிவிடும்; சிக்கனமாகவும் இருக்கும். கெதியாய்த் தேய்ந்துகரைந்து போகாமலிருக்கும் சவரின் பார்சோப் நீடித்து நின்றுழைத்து நன்கு சுத்தம் செய்கிறது.

மாசுமறுவின்றிச் சுத்தம் செய்வதே அதற்கு மங்காத புகழைத் தருகிறது.




எளிதாகக் கழுவுவதற்கும் சலவை செய்வதற்கும் எப்பொழுதும் சவரின் பார் சோப்பினையே உபயோகியுங்கள்.

# சவரின் பார் சோப்

# யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி

* நமது நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாக
விவசாயம் விளங்குகிறது.

* கூட்டுறவு மூலமாக உற்பத்தியைப் பெருக்குவோம்.

* நாட்டின் நலனைப் பேணுவோம்.

இந் நற்பணியில் எங்கள் வங்கிக்குள்ள பொறுப்பை முற்றும் உணர்ந்தே எங்கள் வங்கி இச் சேவையில் ஈடுபட்டுள்ளது.

அதற்குதவியாக உங்கள் பணத்தை

## யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியில் சேகரியுங்கள்.

நிலையான வைப்பு : நிலையாக வைக்கும் வைப்புகளுக்கு, வட்டி முறையே $1\frac{1}{2}$ வீதம், $2\frac{1}{2}$ வீதம், $3\frac{1}{2}$ வீதம் ஆகும். 5 வருடங்களுக்கும் அதற்கு மேலும் நிலையாக வைக்கும் பணத்திற்கு 4 வீதமும், 10 வருடங்களுக்கும், அதற்குமேலான கால வைப்புக்கும் வட்டி 4 வீதமும் கொடுக்கப்படும்.

சேமவைப்பு : சேமவைப்பிற்கு 5 வீத வட்டி வழங்கப்படுகிறது. இவ் வைப்பிலிருந்து நாளாந்தம் பணத்தை எடுப்பதற்கு வசதி உண்டு.

நகை அடைவு பிடித்தல் : வங்கியில் எல்லாக் கிளைகளிலும் நகை அடைவு பிடிக்கப்படுகின்றது, வட்டி 10 வீதம். எடுத்த பணத்தைப் பகுதி பகுதியாகவும் திருப்பிச் செலுத்தலாம்.

கிளைகள் : யாழ்ப்பாணம், பரந்தன், சுன்னாகம், சங்கானை, பருத்தித்துறை, நெல்லியடி, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, வலி–வடக்கு ஆவரங்கால் முதலிய இடங்களில் உண்டு.

தலைமைக் காரியாலயம் :

59, பிரதான வீதி : : யாழ்ப்பாணம்

# RAJU STORES

67 & 69, Kasthuriar Road,

**JAFFNA.**

★

Our best wishes on the occasion of the
SILVER JUBILEE CELEBRATIONS
of

**Vali-North M. P. C. S. Union,**
**Chunnakam.**

# Vasantha Textiles

42, COLLEGE ROAD,

**JAFFNA.**

★

With best wishes on the eve of the
SILVER JUBILEE OF THE

**Valigamam North M. P. C. S. Union Ltd.,**
**Chunnakam.**

# A. VYTHIALINGAM & Co.

No. 45. K. K. S. ROAD,

JAFFNA.

★

IMPORTERS & EXPORTERS,

GENERAL MERCHANTS

& COMMISSION AGENTS.

★

Telephone: **663**

Telegrams: "**SIVASAKTHI**"

# LEYDEN INDUSTRIES

7, Hospital Road,

JAFFNA.

★

*Manufacturers of*

BANIANS & SOCKS.

Tel. No. **279**

# S. V. முருகேசு

154, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

மொத்த சில்லறை விற்பனையாளர்

## வலி - வடக்கு
## ப. நோ. கூ. சங்கங்களின்
## சமாசத்திற்கு
எமது நல்வாழ்த்துக்கள்.

தொலைபேசி : **564**

# JAFFNA MOTORS

**91, CLOCK TOWER ROAD,**

**JAFFNA.**

வலி-வடக்கு ப. நோ. கூட்டுறவுச் சங்க சமாசத்தின்

**வெள்ளிவிழாவுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்**

# M. M. MUTTIAHPILLAI

81, KATHIRESAN STREET,

**COLOMBO.**

*

COIR MERCHANT,

**IMPORTER & EXPORTER,**

**Dealer in** COIR YARN, COIR ROPES, ETC.

# "ELEPHANT"

## Asbestos Cement
## Builders' Requisites

*

A complete range available
from all dealers

*

Flat sheets, 4′ × 4′, 6′ × 3′ & 6′ × 4′
Roofing sheets, in 3 profiles, in all lengths.
Rainwater goods.
Ridges.
Northlight Curves.
Cowl Type Ventilators.
Extractors, Etc.,

*

*Manufactured by :*

**Asbestos Cement Industries Ltd.,**

**ARMOUR STREET — COLOMBO 12**

# Fareena Garment Industries

**High Class Readymade Garments in Wholesale & Retail.**

*Prop:* **M. A. CAREEM**

24/1, GRAND BAZAAR,

**JAFFNA.**

*With our*

*Best Compliments.*

தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

வியாபாரிகளே ! பாவனையாளர்களே ! !

பாவித்துப் பயன் பெற்றுவிட்டீர்களா ?

கொள்முதல் செய்து தகுந்த இலாபம் பெற்றீர்களா ?

**முத்தூஸ் போட்டோ சாரங்கள்**

பாட்டாளி முதல் பணக்காரர்வரை பாவிக்கும் பாங்கான சாரங்கள்

உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்

***நாகமுத்து அன் சன்ஸ்***

(அனுமதிபெற்ற அடைவு நகைக்காரரும் தரகரும்)

111, இரண்டாம் குறுக்குத் தெரு,

**கொழும்பு - 11.**

# E. B. Creasy & Company Ltd.

55/57, QUEEN'S STREET,

COLOMBO - 1.

T'phone: 21311 — 21314 T'gram: 'CRESCO'

இலங்கையில் எல்லாவிடங்களிலும் சவாரி செய்வதற்கு

இணையற்ற சயிக்கிள்

## ரேட்மாஸ்டர்

திரும்பவும் பெறக்கூடியதாக விருக்கின்றன.

இன்னும்

## கீரே சயிக்கிள்கள்

18″ ஆண்கள் சயிக்கிள்
18″ பெண்கள் சயிக்கிள்
16″ மாணவர் சயிக்கிள்
14″ பாலர் சயிக்கிள்

ஏக விநியோகஸ்தர்கள் :

## ஈ. பீ. கிறீசி அன் கோ. (வரையுள்ளது)

55 / 57, இராணி வீதி,

கொழும்பு - 1.

*For*

Silk, Cotton,

Quality Textiles

and

**Bridal Requirement**

*visit*

↓

# MUNEER'S

79, 81, K K. S Road : **JAFFNA**

எமது

## வெள்ளி விழா

## வாழ்த்துக்கள்

# P. M. MOHIDEEN

— GENT'S TAILORS —

**No. 7, GRAND BAZAAR,**

**JAFFNA.**

வலி. வடக்கு ப. நோ. கூ. சங்க சமாசத்தின்

## 25 வருட சேவையை

## மொழியரசி அச்சகம்

பாராட்டித் தனது **வாழ்த்துக்களைத்** தெரிவித்துக் கொள்கிறாள்.

கடந்தகாலம் போலவே இனிமேலும் சமாசத்தின் சேவையிலும் வளர்ச்சியிலும் மொழியரசி தன்னாலான உதவிகளைச் செய்யக் காத்திருக்கிறாள்.

**எந்தவித அச்சுவேலையும் சிறந்த முறையில், குறைந்த செலவில் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறாள்.**

# மொழியரசி அச்சகம்

அளவெட்டி

## வலி – கிழக்கு ப. நோ. கூ. சங்கங்களின் சமாசம்

(வரையுள்ளது)

தொலைபேசி : 801 கோப்பாய் முகவரி: நீர்வேலி

### சிக்கனமானதும் தரமானதுமான

- உணவுப் பொருள்கள்
- விவசாயப் பொருள்கள்
- துணிவகைகள்
- வீடு அமைக்க வேண்டிய பொருள்கள்
- மோட்டார் வாகன ரயர், ரியூப்புகள்

முதலியனவும் வேறு பொருள்களும் பெற்றுக்கொள்ளலாம்.

*கொழும்புக்கு லொறிமூலம் பொருள்களை ஏற்றி இறக்கும் வசதி எந்நேரமும் செய்து கொடுக்கப்படும்*

நேரிலோ, தொலைபேசி மூலமோ, கடித மூலமோ தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்ய ஷ சமாசத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

### கூட்டுறவு நாட்டுயர்வு

தேசத்தின் சேவையிலுள்ள

# கா ங் கே ச ன்

## உயர்தர போட்லாந்து சீமெந்து

★

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில்
உற்பத்தி செய்யப்பட்டது.

★

**இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்**

சுதந்திரச் சதுக்கம்

**கொழும்பு 7**

வீடு கட்டுங்கள்

தேவையான சகல பொருள்களுக்கும்
விஜயம் செய்யுங்கள்.

## ஸ்டீல் சன்ஸ்

287, 289, ஸ்ரான்லி வீதி : : யாழ்ப்பாணம்

தொலைபேசி : **7035**



வலிகாமம் வடக்கு பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

## போக்குவரத்து சேவை

சுன்னுகத்திற்கும் கொழும்பிற்குமிடையில் லொறிப் போக்குவரத்துச் சேவை
மிக ஒழுங்காக நடாத்தப்படுகிறது.

விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்

★

## கொந்தருத்து

அரசாங்க திணைக்களங்களினதும், தலதாபனங்களினதும்
கட்டிடக் கொந்தருத்துகள் எடுக்கப்பட்டுப் பூரண திருப்திகரமாகக்
கட்டிக் கொடுக்கப்படுகிறது.

கட்டிடங்கள் கட்ட விரும்பும் ஐக்கிய ஸ்தாபனங்கள், பொது நிலையங்கள்
உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளவும்

உங்களுக்குத் தேவையான,

* பரிசில் பொருள்கள் — எவசில்வர், கிளாஸ், மாபிள் வகைகள்.
* அசல் தங்க நகைகளுக்கு நிகரான 5 வருட உத்தரவாதமுள்ள நவீன டிசைன்களில் நகைகள்.
* மின்சார உபகரணங்கள் — எலக்றிக் கீற்றோர்ஸ் — கெட்டில்கள், இஸ்திரிப்பெட்டிகள் — விசிறிகள் . . .
* சகலவிதமான வீட்டுப் பாவனைப் பொருள்கள்
* விளையாட்டுப் பொருள்கள்.

மற்றும் சகல பொருள்களையும் மலிந்த, தரமிக்க, சிறந்ததாக ஒரே இடத்திற் பெறுவதற்கு

## இன்றே விஜயம் செய்யுங்கள்

# முகமதலி அப்துலலி

5 & 7, கிருன்ட்பஜார்

**யாழ்ப்பாணம்**

பலவருட சேவையுள்ள போக்குவரத்துச் சேவையாளர்

*தந்தி :* " **சைபி** " போன் : **515**

*கிளை:* 81, பழைய சோனகதெரு, கொழும்பு – 12.

*தந்தி :* " **பாவலா** " போன் : **33569**

25ஆவது வருட நிறைவு விழாவைக் கொண்டாடும்

வலி - வடக்கு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு

எங்களின் உளம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

# கலா ரேடிங் கோ.

(மொத்த ஜவுளி விற்பனையாளர்கள்.)

கூட்டுறவுச் சமாசங்களின் தேவைக்குத் தகுந்தபடி
புடைவை ரகங்களை உடனுக்குடன் கவனித்து
விசேஷ கழிவுடன் கொடுக்கப்படும்.

# Kala Trading Co.

WHOLESALE TEXTILE DISTRIBUTORS,

134, SECOND CROSS STREET,

COLOMBO 11.

*For All Your Requirements*

in

LATEST AND FANCY NYLON MATERIALS FOR

**SAREES, BLOUSES, DRESSES,**

**SHIRTS, ETC.**

TRICOT NYLON LACES
AND FANCY NYLON LACES FOR

**BLOUSES AND CHILDREN'S DRESSES.**

**'CYNTEX' TETRON SUPER SUITINGS**
**& TETRON SUITINGS.**

★

Visit :

# FERNANDO COMPANY

(LARGE DISTRIBUTORS OF TEXTILES AND READYMADE GOODS.)

*Special Discount to Trade and Co-operative Unions, Etc.*

131, SECOND CROSS STREET,

**COLOMBO 11**

Telephone No. **27443** Telegrams : **"HELENLUC"**

# K. K. Krishnapillai & Co.

171, 4th Cross Street,

**COLOMBO.**

T'phone : **29325** T'gram : **"BAKTHAN"**

★

# கு. கி. அன் கோ.

இறக்குமதி ஏற்றுமதியாளரும்
மொத்த வியாபாரியும்.

★

**எமது நல்வாழ்த்துக்கள்.**

# Ramson Harbware Enterprice Limited

**OLD MOOR STREET,**

*T'phone* : **31511** **COLOMBO.**

**HARDWARE MERCHANTS**

*Dealers in*

**ALL BUILDING MATERIALS.**

*Wishing*

## Valigamam North M. P. C. S. Union Ltd.

CHUNNAKAM,

All Success.

# T. A. MOHAMED MEERA SAHIB & CO.

19, OLD MOOR STREET,

COLOMBO 12.

Tel. No. 34379 T'grams: 'TEEYAYEMCO'

## Arecanut Merchants & Rice Commission Agents.

# தெ. அ. மு. அன் கோ.

பாக்கு, அரிசி வியாபாரிகள்,

உள்ளூர் உற்பத்திப் பொருள்களின்

மொத்த வியாபாரிகள்.

19, பழைய சோனகதெரு :: கொழும்பு 12

# Sellamuttu's

FOR THE BEST SELECTION OF

## Sarees
## Suitings & Dress Materials.

*Special offer of*

**MANHATTAN SHIRTS**

**SELLAMUTTU'S**

130, Second Cross Street,

**Pettah, Colombo 11.**

T'Phone: **24143** T'grams: **'SIVENDRA'**

**Valigamam North M. P. C. S. Union Limited**

**CHUNNAKAM**

வலி-வடக்கு ப. நோ. கூ. சங்கங்களின் சமாசம்

**25 வருட ஜுபிலிக்கு**

எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

## எம். எம். முத்துவாப்பா அன் சன்ஸ்

79, கெய்சர் வீதி,

கொழும்பு 11.

பிரசித்திபெற்ற நூல், ஊல், பட்டன் முதலிய

தையல் உபகரணங்கள்

இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்.

தொலைபேசி: **24619** தந்தி: **'LEAD'**

கூட்டுறவு நாட்டுயர்வு

மலிவான விலையில் திறமான பொருள்கள்

**கிடைக்குமிடம்**

# அளவெட்டி ப. நோ. கூ. சங்கம்

## இதன் ஒரு நோக்கு நேர்மை

- பண்டசாலைகள் (ஐந்து கிளைகள்)
- நில நெய் விற்பனை
- புடைவைப் பகுதி
- கைத்தறி நிலையம்
- அடைவு கடை
- இரும்புக் கடை
- கூடை உற்பத்தி
- விளைபொருட் பகுதி
- பாலர் வகுப்பு

ஒப்பந்த வேலைகளும் உரியகாலத்தில் திறமாக முடித்துக் கொடுக்கப்படும்.

*கூட்டுறவு இயக்கத்தையே ஆதரியுங்கள்*

*We are :*

**AGENTS OF CEYLON PETROLEUM CORPORATION & PEOPLES BANK**

இதமான புகைக்கு

# பாலக்காடு

# ஆர். வி. ஜி.

## பீடிகள்

♣

தயாரிப்பாளர் :

## வ. வ. இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்

47, பீச் ரோட்,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : **230**

தந்தி : 'ஆர்விஜி'

கிளை : 34, மானிப்பாய் ரோட்டு, யாழ்ப்பாணம்.

# வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வரையுள்ளது)

**VALIKAMAM NORTH MULTIPURPOSE CO-OPERATIVE SOCIETY UNION LTD.**

நுகர்ச்சிப் பொருள்களா? ஆடம்பரச் சாமான்களா?
மோட்டார் ரையர்களா? பீங்கான் வகைகளா?
மோட்டார் வள்ளங்களின் உதிரிப்பாகங்களா?

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.

மொத்த நிலையம்

சுன்னாகம் தெல்லிப்பழை

கூட்டுறவு நாட்டுயர்வு

சில்லறை நிலையம்

★ கீரிமலை ★ மயிலிட்டி ★ தெல்லிப்பழை ★ சுன்னாகம்

புடைவை வியாபாரம்: சுன்னாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி

சமாசப் பாண் பேக்கறியைப் பார்வையிட்டீர்களா?
சரியான நிறை! குறைவான விலை!! திறமான பாண்!!!
● பிஸ்கட்டுகள் ● கேக்குகள் ● போண்டா வகைகள்
ஒடருக்கு எந்த நேரமும் கிடைக்கும்

காலந்தவறாத சிறந்த ஒப்பந்த வேலைகளுக்குப் பாராட்டுப்பெற்றது எங்கள் சமாசம்

சமாச லொறிகள் பொருள்களைப் பாதுகாப்பாகக் கொண்டுசெல்ல நல்வாய்ப்பளிக்கும்

நேர்மை! நிதானம்! கண்ணியம்! காலம் தவறாமை!
எமது இலட்சியம்

கூட்டுறவை ஆதரித்து நாட்டுயர்வு காண்பீர்!


திருமகள் அழுத்தகம், சுன்னாகம்